93

[illegible]

[illegible]

[illegible]

தொகுதி – 29 மலர் – 2

ஜூலை 1992

D
371.3:N92
V92.29.2
54947

வெளியீடு 7-1-1993

Issued 7-1-1993

10 செப்
777/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 22, 1992-தொகுதி 29 எண். 2
Tuesday, the 22nd September 1992 - Volume 29 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3—00]

Price Rs. 3-00

## உள்ளடக்கம்

**22-9-1992**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்:—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 137–176 |
| **2. அறிவிப்பு—** | |
| உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து. | 177–178 |
| **3. சிறப்புக் குறிப்புகள்—** | |
| (அ) காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுவது குறித்து. | 178–19 |
| (ஆ) பொங்கலூருக்கு அருகில் தொட்டம்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட லாரி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து. | 190–19 |
| (இ) மேல்நிலைப்பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து. | 197–20 |
| **4.** ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு "எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க." என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து—பேரவைத் தலைவரின் தீர்ப்பு. | 205-20 |
| **5. கவன ஈர்ப்பு—** | |
| பேராவூரணி—வெட்டன்விடுதி சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து. | 206–20 |
| **6. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு .. .. .. | 208–2 |

7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— பக்கங்கள்.

(அ) அடகு பிடிப்போர் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 209

(ஆ) நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992. 210

(இ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1992. 210–211

(ஈ) வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 211–212

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992. 212–246

(ஆ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 1992. 246–259

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள். 259–261


164947

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**புரட்டாசி 7, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.**

**1992 செப்டம்பர் 22, செவ்வாய்க்கிழமை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்''

கேட்பவர் பலரும் வெறுத்துச் சினங் கொள்ளும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லிக் கொண்டே இருப்பவர், பிறர் எல்லோராலும் எப்பொழுதும் எள்ளி நகையாடப்படுவர்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### குறிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 21, திரு. டி. எம். ரங்கராஜன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

21—

**கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான குளத்தைச் செப்பனிடல்.**

*384—திரு. டி. எம். ரங்கராஜன்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மைலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தைச் செப்பனிட்டு தெப்பத் திருவிழா நடத்தவும் அதன் அருகாமையில் உள்ள முழுமையாகச் செப்பனிடப்படாமல் இருக்கும் சித்திரைக்குளத்தை செப்பனிடவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 செப்டம்பர் 22

(அ) மற்றும் (ஆ): மைலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தை செப்பனிட்டு, தெப்பத்திருவிழா நடத்தும் பொருட்டு 35 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது திருப்பணி வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. மைலாப்பூர் சித்திரைக்குளத்தை சீரமைக்கும் நடவடிக்கைகளும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கயிலையே மயிலை, மயிலையே கயிலை" என சைவர்களாலும், வைகுண்டமா, வேங்கடமா, அதுவும் "வங்கக் கடல் கடைந்த மாதவன்" உறையும் திருமயிலை என வைணவர்களாலும் போற்றப்படும் திருமயிலைதான், திருவள்ளுவரின் அவதார ஸ்தலம். முதலாழ்வார்களிலும் இளையவரான பேயாழ்வாரின் அவதார ஸ்தலமும் திருமயிலையே. அப்பர், சம்பந்தர், அருணகிரிநாதர் இவர்களால் பாடல் பெற்ற ஸ்தலம் திருமயிலை. அன்மதத்தையும் தன்னகத்தே கொண்டது திருமயிலை. அம்பிகை மயில் ரூபம் கொண்டு வழிபட்ட கபாலீஸ்வரருக்கு திரேதாயுகத்திலே ஸ்ரீ இராமபிரான் தெப்பத் திருவிழாவும், பிரம்மோற்சவமும், இலங்கையிலிருந்து திரும்பியபோது நடத்தியதாகப் பிரம்மாண்ட புராணம் கூறுகிறது. அதன் பின் பல யுகங்களுக்குப் பின்னால், தற்போது—கலியுகத்திலே, கபாலீஸ்வரருக்கும் இராமபிரான் நடத்தியது போன்று, தெப்பத் திருவிழா காண இருக்கின்ற நம்முடைய ஒப்பற்றத் தலைவியாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சார்பாகவும் தொகுதி மக்கள் சார்பாகவும், ஆஸ்தீகப் பெருமக்கள் சார்பாகவும், என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, அத் திருக்கோயிலினுடைய சுற்றுப் பகுதியைத் தூய்மைப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குளத்திற்கு 35 இலட்சம் ரூபாய் செலவு செய்து இதைச் செப்பனிடுகிறோம் என்று சொன்னால் அத்திருக்குளத்தை எதிர்காலத்திலும் தூய்மையாக வைத்துக் கொள்ள என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற்றை இந்த அரசு எடுத்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சி மூலமாகத் திருக்குளத்திற்கு மழை நீரைக் கால்வாய்கள் அமைத்துக் கொண்டு வருவது குறித்தும், திருக்கோயிலைச் சுற்றியுள்ள காய்கறிக் கடைகள் முதலானவற்றை அப்புறப்படுத்தி, அவற்றை மாற்று இடத்தில் அமைப்பது குறித்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தக் குளத்தில் தண்ணீர் இருந்தபோதும்கூட குளம் அசுத்தமாக இருந்ததற்குக் காரணம்—அதனைச் சுற்றியிருந்த காய்கறிக் கடைகள்தான். அழுகிப்போன, கெட்டுப்



1992 செப்டம்பர் 22]

போன காய்கறிகளை அந்த வியாபாரிகள் அப்படியே எடுத்து, குளத்தில் போட்டு விடுவார்கள். எனவேதான், அந்தக் காய்கறிக் கடைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி, மாற்று இடத்தில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்து வருகிறோம். அது மட்டுமின்றி, குளத்தில் உள்ள தண்ணீர் சுத்தமாக இருப்பதற்கு அங்கே Recycling Unit-களை வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதாவது, விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இத்திருக்குளத்தைச் செப்பனிடும் பொருட்டு, பல்வேறு சிறப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இரண்டு அடி உயரத்திற்கு வண்டல் மண் நிரப்பப்படுகிறது. குளத்தின் உள் படுகையில் குழாய்க் கிணறு அமைக்கப்படுகிறது. படிகள் பழுது பார்க்கப்படுகின்றன. குளத்தைச் சுற்றியுள்ள கம்பிகள் பழுது பார்க்கப்படுகின்றன. குளத்தில் ஆறு அடி ஆழத்திற்குத் தண்ணீர் நிரப்பப்படுகிறது. தேங்கிய தண்ணீரைச் சுழல் முறையில் சுத்தம் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது. அதாவது குளத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து, கீழே போடுகிற தரையை ஒரு "ஃபில்டர்" என்ன தரையாக அமைத்து, நான்கு மூலைகளிலும் நான்கு "ரீ சைக்ளிங் யூனிட்"டுகளை வைத்து, அந்தத் தண்ணீர்க் குழாய் வழியாகப் பாய்ந்து, "ரீ—சைக்ளிங் யூனிட்" டுகளில் சுத்தப்படுத்தப்பட்டு, மீண்டும் குளத்திற்கே வரும். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 9-35

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணன் கீதையிலே கூறுகிறபோது, "தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே" என்று சொன்னார். தர்மங்கள் அழிந்து, அதர்மங்கள் தலை தூக்குகிறபோது, நான் அவதார புருஷனாக அவதரித்து தர்மத்தை நிலைநாட்டுவேன் என்று கூறிய கண்ணனுடைய வார்த்தைகளுக்கேற்ப, தற்போது தமிழகத்திலே இருக்கிற அனைத்துக் கோயில்களையும் புனருத்தாரணம் செய்கிற வகையிலே நம்முடைய ஒப்பற்ற தலைவியாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மயிலாப்பூர் திருக்கோயிலைச் சார்ந்த தெப்பக்குளத்தை அவர்கள் செப்பனிடுவது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, சென்னை மாநகரிலே நுங்கம்பாக்கத்திலே உள்ள அகஸ்தீஸ்வரர் பெருமாள் திருக்கோவில் இன்றைக்கு ஆக்கிரமிப்புக்குள்ளாகி உள்ளது. அதே போன்று, கங்காதீஸ்வரர் கோயில் தெப்பக் குளமும் செப்பனிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கராஜன், இது கபாலீஸ்வரர் கோயிலைப் பற்றியது; மற்ற கோயில்களைப் பற்றியும் உங்களுடைய துணைக் கேள்வியில் இருக்குமானால், அதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் உங்களுக்கு நேரடியாகப் பதில் கிடைக்கும்.

[1992 செப்டம்பர் 22

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த திருக்கோயில் குளங்கள் செப்பனிடப்பட வேண்டுமோ, படிப்படியாக அவற்றையெல்லாம் செப்பனிட வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. படிப்படியாக அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான ஒரு கேள்வியைக் கேட்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் கேட்கவில்லை. இந்தத் தெப்பத் திருவிழா என்றைக்கு நடத்தப்படும் என்று கேட்பார் என்று எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவர் கேட்காவிட்டாலும் அதற்கான விடையைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். வருகிற 1993ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6ஆம் தேதி தெப்பத் திருவிழா நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர்செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலுள்ள கோயில்கள் அனைத்தையும் தூய்மைப்படுத்தி, ஆங்காங்கு களவாடப்பட்ட சிலைகளை மீண்டும் அங்கே வைப்பதற்கும், சிலைகள் மீண்டும் களவாடப்படாமல் இருப்பதற்கும் பலபாதுகாப்புப் பணிகளைச் செய்துள்ளார்கள். அதேபோன்று நடந்த மகாமகத் திருவிழாவிலே அவர்கள் புனித நீராட, அந்தக் குளத்தைச் சுத்தப்படுத்தியதோடு, அங்குள்ள அமைப்புகள் அனைத்தையும் சுத்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், அதற்கு வேலிகளை அமைத்துக் கொடுப்பதாக அவர்கள் சொன்னார்கள். இதுவரை அந்த வேலிகள் அமைக்கப்படவில்லை. சுற்றி அங்கு காய்கறி மார்க்கெட்டுகள் வந்து அங்கு ஒரு அசுத்தமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கபாலீஸ்வரர் கோயில் தெப்பக்குளத்தைச் சுற்றியிருக்கிற காய்கறிக் கடைகளை அகற்றுவது பற்றிய கேள்வி; அதைக் கேளுங்கள்.

திரு. என். பன்னீர்செல்வம் : அந்தக் குளத்தில் தண்ணீர் விடுவதற்கும், அங்கு வேலிகளை அமைப்பதற்கும், குளத்தைச் சுத்தப்படுத்துவதற்கும் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்பகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்கென ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

மாண்புமித பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.



1992 செப்டம்பர் 22]

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் பல்வேறு கோயில்களுக்கு, பராமரிப்பு வேலைகள், சிறப்பாக நடந்து வருகின்றன. நம்முடைய தமிழகத்திலேயுள்ள கோயில்களினுடைய தெப்பக்குளங்களானது—அதாவது, புனித நீராடுவதற்காக ஒவ்வொரு கோயிலிலும் ஏற்படுத்தப்பட்ட அந்தக் குளங்களாவது, தண்ணீர் வருவதற்கு வழி இல்லாமலும், அதே போல் தண்ணீரே இல்லாமலும் பல்வேறு குளங்கள் இருக்கின்றன. ஒரு காலத்திலே அந்தக் குளங்கள் எப்படி பராமரிக்கப்பட்டு, தண்ணீர் விடப்பட்டனவோ, அதேபோல எல்லாக் கோயில்களின் குளங்களுக்கும் தண்ணீர் விடுவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஏற்படுத்துமா, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னர் இந்தக் குளங்களில் எல்லாம் தண்ணீர் இருந்தது என்று சொன்னால், பெரும்பாலும் 'ஸ்டாம் வாட்டர் ட்ரெயின்ஸ்' வழியாக மழைநீர் வந்து அங்கு தங்குவதற்கு வழிவகை இருந்திருக்கும். காலப் போக்கில் ஆக்கிரமிப்பால், அந்த 'ஸ்டாம் வாட்டர் ட்ரெயின்ஸ்' மூடப்பட்டு, தண்ணீர் வருவதற்கு வழி இல்லாமல் போயிருக்கும். கபாலீஸ்வரர் திருக்கோயில் தெப்பக்குளம் அப்படிப்பட்டதுதான். இப்போது மழைநீர் வருவதற்கு வழி இல்லாமல் போனதால்தான் அங்கே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. இதற்காக ஒரு சிறப்பு முயற்சி எடுத்து நாம் அங்கே, 'Puddle Clay' என்னும் வண்டல் மண்ணை நிரப்புகிறோம். இதற்காக செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரு கிராமத்திலிருந்து லாரிகளில் களிமண் எடுத்து வரப்படுகிறது. இது மிகவும் Costly Method இயற்கையாக 'ஸ்டாம் வாட்டர் ட்ரெயின்ஸ்' வழியாக தண்ணீர் வருவதற்கு வழியிருக்கிற இடங்களில் எல்லாம் அந்தக் கால்வாய்கள் சுத்தப்படுத்தப்பட்டு திருக்குளங்களில் தண்ணீர் நிரப்பப்படும். அப்படியின்றி, செயற்கையான முறையில் தண்ணீர் நிரப்பப்பட வேண்டுமென்றால் அதற்கு Puddle Clay வண்டல் களிமண் நிரப்பப்பட வேண்டும். பின்னர் அதன் மீது மண் போட வேண்டும். செயற்கையான முறையில் தண்ணீர் நிரப்பப்பட வேண்டும். இப்படிச் செயற்கையான முறையில் தண்ணீரை லாரிகளில் கொண்டுவந்து நிரப்ப வேண்டுமென்று சொன்னால், ஓரிரு நாட்களுக்குத்தான் அந்தத் தண்ணீர் சுத்தமாக இருக்கும். பின்னர் அசுத்தமாகிவிடும். அப்படி அசுத்தமாகின்ற தண்ணீரை மீண்டும் சுத்தப்படுத்துவதற்கு Recycling Unit வைக்க வேண்டும். It is a cost prohibitive system அதனால்தான் இப்போது கபாலீஸ்வரர் கோவில் குளத்திற்கு வரும் தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்கு 1 கோடி ரூபாய் இப்போது முதல் கட்டமாகத்தான் செலவு செய்யப்படும்.

35 இலட்சம் ரூபாயை இதற்கு அனுமதித்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல தண்ணீரின்றி இருக்கின்ற குளங்களையெல்லாம் அரசு செலவில் செப்பனிட வேண்டுமென்றால் அது அரசின் நிதி நிலையைப் பொறுத்துத் தான்சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், கபாலீஸ்வரர் கோயில் குளத்தைப் பற்றிக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது, சுற்றியிருக்கக்கூடிய காய்கறிக் கடைக்காரர்கள் அழுகிப் போனதையெல்லாம் போட்டு விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அடுத்து, குளங்களிலே தண்ணீர் இருக்கும்போது பிள்ளையார் சதுர்த்தி வருகின்ற பொழுதெல்லாம் பிள்ளையாரைக் கொண்டு போய் போட்டு குளத்தைத் தூர்த்துவிடுகிறார்கள். எல்லா ஊர்களிலும் இந்த மாதிரிச் செய்கிறார்கள். இதுபோன்று குளங்களைத் தூர்க்கின்ற, தண்ணீரை அசுத்தப்படுத்துகின்றவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரை அசுத்தப்படுத்துகிற ஒவ்வொருவர் மீதும் நடவடிக்கை எடுப்பது என்பது சாத்தியமல்ல. அதனால்தான் இந்தக் குளங்களைச் சுற்றியுள்ள காய்கறிக் கடைகளை அப்புறப்படுத்தி மாற்று இடத்தில் அந்தக் கடைகளை வைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

22 —

## மின்னணு தொழில் நகரம்.

***10568 —திரு. ஆர். பி. பரமசிவம்:**
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

**(அ) சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு தொழில் நகரம் எந்த நிதியாண்டில் முடிவடைந்து உற்பத்தியைத் தொடங்கும்?**





(ஆ) இத்தொழில் நகரில் உற்பத்தி செய்யவிருக்கும் மின்னணுக் கருவிகளின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சுமார் ரூ. 40 கோடி செலவில் ஓர் மின்னணு தொழில் நகரத்தை சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. மேலும் மத்திய அரசு அறிவித்தபடி மின்னணு கணிப்பொறி தொழில் நுட்பவியல் வளாகம் (Electronic Hardware Techn: logy Part) ஒன்றினையும், இத்திட்டத்தின் கீழ் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுமார் 18 மாதங்களில் இத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழில் நகரில் பலதரப்பட்ட மின்னணுக் கருவிகளான கம்ப்யூட்டர்கள், தொலை தொடர்புச் சாதனங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள் Contr؛l Devices போன்றவைகளுடன் பலதரப்பட்ட மின்னணு பாகங்களும் தனியார் கூட்டுத்துறை மற்றும் இணைத்துறை, அதாவது Associate Sectoı நிறுவனங்களால் தயாரிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வத்தினுடைய சீரிய சிந்தனையால் உருவாகிவரும் புரட்சிகரமான திட்டமாகிய சோழிங்கநல்லூர் மின்னணு தொழில் நகரம்—அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது 'முதுமொழி'. ஆனால் எதிர்காலத்தில் மின்னணு இன்றி எதையும் அமைக்க முடியாது என்பது 'புதுமொழி'. எனவே, இது போன்ற சீரிய திட்டத்தினை நமது தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மின்னணு தொழில் நகரம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 40 கோடி ரூபாய்ச் செலவில் இந்த மின்னணு தொழில் நகரம் (Electronic City) அமைக்கப்படவுள்ளது என்று சொன்னேனே, இத்தகைய தொழில் நகரம் தமிழகத்தில் முதன்முறையாக நிறுவப்படுகிறது. இதுவே மிகப் பெரிய Elecironic Ci'y ஆகும். எனவே, இதை முடித்தாலே ஆரம்பத்தில் ஆண்டுக்கு 250 கோடி ரூபாய் விற்பனை இருக்கும் என்றும், சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த Elecironic City நிறுவி முடித்த பின்னர், மற்ற இடங்களில் நிறுவுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தவறு செய்தவன் திருந்தியாகணும், தப்பு செய்தவன் வருந்தியாகணும்' என்ற தாரக மந்திரத்தைக் கையாண்டு வரும் எனது இதய தெய்வம், தென்னார்க்காடு மாவட்டத்திலே தொழிற்துறையில் பின்தங்கிய எனது சின்னசேலம் தொகுதியில் அதற்கு முன்னுரிமை கொடுத்து, இந்த மின்னணு தொழில் நகரத்தைத் துவக்க.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படுமா என்பதற்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது முடிந்து வெற்றிகரமாக நடந்ததற்குப் பின்னர் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் கேட்கிறீர்கள். அது சம்பந்தமான கேள்வியாகக் கேட்கலாம்.

முற்பகல் 9-45

திரு. ஆர். பி. பரமசிவம்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு குட்டி ஜப்பான் நாடாக வளர்ச்சியடைய வேண்டும் என்பது இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய அவா. ஆகவே, இந்தத் தொழில் நகரத்தில் ஜப்பான் நாட்டுடைய அந்தத் தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி அந்தத் தொழில் நகரம் அமைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. இது குறித்து பரிசீலிக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு நகரத்தில் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்பட்டு வரும் குறிப்பாக கிரிட்டிக்கல் கேர் யூனிட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் பிளட் கேஸ் அனலைசர், வென்டிலேட்டர்ஸ் மற்றும் அல்டிரா சோனோகிராம் ஆகிய கருவிகளை உற்பத்தி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னது போல் இந்த எலக்ட்ரானிக் சிட்டியில் கம்ப்யூட்டர்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், அதாவது கண்ட்ரோல் டிவைசஸ் போன்றவைகள், பலதரப்பட்ட மின்னணு பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது எழுப்பியுள்ள பொருட்களை அங்கே தயாரிக்க முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு நகரத்தில் தமிழ்நாடு முழுவதும் படித்து வேலையில்லாதப் பட்டதாரிகளுக்கு அங்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற விதத்தில் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியும், உதவியும் அளிக்கத் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்னணு நகரம் என்பது ஒரு ஸ்பெஷலைஸ்டு பீல்ட். ஏற்கெனவே நான் சொன்னது போல 10 ஆயிரம் பேர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்புள்ளது. எனவே, தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

23—

## பரிசுச்சீட்டு விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம்.

*9942—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகள் (லாட்டரி) விற்பனை குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பரிசுச் சீட்டுகள் விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வழிவகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில பரிசுச் சீட்டுகள் விற்கின்ற அளவிற்கு தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் விற்கப்படுவதில்லை. வெளி மாநில சீட்டுகளில் பல போலிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் வெளி மாநில பரிசுச் சீட்டுக்களை வாங்குபவர்களுக்குப் பரிசுகள் விழுவது இல்லை. அரசியலிலும் பொது வாழ்விலும் பல போலிகளை ஒழித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வெளி மாநில பரிசுச் சீட்டுக்கள் தமிழகத்தில் விற்கப்படுவதைத் தடை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்து அரசு ஆணை எண் 1101, நிதி (பரிசுச் சீட்டு) துறை நாள் 6–10–1989-ன்படியும் அரசு கடித எண் 59482, நிதி'89, நாள் 13–2–1991-ன்படியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி அரசாணையை எதிர்த்து சில தனியார் மற்றும் பிற மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்று தமிழ்நாட்டில் தொடர்ந்து பரிசுச் சீட்டுக்களை விற்பனை செய்து வருகின்றனர். எனவே தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனை எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு, அதற்கேற்றவாறு தக்க நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ளும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் உயிருக்கும் மேலாகக் கருதும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மக்கள் நல்வாழ்வுத் திட்டம் புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம் போன்றவற்றோடு உடல் ஊனமுற்றவர்கள், ஆதரவற்ற பெண்கள் நலத்திற்காக கண்ணைக் கவரும் வகையில் பரிசுச் சீட்டுக்களை அச்சடித்து பிரதி மாதம் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்த அரசு முன்வருமா? அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கும்போது தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்களைச் சேர்த்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டின் மூலம் கிடைக்கின்ற தொகையிலே மிஞ்சுகின்ற தொகை பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே பரிசுச் சீட்டு விற்பனை தமிழகத்தில் ஒரு முனையில் வைத்து விற்கின்றபோது அதற்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்ற போது அந்த விற்பனையைப் பரவல் ஆக்கி பல்வேறு வகையிலும் வைக்கிறபோது நிர்வாகச் செலவு அதிகப்படும். அதற்கான செலவுகள் அதிகமாகும்போது வருமானம்





குறையும். எனவே வெளி மாநிலங்களிலிருந்து வெளியிடப்படுகிற பரிசுச் சீட்டுக்களைத்தடை செய்வதன் மூலம் அதிகமான தொகை தமிழக அரசுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழக அரசுக்கு இருக்கிறது.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆண்டுதோறும் இத்தப் பரிசு சீட்டுக்களால் பெறும் வருமானம் எவ்வளவு? அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்துக்காட்டாக 1989–90ல் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையில் மொத்த வருவாய் 13 கோடியே 16 இலட்சம் ரூபாய். ஆனால் அதிலே நிர்வாகச் செலவு, ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கிற பணம், பரிசுச் சீட்டுகளுக்கு வழங்குகின்ற தொகை ஆகியவைகள் 10 கோடியே 74 இலட்சம் ரூபாய் ஆகிறது. ஆக நிகர வருவாய் 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது. அதிலே இருந்து 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் விற்பனை வரியாக செலுத்தப்படுகிறது. அதேபோன்று 1990–91இல், 18 கோடியே 74 இலட்சத்திற்கு மொத்த விற்பனை. செலவுகள் 15 கோடியே 60 இலட்சம். ஆக நிகர இருப்பு 3 கோடியே 14 இலட்சம் ரூபாய். அதிலே அரசுக்கு விற்பனை வரியாக செலுத்தியுள்ளது 1 கோடியே 65 இலட்சம் ரூபாய். அதே போன்று 1991–92ல் மொத்த விற்பனை 15 கோடியே 32 இலட்சம். செலவு 12 கோடியே 82 இலட்சம். நிகர வருவாய் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய். ஆக அரசுக்கு வரியாக செலுத்தியுள்ளது 1 கோடியே 31 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டிலே கடந்த மூன்று குலுக்கல்களாக இரண்டு ரூபாய் சீட்டுக்கள் விற்கப்பட்டன. அதில் அரசால் விற்கப்படாத சீட்டுகளுக்கு பரிசு விழுந்திருக்கின்றது. பரிசுச்சீட்டுக்கள் வாங்கிய ஏழை மக்கள் இதனால் ஏமாற்றத்தை அடைந்திருக்கிறார்கள். விற்காத சீட்டுக்

களை நீக்கி குலுக்கல் நடத்த வேண்டும். அல்லது அந்த சீரிஸ் ஆஃப் டிக்கெட்ஸ் விற்று முடியும் வரை அடுத்த சீரியலை ரிலீஸ் செய்யாமல் இருப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு கருத்து அரசினிடத்தில் நிலவிவருகிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது நடைமுறைக்கு கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதுகிறேன். அதைப் பற்றி ஆலோசனை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேலும் சிறப்பாகவும், நல்ல முறையிலே யும் விற்பனை செய்து அதன் மூலம் நல்ல வருவாய் திரட்டுகின்ற வழிவகைகளை காணுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வணிக வரிச் செயலாளர், நிதிச்செயலாளர் மற்றும் பரிசுச் சீட்டு இயக்குநர் ஆகிய மூன்று பேர்களையும் கொண்ட குழுவினை அரசு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கையும், பரிந்துரையும் வந்து சேர்ந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 24, திரு. ஏ. எம். பரமசிவன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

24—

<u>வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம்</u>

*9099—<u>திரு. ஏ. எம். பரமசிவன்</u> :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம், சப்-கோர்ட் அமைக்க அரசு நடவடிக்கை எதுவும் இல்லை.

<u>திரு. ஏ. எம். பரமசிவன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் தாலுக்கா ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 7 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அதிலேயும் சுற்றியுள்ள இடங்களில் கிராமப்பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் மதுரை செல்ல வேண்டும் என்று



சொன்னால் அவர்களுக்கு அதிகமான செலவு ஆகின்றது. ஆகவே, வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 6 இடங்களில் சப்–கோர்ட்டுக்கள் இருக்கின்றன. வாடிப்பட்டியில் புதியதாக ஒரு சப்–கோர்ட் அமைக்க வேண்டுமெனில் அங்கே இருப்பவர்கள் மனு செய்ய வேண்டும். போதிய வழக்குகள் இருந்தால் அதைப்பரிசீலனை செய்து உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று நிதி ஆதாரம் சரியாக இருந்தால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதிப்பார்கள்.

<u>திரு. ஏ. எம். பரமசிவன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பிரதிநிதி என்ற முறையில் மக்கள் என்னிடத்தில் சொன்ன கருத்துக்களை, அங்கே இருக்கின்ற கஷ்டத்தின் காரணத்தினாலேயே இந்தக் கேள்வி கேட்கிறேன். ஆகவே, அடுத்த ஆண்டிலாவது சார்நிலை நீதிமன்றம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u> : இதற்கு நான் ஏற்கெனவே விளக்கம் அளித்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 25 திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

25—

<u>பயிர் செய்யும் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.</u>

*9948—<u>திருமதி க. பழனியம்மாள்</u> :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாவுக்கு விடையளிப்பாரா :

புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வரும் விவசாயிகளுக்குபட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம் போக்கு நிலங்களில் பயிர் செய்து வரும் விவசாயிகளுக்கு அந் நிலத்தின் தன்மையைப் பொறுத்தும், ஆக்கிரமிப்பாளர்களின் பொருளாதார நிலையைக் கணக்கிட்டும் இலவசமாகவோ அல்லது நிலக் கிரயத்தை வசூலித்துக் கொண்டோ நில ஒப்படை கள் செய்து வருகிறோம்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் தான் இந்த மாதிரி புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வருகிறார்கள். அந்த நிலங்கள் எந்த வகை புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்கு முன்னு ரிமை வழங்கப்படுகிறது. ஆனால் முன்னுரிமை வழங்குவதற்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலம், அதன் தன்மை எப்படி பட்டது என்பதையும் பார்க்க வேண்டும். காரணம் அதனால் ஏற்படுகிற நஷ்டம் சமுதாயத்திற்குத் தான். ஆக்கிரமிப்பு செய் திருப்பவர்கள் தனிப்பட்டவர்கள் என்றால், அந்த ஆக்கிரமிப் பால் சமுதாயம் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது அல்லது பாதிக்கப்படவில்லை என்பதையும் அரசு பார்க்கிறது. குறிப் பாகச் சொல்ல வேண்டுமேன்றால், நீர் வழி புறம்போக்குகளில் ஆக்கிரமிப்பு செய்வதால்தான் அந்தக் குளங்களுக்கு தண்ணீர் வராமல் போய்விடுகிற நிலையும், பாதிக்கப்படுகிற நிலையும் ஏற்படுகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள். மந்தை புறம்போக்கு என்றால், 100 மாடு கள், 200 மாடுகள், 300 மாடுகள் வைத்திருக்கிறார்கள் என்றால் மாடுகள் மேய இடம் இருக்காது, தங்குவதற்கு இடம் இருக் காது, இப்படிப்பட்ட நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தால், இந்தப்புறம்போக்கு நிலம் சமுதாயத்திற்குத்தேவைப்படும் என் றால் அது அகற்றப்படும்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்த மாதிரி புறம்போக்கு நிலங்களில் தாழ்த்தப் பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் 20 வருடங்களுக்கு மேல் பயிர் செய்து வருகிறார்கள். இத்தனை வருடங்களுக்கு மேல் தாழ்த் தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வந்தால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என் கிற ஒரு முறையைக் கொண்டுவந்து அந்த வகையில் அவர்களுக்கு உதவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டை அளவுக் கோலாகக் கொடுண் கணக்கிடாமல் நிலத்தின் தேவையை ''யார்ட்ஸ்டிக்'' ஆக வைக்க வேண்டும். ஆகவே, ஆண்டைக்கணக்கிடுவது சரியாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. ஆர். இராம சாமி அம்பலம்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கண்மாய் புறம்போக்கு களை இன்றைக்கு தமிழகத்தில் பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்கள். இப்படி ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங் களில் எல்லாம் தண்ணீர் வரத்து இல்லாமல் இருக்கிற காரணத் தினால் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்ததைப் போல ஆக்கிரமிப்பு செய்தவர்களைப் பற்றி எண்ணுகிற அதே நேரத்தில் தனிப்பட்டவர்களால், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவர் களால் சமுதாயத்திற்கு ஏற்படுகிற தீங்கைத் தான் முதலில் அரசு எண்ணிப்பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அது போல ஆக்கிரமிப்புகள் நீர்த்தேக்கங்களை பாதிக்கிற அள வுக்கு, கம்மா புறம்போக்குகளில், மற்றவைகளில், நீர் வரத்துப் பகுதிகளில் செய்யப்பட்டிருந்தால் அவைகளை அகற்ற அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பதற்காகத் தான் அதைப்பற்றி அரசு ஆய்வு செய்து எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்ன சாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட ஏழைகளுக்குத் தான் புறம்போக்கு நிலப் பட்டா வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஒரு சில இடங்களில் வசதி படைத்த வர்கள் கூட ஆக்கிரமிப்பு செய்து, பி. மெமோவும் பெற்று பின்னர் பட்டாவும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருந்தால் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட மாட்டாது என்கிற வரையறையை விதித்து, அதற் கான உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலங்களுக்கு பட்டா கொடுக்கிற போது, ஆதி திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு, சிங்கப்பூர், மலேசியா மற்றும் சிலோன் ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளாக வருகின்றவர்களுக்கு, அப்படிப்பட்ட நிலங்களில் வேலை செய்கிறவர்களுக்கு வரிசை கிரமப்படி கொடுக்கிறோம். அந்த வரிசை மாறியிருக்கிற போது அதை அகற்றுவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

முற்பகல் 10-00.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் சொல்கிறபோது ஆதி திராவிட மக்கள் தான் புறம் போக்கு இடங்களைச் சாகுபடி செய்வதாகச் சொன்னார்கள். அப்படி அல்ல. எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் ஆற்றுப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கில் சாகுபடி செய் கிறார்கள். நீர் பிடிப்பு இல்லாத இடங்களில் யார் சாகுபடி செய்கிறார்களோ அவர்களுக்கு அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு முன்னுரிமை கொடுத்து கால தாமதம் இல்லாமல் பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தபடி ஆக்கிரமிப்பு செய்தவர்களுடைய தகுதியை எண்ணிப் பார்த்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி. சி. புறம்போக்கு என்று சொல்லப்படும் தரிசு புறம்போக்கு நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பட்டா தர வேண்டுமென்ற மரபு இருக்கிறது. ஆனால் இந்த டி. சி. புறம்போக்கில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை பிறர் ஆக்கிரமித்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மீட்டு ஆதி திராவிட மக்களுக்குத் தர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து நடவடிக்கை எடுக்கும்





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தர தாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக் கணக்கான ஏக்கர் எஸ்டேட் வைத்திருக் கிறவர்கள், பக்கத்திலே உள்ள நூற்றுக் கணக்கான ஏக்கர் களை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த நிலங்களை எடுத்து ஏழை எளிய மக்களுக்குப் பட்டா போட்டு கொடுக்கவோ அல்லது அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய சட்ட திட்டப்படி 15 ஸ்டேன்டர்ட் ஏக்கர்தான் ஒருவர் வைத்துக் கொள்ள முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி அரசுக்குச் சொன்னால் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவல் புறமபோக்கு என்று பல இடங்களில் இருக்கிறது. அப்படிப்பட்ட கோவில் புறம்போக்கு நிலங்களை கோவில்களின் பெயருக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு என்று சொல்கிற போது ஆங்கிலேயர் காலத்தில் அதற்கு ஏதாவது ஒரு பெயரைக் குறிப்பிடுவார்கள். சில நேரங்களில் அங்கே செட்டியார்கள் இருந்தால் 'செட்டியார் புறம்போக்கு' என்று சொல்லுவார் கள். ஓரிடத்தில் பிள்ளைகள் இருந்தால் 'பிள்ளை புறம்போக்கு' என்று சொல்லுவார்கள். சில இடங்களில் கோவில்கள் இருந் தால், 'கோவில் புறம்போக்கு' என்று சொல்லுவார்கள். அப்படி பெயரைச் சொல்வதாலேயே அவர்களுக்கு அந்த நிலம் சொந்தமாகி விடாது. கோவில் புறம்போக்கு கோவி லுக்குச் சொந்தம் என்றால், செட்டியார் புறம்போக்கை செட்டியார்களுக்குக் கொடுக்க வேண்டி வரும். எனவே புறம் போக்கு என்றால் அரசாங்கத்திற்குத்தான் சொந்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 26, திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்,

[1992 செப்டம்பர் 22

6—

**தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு புதிய விடுதி.**

*9126 —திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புதிதாக பல்கலைக் கழக மாணவர்களுக்காக விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டி நெறி முறைகளின்படி "கட்டடக் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் நல்கை கிடைக்க பெற்றவுடன் முதற்கட்டமாக ஆடவர் விடுதி கட்டடக்கட்டுமானப் பணிகள் தொடங்கப் பெறும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் தோன்றி ஏறத்தாழ 10 ஆண்டுகளாகியும் இதுவரை அங்கே படிக்கிறவர்கள், ஆராய்ச்சி செய்கிறவர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. உடனடியாக விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டாலும், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு, அதை எந்தக் காலக் கட்டத்தில் முடித்துக் கொடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ.26.67 லட்சமாகும். இதில் மத்திய அரசின் பல்கலைக் கழக மானியக் குழுவின் மானியம் ரூ. 20 லட்சமாகும். தமிழக அரசு ரூ. 6.67 லட்சம் கொடுக்கிறது. அதே போல, சுவடிக் கூடம் கட்ட மானியக் குழு ரூ. 15.27 லட்சமும், தமிழக அரசு ரூ. 5.08 லட்சமும் தர வேண்டும். கலைக்கூடம் கட்டப்படுவதற்கு



1992 செப்டம்பர் 22]

மானியக் குழு ரூ. 24.7 லட்சமும், தமிழக அரசு ரூ. 8.25 லட்சமும் தர வேண்டும். ஆக மொத்தம் தமிழக அரசு இந்த மூன்று திட்டத்திற்கும் ரூ. 20 லட்சம் தர வேண்டும். அதில் ரூ. 17.5 லட்சம் தந்திருக்கிறது. ஆனால் மாணவர் விடுதி கட்டுவதற்கு மானியக் குழுவின் நிதி இன்னும் வந்து சேராத காரணத்தினால், நாம் இன்னும் அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கவில்லை. அவர்கள் சொன்னபடி கட்டிடக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்தக் கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் மொழிக்காக என்று ஒரு பல்கலைக் கழகம் இல்லை. தமிழகத்திலே தான் முதன் முதலில் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மொழிக்காக ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பித்தாலும், அப்படி ஆரம்பித்து பத்தாண்டுகளாகியும் விடுதி இல்லை. விடுதியில்லாமல் மாணவர்கள் தங்கி ஆராய்ச்சிகளை நல்ல முறையில் செய்வதற்கு உடனடியாக அந்த வேலைகளை அரசு துவங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம் தவிர வேறு பல்கலைக்கழகம் இல்லை என்று சொல்வது சரியல்ல. ஆந்திரப் பிரதேசத்திலே தெலுங்குப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதே போல சமஸ்கிருதத்திற்கும் பல்கலைக் கழகம் இருக்கிறது. ஆகவே இல்லையென்று சொல்லிவிட முடியாது. வேறு மொழிகளுக்கும் பல்கலைக் கழகங்கள் இருக்கலாம். அது பற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை. கட்டிடம் கட்டுவதைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 27, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

27—

**அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றுதல்.**

*9555 —திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் உள்ள அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பொதுமக்கள் விருப்பப்படி அதனைத் தவிர்த்து தொடர்ந்து கீழக்கரையில் அரசு மருத்துவமனையாக இயங்கும் வகையில் முடிவெடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புளாணி ஒன்றி யம், கீழக்கரையில் தற்போது வட்டமில்லா (Non Taluk Hospital) மருத்துவமனை உள்ளது. அதை சமுதாய நல நிலையமாக மாற்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இது குறித்து ஆணை விரைவில் வெளியிடப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழக்கரை ஒரு வட்ட அலுவலகம் இல்லாத நகராக இருக்கலாம். ஆனால் 50,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பெரிய நகரம். அதை நகராட்சியாக உயர்த்துவ தாக அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் அங்கே பல ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட அரசு மருத்துவமனை ஒன்றுதான் இருக்கிறது. ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்பது போல இருக்கிற அரசு மருத்துவ மனை அது. எங்கள் இதய தெய்வம் ஆட்சியில் அந்த மருத்துவ மனையை இன்னும் பல படுக்கைகள் கொண்ட ஒரு பெரிய மருத்துவமனையாக உயர்த்தினால் பெருமையாக இருக்கும். அதனை விடுத்து, அதனை டிகிரேட் செய்வது போல், ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றினால், அங்கே தனவந்தர்கள் மத்தியில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு இருக்கிற ஒரே வசதியும் போய்விடும். அதனால் அந்த அரசு மருத்துவமனை யின் சேவை தொடர்ந்து அந்த மக்களுக்குக் கிடைக்காது. அதை மக்கள் சிறப்பாகப் பயன்படுத்துகிற வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் அரசு மருத்துவ மனையாகத் தொடர்ந்து செயல்பட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 50 படுக்கைகள் அந்த மருத்துவமனை யில் இருக்கின்றன. இப்போது சமுதாய நல நிலையமாக மாற்று கிற போது அந்தப் படுக்கை வசதிகள் எக்காரணத்தைக் கொண் டும் குறைக்கப்பட மாட்டாது. அந்த வகையில்தான் முடி வெடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்தப் பகுதியில் இருக் கிற மக்களால் தொடர்ந்து அது அரசு மருத்துவமனையாக இருக்க வேண்டுமென்ற செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்பு மிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எனவே





மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைப் போல தமிழக அரசு – புரட்சித் தலைவியின் அரசு தொடர்ந்து அரசு மருத்துவ மனையாகச் செயல்பட நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 28, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச் சர்.

28 —

மதுரை மருத்துவக் கல்லூரியில் 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' பயன்படுத்துதல்.

*9671 — டாக்டர் மு. காளிராஜன் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் ரூ. 60 லட்சம் மதிப்புள்ள 'எலக்ட்ரான் மைக்ரோஸ்கோப்' ( Electron Microscope ) பயன்படுத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பயன்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி; மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நபர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப் பட்டபின் முழுவதுமாக இக்கருவி பயன்படுத்தப்படும்.

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்ட்ரான் மைக்ராஸ்கோப் 1987-ல் வாங்கப்பட்டும் இன்றுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இந்த எலக்ட்ரான் மைக்ராஸ்கோப் அதிக சக்திவாய்ந்த மைக்ரோஸ் கோப். நமது மாநிலத்தில் முதன்முதலில் மதுரை மருத்துவக் கல்லூரியில் தான் வாங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய மாக்னி பிகேஷன் டைம் என்று சொல்லக்கூடிய அளவு 8.2 லட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டக்கூடிய சக்தி வாய்ந்த மைக்ரோஸ் கோப் ஆக இது இருக்கிறது. வேறு பல இடங்களில் இருக்கிற மைக்ரோஸ்கோப்புகள் பல ஆயிரம் மடங்கு தான் பெரிதாக்கிக் காட்டும். 3 நாட்களில் பிற கருவிகள் மூலம் கண்டுபிடிக்கக்கூடிய

பரிசோதனைகளை இந்த மைக்ரோஸ்கோப் மூலம் ஒரு மணி நேரத்தில் பரிசோதனை செய்துவிடலாம். அந்த அளவிற்கு சக்தி வாய்ந்தது மைக்ரோஸ்கோப். அதை ஆபரேட் பண்ணுவதற்கும் இன்டர்பிரட் பண்ணுவதற்கும் உரிய ஆட்கள் இல்லை என்று கல்லூரி முதல்வர் கூறுகிறார். ஆகவே அதற்குரிய நடவடிக்கை துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலேதான அந்தக் கருவி பொருத்தப் பட்டதாக இங்கே தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அங்கே முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லையேயொழிய ஓரளவிற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் அதற்குத் தேவை. அதை உணர்ந்துதான் அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்து இருக்கிறது. டாக்டர் மீனாட்சிசுந்தரம் அடுத்து ஆர். குருசாமி என்ற இரண்டு பேரும் இந்தப் பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் பயிற்சி பெற்று வந்தவுடன் இது முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 29, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

29 —

அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்தல்.

*10276 — திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளில் குறிப்பாக கிருட்டிணகிரி வட்ட அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) தற்போது 19 (அனைத்து) மாவட்ட தலைமை அரசு மருத்துவமனைகளிலும் இரத்த சேமிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக கிருஷ்ணகிரி வட்ட அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்கனவே அனுமதிக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலே முன்பு இயங்கிக் கொண்டு இருந்த அந்த இரத்த சேமிப்பு நிலையம் இப்போது இயங்காமல் இருக்கிறது. கிருஷ்ணகிரி பகுதியிலே அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சாலைகள் மேடு பள்ளமாக இருக்கின்ற காரணத்தாலும், மலைகள் நிறைந்த மாவட்டமாக இருப்பதனாலும் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த விபத்துக்கள் ஏற்படும்போது அங்கே இரத்தம் கிடைக்காமல் பல உயிர்களை இழக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, இன்றைக்கு இல்லையென்று வருவோர்களுக்கெல்லாம், இல்லையெனாது வாரி வழங்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகின்ற புரட்சித் தலைவி ஆட்சியிலே இரத்த சேமிப்பு நிலையம் மறுபடியும் ஏற்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இரத்த வங்கி அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. சமீபகாலத்திலே ஏற்பட்டு இருக்கின்ற பிரச்சினை நாம் பணம் கொடுத்து நபர்களைப் பிடித்து, அவர்களிடத்திலே இருந்து இந்த இரத்தத்தை சேமித்து வைப்பது என்பது முடியாத காரியம்; அது கூடாது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. காரணம், பல பிரச்சினைகள் அதிலே வருகிறது. நோயாளிகளுக்கு சுத்தமான இரத்தம் கொடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்ற காரணத்தால், யார் விரும்பி வந்து இரத்தம் கொடுக்கிறார்களோ அவர்களை மட்டும் வைத்து அந்த இரத்தம் சேமிக்கின்ற ஒரு நிலையம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல அங்கு ஏதாவது குறைபாடு இருக்குமேயானால் அதை உடனடியாக நிவர்த்திப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி பிறந்த நாளிலே எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக அருமை மாவட்டச் செயலாளர் முனுசாமி அவர்களும் நானும் மாவட்டம் முழுவதும் இரத்த தானம் செய்வதற்கு ஏற்பாடு செய்து

அங்கே இரத்தம் பெற்றுக்கொள்வதற்கு தலைமை மாவட்ட மருத்துவமனையும், வட்ட மருத்துவமனையும் வசதி இல்லை என்ற காரணத்தினால், சென்னையிலே இருந்து மருத்துவர்களை அழைத்துச் சென்று அந்த இரத்தத்தைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதற்கு மேலாக, கிருஷ்ணகிரியிலே இயங்கிக்கொண்டு இருக்கும் பல சமூக சேவை நிறுவனங்கள் குறிப்பாக லைன்ஸ், ரோட்டரி இந்து மிஷன் ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்கள் இரத்த சேமிப்பை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் கொடுக்கின்ற இரத்தத்தை, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பயன்படுத்தும் வகையிலே அங்கே இரத்த சேமிப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்கு உடனடியாக எங்கள் இதய தெய்வம் ஆட்சியிலே ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினர் திரு. முனுசாமி அவர்களும் என்னிடத்திலே பேசியபொழுது இங்கே இருந்து நாங்கள் தனியாக இதற்காக மருத்துவர்களை அனுப்பி வைத்தோம். அதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், எப்பொழுதாவது ஒரு முறை இப்படி ஒரு 50 பேர் 100 பேர் என்று வந்து இரத்தம் கொடுக்கிறார்கள். எனவே, அந்த நேரத்திலே அங்கே இருக்கின்ற ஸ்ட்ரெங்த் போதவில்லை. எனவே அதற்காக, இப்படி வருகிறார்கள் என்பதற்காக ஆண்டு முழுவதும் அங்கே நாம் அதற்கான நபர்களை வைத்துக் கொண்டு இருக்க முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் சில இடங்களிலே வந்து விடுகிறது. இருந்தாலும், கிருஷ்ணகிரியைப் பொறுத்தவரை என்ன தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை நிச்சயமாக அரசாங்கம் மேற்கொள்ளும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

<u>திரு. எஸ். எஸ். ராமசுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த சேமிப்பு வங்கியில் இரத்தம் சேர்க்கும் போது சில நோய்கள், அதாவது எய்ட்ஸ் நோய் எல்லாம் இதன் மூலம் பரவுவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன. அந்த இரத்த சேமிப்பு வங்கியில் அந்த இரத்தத்தை நீங்கள் எடுக்கும்போது அதை நீங்கள் சரியான முறையிலே பார்த்து, எய்ட்ஸ் நோய் எல்லாம் இல்லாமல் வைக்கப்படுவதற்கு அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டு இருக்கிறதா? அந்த மாதிரி நோய்கள் வராமல் இருப்பதற்கு முன்னெச்சரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-15

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நோய்கள், பெரும்பாலான நோய்கள் ரத்தத்தின் மூலமாக பரவுகின்றன என்ற காரணத்தால் அரசாங்கம் கண்காணிப்பாக நிறைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குறிப்பாக ஏற்கெனவே ரத்தத்தை கொடுத்துவிட்டு பணம் பெற்றுக் கொண்டு போவார்கள். அதற்கென்று தனியாக ஆட்கள் இருந்தார்கள். இப்போது இதை தடை செய்திருக்கிறோம். குறிப்பிட்டவர்களிடத்தில் மட்டும் ரத்தம் எடுக்கப்படுகிறது. எல்லாவிதமான டெஸ்ட்டும் செய்யப்பட்டு, அது சரியான ரத்தம் தான், எந்தவிதமான குறைபாடும் இல்லையென்று, உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தான் சேமிப்பு நிலையத்தில் எடுக்கிறார்கள். ரத்தம் கொடுக்கிறபோது பரிசோதித்த பிறகு தான் கொடுக்கிறார்கள். மிகக் கடுமையாக இந்த முறை கையாளப்பட்டு, எந்தத் தவறும் நடந்துவிடாமல், நோய் பரவிவிடாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் கவனமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 30, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

30—

<u>ஓசூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை.</u>

<u>*9288—திரு. கே. ஏ. மனோகரன் :</u>

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஓசூரில் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்,</u> போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொருத்தமான இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமைக்கேற்றவாறு பணிமனை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கலவரங்களின் பாதிப்பின் காரணமாக அண்டை மாநிலமான பெங்களூர் செல்லும் பல பேருந்துகள் கடந்த மூன்று மாதங்களில் பல நாட்கள் ஒசூரில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் இதற்கு துரிதமான நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தின் சார்பாக ஒசூரில் இரண்டு இடங்களை தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த இடங்களை தேர்வு செய்தவுடனேயே அந்தப்பணிமனையை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைந்து உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31—

புதிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம்.

*9792—திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பேருந்து நிலையப் கட்டப்பட்டும் பொதுமக்கள் பயன்படுத்தப்பெறாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) : திருச்சியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தில் ரூ. 18.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டிட வேலைகள் துவங்கப்பட்டு கிழக்குப் பகுதியில் கீழ்த்தளத்தில் பணிகள் முடிவடைந்து உபயோகப்படுத்தப்படுகிறது. மேற்குக் கட்டிடப் பகுதியை சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதோடு அதற்கான வேலையை இந்த ஆண்டு இறுதிக்குள் முடித்து விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரம் இன்றைக்கு சென்னைக்கு அடுத்தபடியாக மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகரம். மாநிலத்தின் மையப் பகுதியில் அமைந்து இருப்பதால் மற்ற மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அதிக அளவில் திருச்சி வந்து செல்கின்றன. அப்படியிருந்தும் பேருந்துகள் நிறுத்துவதற்கு போதுமான இட வசதி இல்லாத பேருந்து நிலையமாக திருவள்ளுவர் பேருந்து நிலையம் உள்ளது. இதனால் பேருந்து நிலையத்தின் அருகில் சாலைகளில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு புறப்பட்டு செல்கின்றன. இதனால் தவிர்க்க முடியாத விபத்துக்கள் நடக்கின்றன. இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, எசன்ஷியல் சர்வீஸாகக் கருதி உடனடியாக புதிய பேருந்து நிலையம் நல்ல வசதிகளைக் கொண்டதாக அமைய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை கட்டுகிற நேரத்தில் 1987-ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்பு 1986-ல் அந்தப் பணிமனை கட்டுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம் அதிலே பேருந்து சென்று திரும்பி வர முடியாத நிலைமை ஏற்பட்ட காரணத்தால் அதிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடன் நாங்கள் பேசியதற்கு பிறகு பணிமனை கட்ட வேறு இடத்தை தேர்வு செய்து, அந்த இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த இடத்தை உடனடியாக வாடகைக்கு விடுவதற்கு இந்த அரசு துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தால் கட்டப்பட்ட அந்த பஸ் ஸ்டாண்டானது உபயோகிக்கப்

படாமல் மிகவும்சிரமத்தை திருச்சி நகர மக்களுக்கு உண்டாக்கி
யுள்ளது. தற்போதுள்ள பஸ் நிலையப் அதனால் பாதிக்கப்
பட்டிருக்கிறது. போக்குவரத்து இதனால் 10 மணிக்கு மேல்
மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அந்த திருவள்ளுவர் போக்கு
வரத்து பஸ் நிலையத்தை அமைப்பதற்கு ஏதாவது ஒரு காலக்
கெடு —முன்பு ஒருமுறை திருச்சி வந்திருந்த அமைச்சர் அவர்கள்
மூன்று மாதத்திற்குள் அதனை அமைப்பதாகச் சொன்னார்கள்.
எனவே, அதை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை யெடுப்ப
தோடு, அது எப்போது அமையும் என்பதை அமைச்சர் அவர்கள்
அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடப் பணிகளை
நான் நேரிலே பார்வையிட்டேன். 1986-லே அந்தக் கட்டிடப்
பணிகள் முடிக்கப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டதற்குக் கார
ணம், அங்கே பேருந்துகள் உள்ளே சென்று திரும்பி வெளியே
வர இயலாத நிலை இருந்தது. உள்ளே நுழையவே முடியாத
நிலைமையும் இருந்தது. அந்தக் கட்டிடப் பணியின் அமைப்பு
அப்படி அமைக்கப்பட்டு இருக்கிறது. அங்கேயுள்ள மாவட்ட
ஆட்சித் தலைவரோடு நான் பேசியிருக்கிறேன். மேலும்
அங்கே யிருக்கின்ற அமைச்சரோடு பேசி, வேறு இடத்தைத்
தேர்வு செய்கிற அந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதற்குப்
பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம்
அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறோம். மூன்று மாதத்தில்
வேறு இடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக பேருந்து
நிலையத்தைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32. திரு.
ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்
துறை அமைச்சர்.

32 —

## புதிதாக அரசு கூட்டுறவு நூற்பாலை

*9860 —திரு. ஏ. டி. செல்ல சாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன் சத்திரம் தொகுதி, ஒட்டன் சத்திரம் பேரு
ராட்சி, கள்ளிமந்தயம், கீரனூர் பேரூராட்சிகளில் புதி
தாக அரசு கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம்
அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



(ஆ) 1992-1993-ல் மேலும், எத்தனை புதிய நூற்பாலை
நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. ஏ. டி. செல்லசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன் சத்திரம் தொகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். அதில் ஒட்டன்சத்திரம் மற்றும் கீரனூர், கள்ளிமந்தயம் பேரூராட்சிகள் உள்ளன. இரண்டு பேரூராட்சிகளில் சுமார் 30 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே பல குடும்பங்கள் உள்ளன. எனவே, ஒட்டன் சத்திரம் மற்றும் கீரனூர் ஆகிய இடங்களில் நூற்பாலைகளை அமைத்துக் கொடுத்து, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை அதன்மூலம் ஏற்படுத்தி, அங்குள்ள ஏழை எளியவர்களுடைய வறுமை நிலையைப் போக்கி ஏழைகள் மீது கருணை உள்ளம் கொண்ட, நமது முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், ஆண்டிப்பட்டியில், அண்ணா கூட்டுறவு நூற்பாலை, 25 ஆயிரம் கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் ஏறத்தாழ 17 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. தற்போது தமிழகத்தில் உற்பத்தியாகிற நூல் உபரியாக இருக்கிறது. நம்முடைய தேவைக்குப் போக, பிற மாநிலங்களுக்கும் நாம் சப்ளை செய்து வருகிறோம். ஆதனால், இதற்கு தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில், இடம் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணா மாவட்டம், ஆண்டிபட்டி அல்ல. மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி, அவ்வாறு திருத்திக் கொள்ளவும்.

வினா எண். 33, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

33—

## திருத்தங்கலுக்கு குடிநீர் வழங்கல்

*9853 – திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) திருத்தங்கலுக்கு ஆணைக்குட்டம் நீர்த்தேக்சத்தில் இருந்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆணைக்குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து திருத்தங்கல் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்காக தரச் சோதனை நீர் கொடுதிறன். (YEILD) ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் முடிந்ததும் திருத்தங்கலுக்கு குடிநீர் வழங்க தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம், கொடை வள்ளல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த 14-ஆம் தேதி, நடந்த பட்டாசு விபத்திலே இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் பத்து ஆயிரமும், காயம் பட்டவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து ஆயிரமும் கொடுத்ததற்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்சமயம் திருத்தங்கல் பேரூராட்சியிலிருந்து சுமார் ஆறு லட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சிறுசேமிப்பு நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்தத் திட்டம் இந்த மாதமே நிறைவேற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் நிலவுகிற குடிநீர்ப் பற்றாக்குறைக்கு முன்னுரிமை கொடுத்து, நடவடிக்கை எடுத்து, குடிநீர் வழங்கவேண்டும் என்று தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி தற்போது மிகவும் வறட்சியாக இருக்கும் இடங்களுக்கு ஆணைக்குட்டம் திறந்த வெளிக் கிணற்றிலிருந்து 2,200 மீட்டர் நீளத்திற்கு, ரூபாய் 3 லட்சம் செலவில், நீர் ஏற்றுக் குழாய்கள்



பதிக்கவும் வேலைகள் 29–4–1992 துவக்கப்பட்டு, 29–7–1992 -ல் முடிக்கப்பட்டது. பின்னர் தரச் சோதனையும் பரிசோதிக்கப்பட்டது. 24—8—1992 அன்று ஒப்படைக்கப்பட்டு, 24—8—1992 முதல் திருத்தங்கல் பேரூராட்சிக்கு தினமும் 2.20 லட்சம் லிட்டர் குடிநீர் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 34, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

34—

## சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு பாலாற்றுத் தண்ணீர்.

*10060— திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சைதாப்பேட்டை மடுவங்கரை பகுதி மக்களுக்கு மேல் நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மடுவங்கரையில் மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்து பாலாற்றுத் தண்ணீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் நகராட்சி மடுவங்கரைக்குப் பக்கத்திலே இருக்கிற காரணத்தாலும், மடுவங்கரை குறைந்தது 40 ஆயிரம் மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், தினந்தோறும் குறைந்தது 32 டாங்குகளுக்கு, லாரிகள் மூலமாக தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தாலும், தினசரி ரூ.1170 செலவு ஆகிறது. மாதக் கணக்கைப் பார்த்தால் ரூ.35,100 செலவாகிறது. வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவாகிறது. 10 வருடங்களாக இதே நிலையை மேற்கொண்டிருப்பதால், வருடத்திற்கு ரூ. 4.21 இலட்சம் செலவு செய்கிற காரணத்தால், பக்கத்திலே இருக்கின்ற ஆலந்தூர் நகராட்சியிலிருந்து பாலாற்றுத் தண்ணீரை விநியோகம் செய்து கொண்டிருப்பதால், ஒரு நிலையான திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கிருஷ்ணா நதி நீர் விநியோகத் திட்டத்திற்கு 12–4–90 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும். தற்போது சென்னையில் 12 குடிநீர் வழங்கும் மண்டலங்கள் செயல்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் கூடுதலாக 4 குடிநீர் மண்டலங்கள் அமைக்கப்படும். சைதை தொகுதியில், மடுவங்கரையை உள்ளடக்கிய வேளச்சேரி மண்டலத்தை அமைப்பதற்கு நீர் வழங்குவதற்குத் தேவையான நிலத்தை ஒதுக்கித் தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். 13 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீர் தொட்டியும், 1.4 மில்லியன் லிட்டர் நீர் தேக்குகின்ற வகையில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது மடுவங்கரை மற்றும் வேளச்சேரி பகுதிகளுக்கு நீர் விநியோகம் சீர் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. என். ஜி. வேணுகோபால், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

35—

இராணிப்பேட்டையில் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்தல்.

*9006 —திரு. என். ஜி. வேணுகோபால்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிப்காட் மற்றும் பி. எச்.இ.எல். (BHEL) போன்ற எண்ணற்ற தொழிற்சாலைகள் இராணிப்பேட்டையில் இருப்பதால் கூட்டுறவு சிறப்பங்காடி அமைத்து அதில் ‘சுயசேவை மையத்தை (Self Service Centre) ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிறப்பங்காடிகளை நிறுவுவதற்கு மைய அரசு விதித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில், இராணிப்பேட்டையில், தற்பொழுது சிறப்பங்காடி அமைக்கவும் அதில் சுயசேவைப் பிரிவை தொடங்கவும் போதுமான சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுப்பது என்றுதான் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் கேட்காமல் கொடுப்பது நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில்தான். இந்த வேளையில் வளர்ந்துவரும் இராணிப்பேட்டையில் எண்ணற்ற தொழில் வளாகங்களும், அதில் பணிபுரியும் அதிகாரிகளும் மற்றும் தொழிலதிபர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் இந்த சுய சேவைப் பிரிவைக் கொண்டுவர வேண்டுமென்று பல காலங்களிலே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இதை அங்கே திறந்தால் அவர்களுக்கு மிகவும் சவுகரியமாக இருக்கும். அதுமட்டுமல்ல, இராணிப்பேட்டையிலிருந்து வேலூர், சென்னை போன்ற நகரங்களுக்கு இந்த மக்கள் சென்று வருவது மிகவும் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தால், உடனடியாக இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, தொடங்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு விதித்துள்ள நிபந்தனைகளின் படி ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கட் தொகை உள்ள நகரங்களில் சுமார் ரூ. 40 இலட்சம் விற்பனையை எதிர்பார்த்தால், அங்கே 2,000 சதுர அடியில் விற்பனைப் பிரிவை துவக்கலாம் என்றிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து, வட ஆற்காடு—அம்பேத்கார் இணைப் பதிவாளரும், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு விற்பனை பண்டகசாலை தனி அலுவலரும் அப்படிப்பட்ட சாத்தியக் கூறுகள் இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஆனால் வருகின்ற நாட்களில் அங்கே வாணிபம் பெருகக் கூடிய சாத்தியக்கூறுகள் அமைந்தால் சுயசேவைப் பிரிவை துவக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 36, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

36—

சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் வாடகைக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்கல்.

*9702 —டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் படித்த பட்டதாரி இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் உதவ இரு சக்கர வாகனங்கள் வாடகைக்கு விடும் திட்டம் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக முதற் கட்டமாக சென்னை மாநகரில் இரு சக்கர வாகனங்கள் வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும் அந்தத் திட்டம் புரட்சியாக இருக்க வேண்டும். அது புதுமையாக இருக்க வேணடும். அது மக்கள் மத்தியிலே வரவேற்பை பெறவேண்டுமென்ற வகையில் அந்த நோக்கம் கொண்டவர்கள். அட்வான்ஸ்டு சைன்டிபிக் நாலட்ஜ் கொண்டவர்கள். அவர்களுடைய ஆட்சியில் இரு சக்கர வாடகை வண்டிகள் விடும் திட்டத்தை அறிவித்தால், படித்த இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இது பெரும் உதவியாக இருக்கும். குறிப்பாக இது 'பீக் அவர்சில்' பெரும் உதவியாக இருக்கும். எனவே, இத்திட்டந்தை நம்முடைய ஆட்சியில் அறிவித்தால், அரசியல் ஏட்டில் பெரும் அங்கம் வகிக்கும் என்பதால், இதில் உடனடியாக ஆவன செய்து அமைச்சரவர்கள், போக்குவரத்துத் துறையையும், உள்ளாட்சித் துறையையும் இணைத்து செயல்படுவதற்கு, ஆலோசனையையும், அதற்குறிய நடவடிககையையும், விரைவில் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எங்கும் புரட்சி எதிலும் புரட்சி என்று தமிழகத்திலே ஒரு புரட்சியை படைத்து வருகிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) இது போன்ற புரட்சிகரமான திட்டங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டு அவை இன்றைக்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதை மீண்டும் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 37, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.





37—

**விவசாய விளைபொருட்கள் விற்றவுடன் பணம் பட்டுவாடா செய்தல்.**

*10978—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாய விளைபொருட்களை விற்றவுடன் பணம் பட்டுவாடா செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரும்பாலும் அனைத்து வேளாண் விற்பனைக் கூடங்களிலும் பருத்தியைத் தவிர இதர பொருட்களுக்கு உடனடி பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. பருத்தி விற்பனை, ஆலை முதலாளிகளின் பிரதிநிதிகள் மூலம் நடைபெறுவதால் கையிருப்பு தொகைக்கு மேல் அதிகமாகத் தேவைப்படும்போது ஆலை முதலாளிகளிடமிருந்து தொகையைப் பெற்று பட்டுவாடா செய்ய சில நேரங்களிலே தாமதம் ஆகிறது. இத்தாமதத்தைத் தவிர்க்க அரசு நக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களை இடையில் தரகர் இன்றியும் ஏமாற்றம் இன்றியும் விற்பனை செய்வதற்காக விவசாயிகள் போகின்ற அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பருத்தி மட்டும் அல்லாமல் நெல், பட்டுக்கூடு போன்ற பொருட்களுக்கும் அவர்கள் உடனடியாக பணம் பட்டுவாடா செய்வது இல்லை. உதாரணமாக தென்னாற்காடு மாவட்டத்திலே வேட்டவலம் என்ற ஊரில் இருக்கிற, நெல் விற்பனை செய்கின்ற, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே, ஒரு வார காலத்திற்கு மேலாக விவசாயிகளின் நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை என்றும், கோவையில் இருக்கிற பட்டுக்கூடு விற்பனைக் கூடத்திலே ஒரு வார காலத்திற்கு மேலாக பணம் பட்டுவாடா செய்யவில்லை என்றும், அந்தந்த பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கூறுகின்றனர். எனவே, விளை பொருட்களுக்கு தாமதம் இன்றி உடனடியாக பணத்தை பட்டுவாடா செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் இரண்டு இடங்களிலே பணம் பட்டுவாடா செய்வதற்கு கால தாமதம் இருப்பதாக கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்து இப்போது எனது கவனத்திற்கு கொண்டு வந்ததன் காரணமாக பணத்தை விரைந்து பட்டுவாடா செய்வதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. அது மட்டும் அல்லாது விற்பனைக் கூட பொது நிதியிலிருந்து பணத்தை பட்டுவாடா செய்வதற்கு 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் சட்டத்திலே இடம் இல்லை. ஆனால், எங்கள் எண்ணத்திலே என்றென்றும் நிறைந்து இருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய புனித அரசு பொறுப்பு ஏற்றபின் உடனடியாக வேளாண் விளைபொருட்களுக்கு பணத்தை பட்டுவாடா செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுடைய துறையைப் பணித்து இருக்கிறார்கள். எங்களுடைய டணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தங்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை அரசு கொள்முதல் செய்யும் போது அதற்கு காலத்திலே பணத்தை பட்டுவாடா செய்வது கிடையாது. 6,7 மாதங்கள் ஆகின்றன. உதாரணத்திற்காக ஒன்று சொன்னால் திருக்குவளையில் அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ஒருவர் சமீபத்திலே இறந்து விட்டார்கள். அவருடைய குடும்பத்தினரிடமிருந்து நெல்லை ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய்க்கு அரசு கொள்முதல் செய்தது. இன்று வரையில் அந்தப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. அவர்கள் வங்கியிலே கடன் வாங்கி சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. வங்கிக்கு கடன் கட்ட வேண்டியிருக்கிறது. இது போன்ற காலதாமதத்தைத் தவிர்த்து அந்தத் தொகையை வட்டியோடு சேர்த்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையின் கீழ் பணியாற்றுவது ஒழுங்குமுறை விற்பனைக்கூடம். அவர் எது என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். அவர் குறிப்பிட்டு சொல்லியிருப்பது நுகர் பொருள் வாணிபக் கழகத்திலே இருப்பது. எனவே அவர் தனியாக கேள்வி போட்டால், அதற்குறிய அமைச்சர் அவர்கள் பதிலை அளிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 38, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

38—

குடிசை மக்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுதல்.

*9023—திருமதி ஜீனத் சர்புதீன் ;

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேப்பாக்கம் தொகுதியில் பழைய 93/புதிய 83 வட்டத்தில் இருக்கும் எல். ஜி. என். ரோட்டில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஜீனத் சர்புதீன் ; மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரப் புகழ் பெற்ற மதுரை மாநகரில் மாநாடு கண்ட மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் இப்படி இல்லை என்று சொல்லி விட்டால் எப்படி? வரும் ஆண்டிலாவது என்னுடைய தொகுதியில் வாழும் ஏழை மக்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டித் தரப்படும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்பமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற பகுதி எல். ஜி. என். சாலையில் உள்ள கோவிந்ததாஸ் நகரப் பகுதியாகும். சுமார் 300 குடும்பங்களுக்கு மேலாக இங்கு குடிசைகளிலே வசித்து வருகிறார்கள். குடிசைப் பகுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலம் தனியாருக்கு சொந்தமான நிலம். மொத்தம் 15 மனைகள் இதிலே அடங்கி இருக்கின்றன. அந்த நிலத்திற்கு சொந்தக்காரர் ஆகிய தனியார் அந்த நிலத்தை குடிசை மாற்று வாரியத்திற்கு ஒப்படைக்க மறுக்கின்ற காரணத்தினாலும் அவர்

அதற்குரிய ஈடுத் தொகையாக 5,000 ரூபாய்க்கு மேல் கேட்கின்ற காரணத்தினாலும், அரசு ஆணை ஏற்கனவே ஒரு வீட்டு மனைக்கு 5,000 க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று இருக்கின்ற காரணத்தினாலும் அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண். 39, திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

39—

*9964 —திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேன்கனிக்கோட்டை வட்டம், அஞ்செட்டியில் நட மாடும் கால்நடை மருந்தகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. வெங்கடராமரெட்டி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்னுடைய பகுதி தேன்கனிகோட்டையிலிருந்து அஞ்செட்டி 25 மைல் ஆகும். அஞ்செட்டியிலிருந்து நாட்ராம்பாளையம் ஒகேனக்கல் வரையும் ஏறக்குறைய 60 மைல் இருக்கிறது, 60 மைலிலேயும் There is no veterinary centre at any place. அந்த 60 மைலும் காட்டுப்பிரதேசம். ஆடு மாடுகளை ஓட்டிப்போக முடியாது. அதனால் ஒரு மொபைல் வெட்ரினரி சென்ட்டர் அந்தந்த ஏரியா வில் போனால் நன்றாகஇருக்கும். அதுமட்டுமல்லாமல் அந்த பக்கத் தில் இருக்கின்ற இடம் எல்லாம் கர்நாடக மாநிலம் —காவேரி பார்டர். அங்கே ஒரு வெட்ரினரி சென்ட்டர் இல்லை என்பதால் அங்கே இருப்பவர்கள் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற் காக அரசு உடனடியாக இப்பொழுது இல்லை என்றாலும் இன் னும் 3 மாதங்களுக்குள்ளாவது இந்த வெட்ரினரி மொபைல் சென்ட்டரை ஏற்படுத்த வேண்டும். It is a forest area. The forest area is infested with cheetahs and elephants. I request the Honourable Minister to establ shs at least in the next year, a veterinary mobile centre at Anjatti vilalge.





மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அஞ்செட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் தற்போது இயங்கி வருகிறது. தேன்கனிக்கோட்டையில் அஞ்செட்டியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கும் பிரேரணை பெறப்படின் தேவையின் அடிப்படையிலும், நிதி நிலையின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, டாக்டர் எம்.கருப்புசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

40 —

குன்னூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

*9570 —டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்னூர் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குன்னூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நெல் விளைவதில்லை. ஆகவே அங்கே உள்ள மக்களுடைய வாழ்வில் தினசரி அரிசி பற்றாக் குறை இருக்கிறது. சற்று அரிசியைக் கூட்டிக் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டவுடன் ஒரு மாதத்திற்குள்ளாக ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் 4 கிலோ அரிசியை அதிகமாகக் கொடுத்து மக்களுடைய பசியைத் தீர்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி யைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவ் விதமாக நீலகிரி மாவட்ட மக்களின் மேல் அன்பும் பாசமும்

கொண்டுள்ளவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நீலகிரி மாவட்டம் மிகவும் அருமையான சீதோஷ்ண நிலை கொண்டது. உலகத்திலேயே மிக நல்ல முறையில் இயங்கக் கூடிய மிகச் சிறந்த ஊசிகளைத் தயாரிக்கக் கூடிய நீடில் பேக்டரியும், நாய் கடிக்கு உள்ள ஆண்டி-ராபிஸ்-வேக்சின் என்று சொல்லக் கூடிய மருந்தும் தயாரிக்கக் கூடிய நல்ல சீதோஷ்ண நிலை உள்ளது. மேலும் இங்கு 200-க்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. அந்த 200-க்கும் மேற்பட்ட தேயிலை தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்கள் வெளி மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஆகவே, அந்த உதிரி பாகங்களைத் தயாரிக்கவும் அலுமினியம் தாதுக்கள் அடங்கிய மண் இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு அங்கு அலுமினியம் தயாரிக்கப்படுகிறது. அம்மாதிரி அங்கேயே தயாரிக்கவும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவாகக் கேட்கவும்.

டாக்டர் எம். கருப்புசாமி: இவ்வாறு பல வகையான மூலதனப் பொருட்களைக் கொண்டுள்ள மாவட்டத்திலேயே ஒரு தொழிற்பேட்டையை அமைத்தால் நன்றாக இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் அலுமினியம் தொழிற்சாலையும் அமைத்து, தேயிலே தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிற் கூடங்களைத் தந்தால் அந்த மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால், அதை அடுத்த ஆண்டிலாவது பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குன்னூரில் தொழிற்பேட்டை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். எனவே குன்னூரை பொறுத்த அளவில் 10 சிறு தொழில் முனைவர்கள் தகுந்த முனை திட்டத்துடன் முன்வருவார்களேயானால் தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

முற்பகல் 10-40

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2. அறிவிப்பு.

உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டுள்ளது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்புக் (குறுக்கீடு) நான் ஒரு அறிவிப்புக் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் பேரவைக்கு ஓர் அறிவிப்பை அறிவிக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்கல்ல. நான் உங்களுக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அதைச் சொன்ன பிறகு சொல்லுங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை நகரக் காவல் துறை குற்றப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து எனக்குக் கீழ்க்கண்ட டெலக்ஸ் செய்தி நேற்றிரவு வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have the honour to state that Thiru Panruti S. Ramachandran, M.L.A. of P.M.K. party concerned in Madras City 'X, Cr.No.1899/92, U/S 120-B, 124 A, 153-A (1) (a) (b) 505 (1) (6) IPC r/w 13 (1) & 13 (2) of Unlawful Activities (Prevention) Act, 1967 was arrested today (21-9-92) at 21.15 hrs. at his residence, on execution of Non-Bailable Warrant issued by Hon'ble Addl. Chief Metropolitan Magistrate (I/C) Egmore, Madras-8. He is being sent for judicial custody."

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் என்னிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உட்காருங்கள். இதிலே ஒன்றும் கிளாரிபிகேஷன் இல்லை. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர்....

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். திரு. சிங்காரம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறார். உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. சிங்காரம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டிருக்கிறார். பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனுக்கு முன்னால் பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள், திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டரில் இன்னொரு உறுப்பினரைப் பற்றி (குறுக்கீடு) அவர் இங்கே அமர்ந்து இருக்கிறார். (குறுக்கீடு) அதைப் பற்றி எனக்கு எந்தத் தகவலும் வராமல் நீங்களோ மற்றவர்களோ கவலைப்பட வேண்டியதில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

## 3. சிறப்புக் குறிப்புகள்.

(அ) காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர்.

*திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தங்களிடத்திலே அனுமதி கோரியிருக்கிறேன். அண்மைக்காலததில் காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருகிறது. சென்ற ஆண்டு மட்டும் 1,431 பேர், காவல் துறையைச் சார்ந்தவர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது. தமிழகத்தில். .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அறிவிப்பை நான் கொடுத்து விடுகிறேன். தங்களைப் போல மேலும் 20 உறுப்பினர்கள் நேற்றையதினமும் இன்றைய தினமும் ஒத்திவைப்புத் தீர்மானமாகவும் பலர் கொடுத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். ஆனால் இன்றைய தினம் ''ஸ்பெஷல் மென்ஷன்'' என்கிற வகையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என அனுமதித்து இருக்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்களோடு, திரு. குமரி அனந்தன், திரு. எஸ்.டேனியல்ராஜ், திருமதி லதா பிரியகுமார், திருமதி ஜெ. லோகாம்பாள், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. மா. சுந்தரதாஸ், திரு. வி. தண்டாயுதபாணி, திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு.கே.கே. சின்னப்பன், திரு. வே. தம்புசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஜி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு.செ,கு. தமிழரசன், திரு. ப. ரங்கநாதன் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. ஞானசேகரன், திரு. டி. சுதர்சனம், திரு. சே. செல்வராஜ் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். அதை இப்போது அவையில் எழுப்ப அனுமதி அளித்து இருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அட்ஜர்ன்மெண்ட் மோஷனாகத்தான் கொடுத்து இருக்கிறார்கள். அதை அனுமதிக்கவில்லை. அதை ஸ்பெஷல் மென்ஷனாக அனுமதித்து இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) 'ஜீரோ ஹவரிலேதான் இந்த. ஸ்பெஷல் மென்ஷனை எடுத்துக் கொள்வது. அதைத்தான இப்போது எடுத்து இருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் அனுமதிக்கவில்லை. ஒத்தி வைப்புத் தீர்மானம் நேற்றைக்குக் கொடுக்கப்பட்டதை நான் அனுமதிக்கவில்லை. இருந்தாலும் அந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி இன்று அவையில் எழுப்ப அனுமதித்திருக்கிறேன் என்றே சொன்னேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் அனுமதிக்கவில்லை. அதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடு) அதைத்தான் நான் அனுமதிக்கவில்லை என்று சொல்கிறேனே. இதற்குக் கொடுத்திருக்கிறீர்கள். இப்பொழுது நான் ஸ்பெஷல் 'பெர்மிஷனாக எடுத்திருக்கிறேன். நீங்கள் வேறு எதை வேண்டுமானாலும் எழுப்ப முடியாது. என்னிடம் நீங்கள் கொடுக்கவில்லை. என்னிடம் எதுவும் கொடுக்காமல் நீங்கள் எழுப்புவதை அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாற்றிக் கொடுத்து இப்பொழுது அறிவித்திருக்கிறேன். அதை இப்பொழுது எடுத்திருக்கிறோம். அதைத் தவிர இப்பொழுது தாங்கள் என்னிடத்திலே அனுமதி பெறாமல் எதையும் எழுப்ப அனுமதிப்பதற்கில்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

இப்பொழுது அனுமதிக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை நான் அழைத்ததற்குப் பிறகு நீங்கள் பேசுவது தவறு. நான் உங்களை அனுமதிக்களில்லை. என்ன பிரச்சினை என்றே நீங்கள் எனக்குத் தகவல் கொடுக்காமல் எழுப்ப முடியாது. அதை என்னுடைய கவனத்திற்குக் கொடுத்து என்னுடைய அனுமதியைப் பெற்றுதான் நீங்கள் ஜீரோ ஹவரில் எழுப்ப வேண்டும். என் அனுமதியே பெறாமல், என்னுடைய கவனத்திற்கும் கொண்டுவராமல், நீங்கள் எதைக் கிளப்புகிறீர்கள், எதற்காகக் கிளப்புகிறீர்கள் என்றே தெரியாமல் கிளப்பிக் கொண்டிருப்பது சரியல்ல. நீங்கள் எந்த விதியின் கீழ் இப்பொழுது நிற்கிறீர்கள்? நான் அனுமதி கொடுக்காமல், எந்த விதியின் கீழே நிற்கிறீர்கள்? எந்த விதியிலேயும் கட்டுப்படாமல் நீங்கள் நின்று கொண்டிருப்பது சரியல்ல. நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. என்னிடம் அனுமதியும் பெறாமல், அனுமதியும் கேட்காமல் நீங்களாக எழுந்து கொண்டிருப்பது சரியல்ல. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, நீங்கள் உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதை அவைக்கு முன்னுரிமை கொடுத்து நான் அறிவித்திருக்கிறேன். அதிலே நீங்கள் ஏதாவது அறிவிப்பு எனக்கு கொடுத்துவிட்டு, அதன் பின்னர் நீங்கள் கிளப்பலாம். அதாவது உங்களையும், தாமரைக்கனியையும் பார்த்தால், உங்களைவிடத் தாமரைக்கனியே பரவாயில்லை என்று கருத வேண்டி வரும். திருநாவுக்கரசு, உட்காருங்கள். அவரும் எந்த அறிவிப்பும் கொடுக்காமல் நின்று பேசுகிறார். நீங்களும் நின்று பேசுகிறீர்கள் என்றால், தாமரைக்கனிக்கும், உங்களுக்கும்— அவராவது ''உட்காருங்கள்'' என்று சொன்னவுடன் உட்கார்ந்துவிட்டார். நீங்களும் உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் ஏதாவது ஒரு விதியின் கீழே நின்று பேச வேண்டும். எந்த விதியிலே நீங்கள் பேசுகிறீர்கள்? என் கவனத்திற்கு எதுவும் கொடுக்காமல், இப்படி நின்று கொண்டு பேசுவது சரியல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அமர வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். நீங்கள் எந்த விதியின் கீழேயும் உட்படாமல் நின்று பேசிக்கொண்டு இருப்பது அவையின் நடவடிக்கைக்குக் குந்தகம் செய்வதாக அமையும். உட்கார வேண்டும். நான் உங்களை அனுமதிக்கவில்லை. உட்கார வேண்டும். நீங்கள் பேசுகின்ற எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் எதைப் பற்றியும் என் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. எதைப் பற்றியும் என் கவனத்திற்குக் கொண்டு வராமல் நீங்கள் பேசுவது தவறு, நீங்கள் ஏதாவது ஒரு விதியின் கீழே பேச வேண்டும். எந்த விதியின் கீழேயும் இல்லாமல் பேசக் கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு, வெளியேற்ற வேண்டி வரும். உட்காருங்கள். (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேறவும்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர்கள் பேசும்பொழுது ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறவில்லை. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். அவர் பேசியது அத்தனையும் அவை விதிகளுக்கு முற்றிலும் புறம்பான செயல். மார்ஷல், திருநாவுக்கரசை அவையை விட்டு அப்புறப்படுத்தவும்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு பேரவைக் காவலரால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு அவையிலேயிருந்து அப்புறப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி தவிர, அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : தலைவரவர்களே ............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப் பற்றி நீங்கள் எழுப்பப் போகிறீர்கள்?

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்பொழுது நேற்றைய தினம் அந்தச் சட்டமன்ற உறுப்பினர் அவையிலே....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் காலையில் நேரத்தோடு என்னைச் சந்தித்தீர்கள். நீங்கள் இன்றைக்கு யாரோ சொல்லிக் கொடுத்து வந்து பேசக் கூடாது. நீங்கள் எட்டரை மணிக்கே என்னுடைய அறையிலே வந்து வேறு சில பிரச்சினைகளைப் பற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். இது இந்த நேரத்தில் அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தி நீங்கள் பேச வேண்டும் என்ற அளவிற்கு முக்கியமான பிரச்சினையாக இருந்தால் என்னுடைய கவனத்திற்கு அப்பொழுதே கொண்டு வந்திருப்பீர்கள். (குறுக்கீடு). திரு. பழனிசாமி, இது முறையல்ல. நீங்கள் இந்த அவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற அளவுக்கு இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக இருந்தால், நீங்கள் என்னைச் சந்தித்தபொழுதே இது பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பீர்கள். (குறுக்கீடு). ஏற்கெனவே நான் இந்த அவையினுடைய உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். நேற்று இரவே காவல் துறையினர் எனக்குக் கொடுத்த செய்தியை அவைக்கு அறிவித்திருக்கிறேன். மேற்கொண்டு இந்த அவையிலே எந்த விவாதமும் ஏற்படுவதற்கு இல்லை. (குறுக்கீடு). அமைச்சர்கள் உட்கார வேண்டும் (குறுக்கீடு). திரு. பழனிசாமி. நீங்கள் நிற்பது முறையல்ல; நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு). தயவு செய்து திரு. பழனிசாமி உட்கார வேண்டும். இது முறையல்ல; உட்காருங்கள். (குறுக்கீடு).

முற்பகல் 10-50.

வெளியேற்றப்பட்ட உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு உள்ளே வருவது முறையல்ல. திருநாவுக்கரசை அப்புறப் படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். மார்ஷல், காவலர்களோடு திருநாவுக்கரசை அப்புறப்படுத்தவும். (குறுக்கீடு) மார்ஷல், திருநாவுக்கரசை இந்த வளாகத்தை விட்டே அப்புறப்படுத்தவும். திருநாவுக்கரசை அப்புறப்படுத்தவும். அப்புறப்படுத்தவும். விரும்பத்தகாத பொருளைப் போல அப்புறப்படுத்தவும்.

(திரு. திருநாவுக்கரசு பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டால், அந்தத் தகவல் தலைவருக்குச் சொல்லப்பட்டு அதை அவைக்கு அறிவிக்கவேண்டிய கடமை மட்டும் தலைவருக்கு





உண்டே ஒழிய, அது பற்றி வேறு விவாதமோ வேறு மாறுபட்ட கருத்தோ இருக்குமானால், தலைவரிடத்திலே அது குறித்து தனியாகச் சொல்லியோ அல்லது அரசாங்கத்திற்கு முன் கூட்டியே கவனத்திற்குக் கொண்டு வந்தோதான், அதிலே பதிலைப் பெற முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இதை ஏற்கெனவே அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். எனக்கு வந்த தகவலை நான் அவைக்கு அறிவித்திருக்கிறேன். அதோடு நம்முடைய கடமை முடிகிறது. சட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு சட்டப் பிரச்சினை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எப்படி முதல் நாள் பெயிலிலே விட்டு விட்டு, மீண்டும் அதை "க்வாஷ்" செய்து விட்டு, இன்றைக்கு மீண்டும் கைது செய்திருக்கிறார்கள் என்று விவரத்தைக் கேட்டார். அந்த மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் விட்டதே சட்டப்படி தப்பு. இன்றைக்கு சாட்டப்பட்ட அந்தக் குற்றத்தின்படி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பண்ருட்டி திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்களும் இன்னும் சிலரும் சில குறிப்பிட்ட செக்ஷன்களின் கீழ் கைது செய்யப்பட்டார்கள். அதில் ஒரு செக்ஷன் "கான்ஸ்பிரசி"யைப் பற்றியது. மற்றொன்று 120-பி; "செக்ஷன்"ஐப் பற்றியது. எனவே செக்ஷன் 120-பி, ரெட் வித் செக்ஷன் 124-ஏ-இல் வரும் குற்றங்களைப் பொறுத்தவரை, அது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் முன்னால் வந்தாலும் கூட, அதற்கு "பெயில்" கொடுக்கும் "ஜூரிஸ்டிக்ஷன்", மெட்ரோபாலிடன் கோர்ட்டுக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி). செக்ஷன் 124-ஏ, "ரெட்-வித்" 120-பி-யின் கீழ் கைது செய்யப்பட்டால், ஜாமீன் கொடுக்கும் அதிகாரம் — "ஜூரிஸ்டிக்ஷன்" — செஷன்ஸ் கோர்ட்டுக்கு உண்டு. எனவே, அவரை முதலில் சொன்ன ஜாமீனில் விடுவித்ததே தவறு. எனவேதான், அந்த வழக்கு மீண்டும் மெட்ரோபாலிடன் கோர்ட்டுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டு கொடுக்கப்பட்ட "பெயில்" ரத்து செய்யப்பட்டு மறுபடியும் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . .

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இளம்வழுதி உட்கார வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறார். அதிலே குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடு) திரு. பழனிசாமி உட்காரவும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : நான் பேசுகிறபோது கூட உட்காரக் கூடாதா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி தெரிவித்த கருத்து எந்த வகையிலும் விதிகளுக்கு உட்படாதது. உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். எதிர்க் கட்சித் தலைவர் (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காரவும். நீங்கள் உட்கார வேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்கார வேண்டும் அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலத்தில் தமிழகத்தில். . . . . . (குறுக்கீடு).

திரு. வீ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி உட்கார வேண்டும். இதுபற்றி விவாதத்திற்கு இடமே இல்லை. என்னிடம் அனுமதி பெறாமல் நீங்கள் பேசிக்கொண்டே இருக்கக் கூடாது. உட்கார வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலத்தில் தமிழகத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் அதிகரித்து வருவது நமக்குக் கவலை அளிப்பதாக இருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னால். . . .

திரு. இளம்வழுதி : நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்.)**





திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : சென்னை மாநகரத்தில், கள்ளச் சாராய கோஷ்டிகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு போலீஸ்காரர் மரணம் அடைந்தார்; கொலை செய்யப்பட்டார்.

கடந்த 2 நாட்களுக்கு முன்னால், மதுரை மாவட்டத்தில் சமயநல்லூர் ஸ்டேஷனைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் தாக்குதலுக்கு இலக்காகி கொலை செய்யப்பட்டிருக்கிறார். இன்று காலையிலே கூட பத்திரிகையிலே பார்த்தால், சென்னை மாநகரத்திலேயும், சென்னை நகருக்கு அருகிலே இருக்கிற இடங்களிலும் நேற்று இரவு ரோந்து சென்ற காவல்துறையைச் சேர்ந்தவர்கள், கள்ளச் சாராய கோஷ்டிகளின் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கிறார்கள். இவைகள் எல்லாம் நமக்குக் கவலை அளிக்கக்கூடிய சம்பவங்கள்.

முற்பகல் 10-55

குறிப்பாக, மதுரையிலே நடைபெற்றிருக்கிற சம்பவம்—ஒரு சப்-இன்ஸ்பெக்டர் தன்னுடைய கடமையைச் செய்ய ஒரு கான்ஸ்டபிளை அழைத்துக் கொண்டு ரோந்து சென்றிருக்கிறார். சமயநல்லூர் ஸ்டேஷனைச் சேர்ந்த அந்த சப்-இன்ஸ்பெக்டர், கூடல்நகருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஆட்டோ-ரிக்ஷாவைப் பார்த்து சந்தேகப்பட்டு விசாரித்திருக்கிறார். அதிலே இருந்தவர் முன்னுக்குப்பின் முரணான தகவலைக் கொடுத்திருக்கிறார். எனவே, சந்தேகம் அதிகரித்து, அவரைப் பிடிக்க எத்தனிக்கையில், கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளாக தான் மறைத்து வைத்திருந்த தானியங்கித் துப்பாக்கியினை எடுத்து, சப்-இன்ஸ்பெக்டர் மீதும், கான்ஸ்டபிள் மீதும், அவர்களை ஏற்றிக் கொண்டு வந்த ஆட்டோ-ரிக்ஷா டிரைவர் மீதும் குறி தவறாமல் அந்த 3 பேர் மீதும் சுட்டு, அதிலே சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இவ்வளவு குறி தவறாமல், போதிய ஆயத்தம் இல்லாத நேரத்தில் தானியங்கித் துப்பாக்கியைப் பயன்படுத்தி 3 பேரைக் காயப்படுத்தியிருக்கிறார். அதிலும் முக்கியமாக சப்-இன்ஸ்பெக்டரைக் கொல்ல முடியும் என்று சொன்னால், நன்கு பயிற்சி பெற்றவர்களால் தான் அதைச் செய்ய முடியும் என்று அத்தனை பேரும் சொல்கிறார்கள். குறிப்பாக, காவல்துறை உயர் அதிகாரி அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இவ்வளவு லாவகமாக தானியங்கித் துப்பாக்கியைக் கையாளக் கூடியவர்கள் எல்.டி.டி.ஈ.-யினராகத் தான் இருக்க வேண்டும்; அல்லது, எல்.டி.டி.ஈ.-யினரிடம் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும். இங்கே இருக்கிற தமிழர் மீட்சிப் படையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று உயர் போலீஸ் அதிகாரி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அங்கே சந்தேகத்திற்கு ஆளாகி இருக்கிறவர்கள்—குறிப்பாக, ராஜீவ் காந்தியினுடைய கொலை வழக்கிலே தேடப்பட்ட அருணா என்கிற விடுதலைப் புலியாக இருக்கலாம். ஏனென்றால், அவர்

கள் சொல்கிற அடையாளங்கள் எல்லாம் அவருக்குப் பொருத்த மாக இருப்பதாகவும் சொல்கிறார்கள். அது மட்டுமல்லாமல் காவல்துறை உயர் அதிகாரி இன்னொன்றையும் சொல்லியிருக்கி றார். அவர்களுக்கு நடமாடுவதற்கு தைரியம் எப்படி வந்தது என்று சொன்னால், இங்கே தமிழகத்திலே எல்.டி.டி.ஈ.-யின ருக்கு ஆதரவாகச் செயல்படுகிறவர்கள் அதிகரித்துக் கொண்டு இருக்கிறார்கள்; பகிரங்கமாக அவர்களுக்கு ஆதரவு தருகிறார் கள்; அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார்கள்; எனவே தான் அவர்களாலே தமிழ் மண்ணிலே செயல்பட முடிகிறது என்பதையும் அவர் சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல; அந்தக் கொலைகாரனை எடுத்து வந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர் ஒரு அரசியல் கட்சியினுடைய உறுப்பினர் என்பது இப்போது தெரிந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகக் கட்சி உறுப்பினர் என்றும் பத்திரிகைச் செய்தியிலே வந்திருக்கிறது.

ஆக, இதற்கெல்லாம் காரணம் தமிழ் மண்ணிலே எல்.டி. டி.ஈ.-யினருக்கு ஆதரவாக—தடை செய்யப்பட்ட இயக்கம் எல்.டி.டி.ஈ. நம்முடைய தமிழக அரசு கேட்டுக் கொண்டதற் கிணங்க, தமிழக அரசு மற்றும் தமிழக மக்களுடைய ஒருமித்த கருத்து, ஒருமித்த வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசாங்கம் எல்.டி.டி.ஈ.-யை தடை செய்திருக்கிறது—அந்த எல்.டி.டி.ஈ-க்கு ஆதரவாகத்தான் இன்றைக்கு தமிழகத்திலே பலபேர் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். பகிரங்கமாக கோஷம் போடுகிறார்கள். பகிரங்கமாக பதாகைகள் தாங்கி வருகிறார் கள். அந்த இயக்கத்தினுடைய தலைவரின் படங்களை எடுத்து வருகிறார்கள். ராஜீவ் காந்தியினுடைய கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட அந்த சண்டாளனுடைய படத்தை எடுத்து வரு கிறார்கள். அந்த சண்டாளர்களை ஆதரித்து கோஷம் போடு கிறார்கள். வாழ்க, வாழ்க என்று கோஷம் போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை இங்கே அனுமதிக்க வேண்டுமா, இப்படிப் பட்டவர்கள் இங்கே தாராளமாக உலவுவதற்கு அனுமதிக்க வேண்டுமா என்பதை நாம் எண்ணித்தான் பார்க்கவேண்டும்.

முற்பகல் 11-00

இந்த அரசாங்கம் அப்படிப்பட்டவாகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் பிரிவினை கேட்கி றார்கள் என்றால் தைரியமாகச் சொல்ல வேண்டும். நாங்கள் பிரிவினை கேட்கிறோம் என்று தைரியமாகச் சொல்ல வேண்டும். அங்கே தமிழீழம் கேட்கிறார்கள். அதேபோல் நாங்களும் இங்கே சுயாதிபத்திய உரிமை கேட்கிறோம். 'Right of Self de ermination ' கேட்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதற் குப் பொருள் என்ன? அங்கே கேட்கின்ற பிரிவினையைப் போல இங்கேயும் நாங்கள் பிரிவினை கேட்கிறோம் என்று அவர்கள் கோழைத்தனமாக வேறு விதமாக சொல்லாடலில் ஈடுபட்டு



இருக்கிறார்களே தவிர, அவர்களுடைய உண்மையான எண்ணம் என்ன என்பது—பிரிவினை கேட்கிறார்கள். ராஜீவ் காந்தி யினுடைய கொலையாளியை இந்த மண்ணிலே யாரும் புகழ்ந்து பேச அனுமதிக்க முடியாது. ராஜீவ் காந்தியினுடைய கொலை யாளியை ஆதரித்து கோஷம் போடுவதை நாம் அனுமதிக்க முடியாது. சென்ற சில நாட்களுக்கு முன்னால் இங்கே சென்னை மாநகரத்திலே ஊர்வலம் போயிருக்கிறார்கள். அந்த ஊர்வலத்திலே எடுத்து வந்த படங்களிலே ராஜீவ் காந்தி கொலையாளியின் படம் இருந்திருக்கிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே குற்றவாளி என்று பிரகடனப்படுத்தப்பட்ட வருடைய படத்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவர் களை ஆதரித்துக் கோஷம் போட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எடுக்கப்படுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்களுடைய முழுமையான ஆதரவு உண்டு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இதே அவையிலே நாங்கள் குற்றம் சுமத்தியிருக்கிறோம். தமிழகத்திலே எல்.டி.டி.ஈ. யினர் தாராளமாக நடமாடு கிறார்கள். தமிழகத்திலே ஆயுதப் பயிற்சி முகாம்கள் நடத்து கிறார்கள். தமிழகத்திலே ஆயுதத் தொழிற்சாலைகள் வைத் திருக்கிறார்கள். இங்கே ஃபாஷை – 2000, அருள் 89— அதுமட்டுமல்ல ஏ. கே. 47 அஸால்ட் ரைப்பிள்ஸ் தயாரிக்கப் படுகின்றன. தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வைத்துக் கொண்டு பயிற்சி கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பயங்கரவாத இயக்கங்களுக்கு— தீவிரவாத இயக்கங்களுக்கு இவர்கள் விற்றுக் கொண்டு இருக்கிறார்கள், என்பதையும் இதே சபையிலே சொல்லியிருக்கிறோம். அன்றைய ஆட்சியாளர்கள் மறுத்தார்கள். அவர்கள் ஏன் இங்கே வரவேண்டும், அவர்கள் ராஜாக்களாக அங்கே இருக்கிறார்கள். தமிழகத்திலே அவர் களுக்கு என்ன வேலை. நீங்கள் வேண்டுமென்றே சொல்கிறீர்கள் அது உண்மையல்ல என்று அன்றைய தினம் சொன்னார்கள். ஆனால் உண்மை என்ன? அந்த வன்முறை கலாச்சாரத்திற்கு அந்த பயங்கரவாதத்திற்கு ஒரு விலைமதிக்க முடியாத உயிரை நாம் பலிகொடுக்க வேண்டி வந்தது. அப்போப்பட்ட வலிமைமிக்க, வறுமை நீங்கிய இந்தியாவை 21-ஆம் நூற்றாண் டுக்கு அழைத்துச் செல்வேன் என்று சொன்ன நம்மிடைய பாசமிக்க இராஜிவ் காந்தி அவர்களை நாம் பலி கொடுத்திருக்கிறோம். இதற்கெல்லாம் என்ன காரண ணம்? அவர்களுக்கு இங்கே ஆதரவு இருக்கிறது. அவர்களை இங்கே ஆதரிப்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், எங்க, இண்டு, இடுக்குகளில் அவர்கள் பதுங்கி இருந்தாலும், அவர்கள் மீது நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே

தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இப்படிப்பட்டவர்களை ஆதரித்திருக்கின்ற காரணத்தால்தான் இன்றையதினம் நீங்கள் இங்கே நடவடிக்கை எடுத்து— கடந்த 7, 8 மாதங்களுக்கு முன்னே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, அவையெல்லாம் உண்மையென்று நிரூபிக்கப்பட்டது. ஆயுதத் தொழிற்சாலைகள் தமிழகத்திலே இருந்தன. ஆயுதப் பயிற்சி முகாம்கள் தமிழகத்திலே இருந்தன. உண்மை. அதுமட்டுமல்ல, இவர்களுக்கு சங்கிலித் தொடர்போன்று ஒரு அமைப்பு இருந்தது தமிழகம் முழுவதும் என்று இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பின்னாலே புலன் விசாரணையிலே தெளிவாக்கப்பட்டு அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அந்த இயக்கத்தினுடைய முதுகெலும்பு உடைக்கப்பட்டது. ஆனால், இன்றைய தினம் இந்தப் புதிய ஆதரவு காரணமாக மீண்டும் மெல்ல, மெல்ல ஊடுருவல் ஆரம்பம் ஆகியிருக்கிறது. எனவேதான் இந்த நேரத்திலே அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஊடுருவல் இருக்கிறது. அந்த ஊடுருவலை நீங்கள் நிச்சயமாகத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

சென்ற மே மாதம் தமிழக முதல்வர் அவர்கள் கோவை வருவதாக இருந்த நேரத்தில் சில நாட்களுக்கு முன்னாலே கோவைக்குப் போனேன். போனவுடனேயே எனக்கு வந்த முதல் தகவல், அதிர்ச்சி தருவதாக இருந்தது. எல். டி. டி ஈ.யினர் கோவையிலே நடமாடுகிறார்கள். குறிப்பாக ஓரிரு பேர்கள் முக்கியமான பகுதிகளிலே நடமாடுகிறார்கள். இங்கே இருந்து கொண்டு பல்வேறு பகுதிகளுக்கும் அவர்கள் தொலைபேசியிலே தொடர்பு கொண்டிருக்கிறார்கள். திருகோணமலைக்கு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். டென்மார்க்கில் இருக்கின்ற கோப்பன் ஹேகனுக்கு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். தாய்லாந்தில் இருக்கிற பாங்காக்கிற்குத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மதுரை சம்பவத்தோடு ஒட்டிய பிரச்சினையைச் சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாக எல். டி.டி. ஈ. பிரச்சினை என்று சொன்னால் அதற்குரிய பதிலுரையை அரசாங்கத்திடமிருந்து பெறுவது கஷ்டமாக இருக்கும்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமாகத்தான் சொல்லுகிறேன். இந்தச் செய்திகளையெல்லாம்—அவர்கள் தொலைபேசி என்னைக் கொடுத்திருக்கிறேன். காவல்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். தொலைபேசிக்கு அவர்கள் பணம் செலுத்தியிருக்கிறார்கள். அதற்கான ரசீதினுடைய ஜெராக்ஸ் காபியைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றுவரை அவர்கள் என்ன



ஆனார்கள் என்பது தெரியவில்லை. அதேபோல் ஒரு தடா கைதி தப்பிச் சென்றிருக்கிறான். கோவை மாவட்டத்திலே, அங்கே உலவிக் கொண்டிருக்கிற தகவலை நான் கொடுத்திருக்கிறேன்.

*முற்பகல் 11—05*

கடந்த சில நாட்களாக நமக்கு வருகிற தகவல்கள் கொஞ்சம் கவலை அளிப்பதாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே நாகப்பட்டினத்திலே கடற்கரையில் 4 புலிகள் கைது செய்யப்பட்டதாகவும் செய்தி வந்தது. அதற்குப் பின்னாலே இராமேஸ்வரத்தில் 3 பேர்கள் குண்டு வைத்திருந்ததாகவும், ஜெல்லட்டின் குச்சி வைத்திருந்ததாகவும் சொல்லி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். குண்டு வைத்திருந்தது புலிகளுக்கு விற்பதற்காக என்று தகவல்கள் கூறுகின்றன. அதற்குப் பின்னாலே மத்திய உள்துறை அமைச்சர் ஒரு தகவலைச் சொன்னார்கள். பெங்களூர், கர்நாடகத்திலே புலிகள் சொத்துக்கள் வாங்கி வருகிறார்கள் என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்திலே 24 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், அதிலே 19 பேர்கள் எல்.டி.டி-யினர் என்றும் தமிழகத்தைச் சேர்ந்த தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த (ஐந்து பேர்கள்) அவர்களிடத்திலே பயிற்சி பெறுகிறவர்கள் என்றும் தகவல் வந்தது. இடுக்கி மாவட்டம் என்பது கோவை மாவட்டத்தினுடைய பார்டர், எல்லை. கோவையிலேயிருந்து ஒரு பக்கத்திலே வரலாம். மதுரை மாவட்டத்திற்கும் பார்டர், கோவையிலே இருந்து வரும் வனப் பகுதியிலே இருக்கிற இடுக்கி மாவட்டத்திலே 24 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடத்திலேயிருந்து 19 ஏ. கே. 47 ரைபில்கள் கைப்பற்றப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே வேதாரண்யம் பக்கத்தில் கோடியக்காடு பகுதியில் படகுகளுக்குத் தேவையான இன்ஜின்கள் 19, 20 இன்ஜின்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. டீசல், பெட்ரோல் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல் ஆந்திராவிலுள்ள நக்சலைட்டுகளுக்கு புலிகள் ஆயுத விற்பனை செய்து வருவதாகவும் ஆந்திர முதல் அமைச்சர் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். அபாயச் சங்கு ஊதி இருக்கிறார்கள். எனவேதான் நான் சொல்கிறேன், இப்படிப்பட்ட இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே ஒளிந்து கொண்டிருந்தாலும் அவர்களை வெளிக் கொணர வேண்டும். அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட இடத்தில் இருந்தாலும் அவர்கள் மீது

கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையினருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நமக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய காவல் துறையினருக்கு நாமும் ஓரளவு பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். நல்ல ஆயுதங்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். ஆயுதங்களோடு ஆயுதப் பயிற்சியும் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, விடுதலைப் புலிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பொங்கலூருக்கு அருகில் தொட்டம்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட லாரி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் ; நேற்றைய தினம் என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றைய தினம் பொங்கலூருக்கு அருகில் இருக்கிற தொட்டம்பட்டி என்ற கிராமத்தில் ஒரு துயரமான கோரமான விபத்து ஏற்பட்டிருக்கிறது. எரு ஏற்றி வந்த லாரி கவிழ்ந்ததன் காரணமாக ஏழு பெண்கள் உட்பட எட்டு பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலே அந்தப் பகுதியிலே நீண்ட நாட்களுக்குப் பின்னாலே நல்ல மழை பெய்தது எனவே சேறும் சகதியுமாக இருந்த அந்தப் பகுதியில் ஸ்கிட் ஆனதன் விளைவாக அந்த லாரி கவிழ்ந்து அதிலேயிருந்த விவசாயக் கூலிகள், விவசாயத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள், ஏழு பேர் பெண்கள், அத்தனை பேரும் பின்தங்கிய மிகவும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் கூலிப் பணத்தை நம்பியிருப்பவர்கள். எனவே, கருணை அடிப்படையில் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள், முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மரணம் அடைந்தவர்களைத் தவிர இன்னும் 7, 8 பேர் ஆஸ்பத்திரியிலே சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். பலத்த காயங்கள் அடைந்தவர்கள் இருக்கிறார்கள். சிறு காயங்கள் அடைந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் தமிழக முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

(அ) காவல் துறையினர் தாக்குதலுக்கு இலக்காவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுவது குறித்து—(தொடர்ச்சி)



முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் . மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சமய நல்லூர் காவல் நிலையக் குற்றப் பிரிவு சார்பு ஆய்வாளர் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உட்பட 20 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம், சமயநல்லூர் காவல் நிலையக் குற்றப் பிரிவு சார்பு ஆய்வாளர், திரு. கிருஷ்ணசாமியும், காவலர் திரு. ராஜூவும், 19-9-1992 அன்று இரவு சமயநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 467/92 மற்றும் 468/92 வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தேடுவது தொடர்பாக இரவு ரோந்து சென்றனர். திரு. பாண்டி என்பவருடைய வாடகை ஆட்டோவைப் பயன்படுத்தி அவர்கள் கூடல் நகர், ரயிலார் நகர் பகுதிகளில் ரோந்து வரும்போது இரவு சுமார் 11-45 மணிக்கு, சந்தேகப்படும் வகையில் ரயிலார் நகர் ஆனையூர் குடியிருப்பு ரவுண்டானாவிற்கு அருகில் TN—59—2663 என்ற எண்ணுள்ள ஆட்டோ ஒன்று நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தனர். அந்த ஆட்டோவின் பின் சீட்டில் ஒரு நபர் மட்டும் உட்கார்ந்து இருந் ஆட்டோவின் டிரைவர், டிரைவர் சீட்டில் உட்கார்ந்து தார். அந்த ஆட்டோவின் டிரைவர், /டிரைவர் சீட்டில் உட்கார்ந்து இருந்தார் ,சார்பு ஆய்வாளர் திரு. கிருஷ்ணசாமியும், காவலர் திரு. ராஜூவும் தாங்கள் வந்த ஆட்டோவை விட்டு இறங்கி, நின்று கொண்டிருந்த ஆட்டோவின் பின் சீட்டில் உட்கார்ந்து இருந்த நபரைக் கீழே இறங்கச் சொல்லி அதன் பின்னர் விசாரித்தார்கள். அந்த நபர் தன்னுடன் வந்தவர் பக்கத்தில் உள்ள ஒரு வீட்டில் தெரிந்தவரைப் பார்க்கச் சென்று இருப்பதாகவும், தான் அவருக்காகக் காத்து இருப்பதாகவும் கூறி உள்ளார். அவர் கூறியதை நம்பாத சார்பு ஆய்வாளர் அந்த நபரை அவருடைய நண்பர் எந்த வீட்டிற்குச் சென்றுள்ளார் என்பதைக் காட்டும் படி கேட்டிருக்கிறார். அந்த நபர் மாறி மாறி வீடுகளைக் காட்டிவிட்டு, பின் தப்பி ஓட முயற்சி செய்துள்ளார். அவர் தப்பி ஓடிவிடாதபடி அவரைத் தடுக்க சார்பு ஆய்வாளர் முயன்றபோது, மேற்படி நபர், தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த தானியங்கித் துப்பாக்கியை ( Antcmatic Pistol )- எடுத்துச் சார்பு ஆய்வாளரின் மார்பில் தொடர்ந்து சுட, சார்பு ஆய்வாளர் திரு. கிருஷ்ணசாமி மார்பில் குண்டுகள் பாய்ந்து அந்த இடத்திலேயே இறந்து விட்டார். உடனிருந்து காவலர் திரு. ராஜூவும், ஆட்டோ ஓட்டுநர் திரு. பாண்டியும் மேற்படி நபரைப் பிடிக்க முயன்றபோது, அந்த நபர் துப்பாக்கியால்

அவர்கள் மீதும் தொடர்ந்து சுட்டார். அதில் காவலர் திரு. ராஜூவுக்கு தொண்டை மற்றும் மார்பு ஆகிய இடங்களிலும் ஆட்டோ டிரைவர் திரு. பாண்டிக்கு இடது தொடையிலும் குண்டுக் காயங்கள் ஏற்பட்டன. அந்த நபர் தான் வந்த ஆட்டோவில் ஏறி சம்பவ இடத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகி விட்டான். காயம் அடைந்த காவலர் திரு. ராஜூவும், ஆட்டோ டிரைவர் திரு. பாண்டியும் மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். துப்பாக்கியால் சுட்ட நபர் யார் என்று இன்னும் தெரியவில்லை.

இந்த சம்பவத்தில் அந்த நபரால் உபயோகப்படுத்தப்பட்ட ஆட்டோ கைப்பற்றப்பட்டுள்ளது. அந்த ஆட்டோவின் டிரைவர் சுப்பிரமணியம் பிடிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக சமயநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 477/92 இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 307, 302 மற்றும் இந்திய ஆயுதச் சட்டப் பிரிவு 25-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை தொடர்கிறது.

சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட 12 வெடித்த தோட்டாக்களை ( Empty Cartri ges ) வைத்துப் பார்க்கும் போது குற்றவாளிகள் பொதுவாக இலங்கைப் போராளிகள் பயன்படுத்தும் 9 எம். எம். பிஸ்டல்-ஐப் பயன்படுத்தியிருக்கிறான் என்று தெரியவந்துள்ளது. எனவே, குற்றவாளி ஒரு இலங்கைப் போராளியாகவோ அல்லது அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வரும் தமிழகத்தைச் சேர்ந்த சில தீய சக்திகளைச் சார்ந்தவராகவோ இருக்கவேண்டும் என்று வலுவான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு காவல்துறைத் தலைவர் திரு. பந்த் அவர்களின் நேரடி மேற்பார்வையில் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. குற்றவாளியைப் பிடிக்க ஒரு சிறப்பு போலீஸ் படை அமைக்கப்பட்டு அதன் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவம் குறித்து எனக்குத் தகவல் திடைத்வுடன் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிர் இழந்த திரு. கிருஷ்ணசாமியின் கடமை உணர்வினையும், வீரச் செயலையும் பாராட்டும் வகையில் அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்க வேண்டும் என்றும், அவர் பணியில் இருக்கும்பொழுது கடைசியாகப் பெற்ற ஊதியத்தைக் குடும்ப ஒய்வு ஊதியமாக ஒவ்வொரு மாதமும் வழங்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளேன். மேலும், இச்சம்பவத்தில் காயமுற்ற காவலர் திரு. ராஜூ, மற்றும் ஆட்டோ டிரைவர் திரு. பாண்டி ஆகியோருக்கு தலா ரூபாய் 10,000 வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன். குற்றவாளியைக் கண்டு பிடிக்கத் தகவல் கொடுப்பவர்களுக்குச் சன்மானமாக ஒரு லட்சம் ரூபாய் வரை அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளேன்.



விரைவில் குற்றவாளியைக் கண்டுபிடிக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் நிகழாவண்ணம் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் காவல் துறையினருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது அண்மையில் காவலர்கள் சுட்டுக் கொல்லப்படும் நிகழ்ச்சிகள் அதிகரித்து வருகின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அத்தோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்கள் கடந்த ஆண்டு இப்படி கொல்லப்பட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

<u>திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிலேயே சொல்லி முடித்திருக்கலாம். குறுக்கீடுகள் வந்துவிட்டதால் நின்று போய் விட்டது. மீண்டும் அதை எடுக்க வேண்டாம் என்று தமிழகத்திற்கு வந்துவிட்டேன். 1431 பேர்கள் என்பது அகில இந்திய புள்ளி. தமிழ்நாட்டிலே அந்த சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

<u>மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் புள்ளிவிவரத்தை அவர்கள் முன்பு பேசும்போது தெளிவாகச் சொல்லாததால் நானே அதிர்ச்சி அடைந்தேன். எனக்கே தெரியாமல் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் எப்படித் தமிழ்நாட்டிலே கொல்லப்பட்டார்கள் என்ற போது வியப்பிலே ஆழ்ந்து போனேன். விளக்கத்திற்கு நன்றி.

காவலர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்த அரசாங்கத்துக்கு அந்த அக்கறை நிறையவே உள்ளது. நம்முடைய காவலர்களின் உயிர் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் என்னைவிட, இந்த அரசைவிட அக்கறை உள்ளவர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11.15

இத்தகைய தேச விரோதச் சக்திகள், போராளிகள் தமிழகத்தில் செயல்பட முடிகிறது என்று சொன்னால், இத்தகைய தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட முடிகிறது என்று சொன்னால், அவர்களுக்கு சில அரசியல் தலைவர்களும், சில அரசியல் கட்சிகளும் பகிங்கரமாக கொடுத்து வருகின்ற ஆதரவும், ஊக்கமும், ஆக்கமும்தான் அதற்குக் காரணம். தேச விரோதச் சக்திகள் மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் தேச விரோதச் செயல்கள் மேலும் தொடர்ந்தால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைவிட இன்னும் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்க இந்த நேரத்தில் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே சமயத்தில் இத்தகைய தீய சக்திகளை அடக்குவது,
ஒடுக்குவது என்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்று மட்டும்
விட்டுவிட முடியாது. இதையெல்லாம் அரசாங்கம் மட்டுமே
செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதும் தவறு. பொது
மக்களும் இதில் ஒத்துழைக்க வேண்டும். நீதித் துறையும்--
ஜுடிசியரி — இதில் முக்கியமாக ஒத்துழைக்க வேண்டும். உதா
ரணத்திற்கு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினையை மீண்டும்
இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய மாநாடு — ஊர்வலத்தின்
தொடர்பாக சிலபேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள்
வேறு சில செக்ஷன்களின் கீழ் கைது செய்யப்பட்ட போதிலும்
அதில் முக்கியமான செக்ஷன் 120-பி Conspira y மற்றும் செக்ஷன்
124-ஏ அவர்கள் பெட்ரோபாளிடன் மாஜிஸ்ட்ரேட்டுக்கு
முன்னால் ஆஜர் செய்யப்பட்டார்கள். இந்திய தண்டனைச்
சட்டம் செக்ஷன் 120-பி ரெட்வித் செக்ஷன் 124-ஏ—ன் கீழ்
ஒருவர் கைது செய்யப்படும்போது, அவரை ஜாமீனில்
விடுவதற்கு ( That Magistrate is not Competent ) அந்தக்
கோர்ட்டுக்கே அந்த ஜுரிஸ்டிக்ஷன் கிடையாது. விவரை
செஷன்ஸ் கோர்ட்டில்தான் ஜாமீனில் விட முடியும். அப்படி
இருக்கும்போது இதை எல்லாம் நன்கு படித்த, உணர்ந்த ஒரு
மாஜிஸ்ட்ரேட் தெரிந்தே இத்தகைய ஒரு தவறான நடவடிக்
கையை எடுத்திருக்கிறார் என்று சொல்லும்போது—அதனால்—
தான் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன். தேச விரோத சக்தி
களை ஒடுக்குவது, அடக்குவது, அவர்களுக்குத் தண்டனைக்
கொடுப்பது என்பது இந்த அரசாங்கத்தின் பொறுப்பு மட்டும்
தானா, பொதுமக்களுக்கு அதில் பங்கு இல்லையா? தமிழக
மண்ணில் செயல்படுகின்ற மற்ற அரசியல் கட்சிகளுக்கு அந்தப்
பொறுப்பு இல்லையா? அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அந்
தப்பொறுப்பு இல்லையா' நீதித் துறைக்கும் அந்தப்' பொறுப்பு
இல்லையா? மற்றவர்கள் செய்வதைச் செய்து கொண்டே இருப்
பார்கள். தவறுகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அதன்
விளைவுகள் எல்லாவற்றுக்கும் காரணம் அரசுதான் என்று
எடுத்துக் கொண்டால் இது எப்படி நியாயமாக முடியும்? எல்லா
தரப்பினருடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் அரசு எந்த ஒரு
நடவடிக்கையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். அதில்
வெற்றியும் காண முடியும். இந்த அரசு எத்தனையோ நிர்ப்
பந்தங்களுக்கு இடையே மிகவும் சிறப்பான முறையில் சட்ட
ஒழுங்கைப் பராமரித்து வருகிறது என்றுதான் சொல்ல வேண்
டும். (மேசையைத் தட்டும் ஒலி).

மதுரையில் கொல்லப்பட்ட உதவி ஆய்வாளர் அன்று இரவு.
ரோந்துப் பணிக்குச் சென்றபோது ஆயுதங்கள் இன்றி சென்றிருக்
கிறார். அதனால்தான் அவர் கொல்லப்பட்டிருக்கிறார்.
அதன் பிறகு, இனிமேல் இரவு நேரங்களில் ரோந்துப் பணியில்
செல்லும் இத்தகைய காவலர்கள் அவசியம் ஆயுதங்களை எடுத்



துச் செல்ல வேண்டுமென்று இப்பொழுது ஆணையிட்டிருக்கி றோம். ஆனால், அந்த உதவி ஆய்வாளர் ஆயுதங்கள் இன்றி அன்று செல்ல வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? ஏற் கெனவே, தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்த வேண்டு மென்பதற்காக, கடந்த ஆண்டு இந்த எல்.டி.டி.ஈ.ஆல் இருக் கின்ற ஆபத்தை கருத்தில் கொண்டு, தமிழக காவல் துறையை நவீனப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு சமர்ப் பித்தோம். 'ஆயுதங்கள் வாங்க வேண்டும். ஜீப்புகள் வாங்க வேண்டும், ஓயர்லெஸ் கருவிகள் வாங்க வேண்டும், எத்தனையோ சாதனங்கள் வாங்க வேண்டும், இதற்காக 80 கோடியே 45 லட்சம் ரூபாயை மத்திய அரசிடம் கேட்டோம். ஆனால் மத்திய அரசு நீண்ட நாட்கள் கழித்து அதற்காகக் கொடுத்தது, வெறும் 10 கோடி ரூபாய்தான். இந்த 10 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? முழுமையாக எல்லாக் காவல் நிலையங்களுக்கும் ஜீப் வாங்க முடியுமா? முடியாது. முழுமை யாக தேவைப்படுகின்ற அளவுக்கு ஒயர்லஸ் சாதனங்கள் வாங்க முடியுமா' முடியாது. முழுமையாக எல்லாக் காவலர்களுக்கும் ஆயுதங்கள் வழங்க முடியுமா' முடியாது. எனவே, அந்த 10 கோடி ரூபாயையும் வைத்துக்கொண்டு மாநில அரசால் எவ்வ ளவு செலவு செய்ய முடியுமோ, இந்த நிதி நெருக்கடியில் அதை யும் செலவு செய்து முடிந்தவற்றைச் செய்திருக்கிறோம்.

ஆனால், இத்தகைய நிலைமை தமிழ்நாட்டில் இருக்கின்ற போது தமிழ்நாட்டையே துண்டாடி, இந்தியாவிலிருந்து பிரித்து, அதை ஒரு தனி நாடாக அறிவிக்கவேண்டுமென்று சில சக்திகள் அதற்காக வேலை செய்கின்றபோது, இங்கே காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தால் அதை மத்திய அரசு ஒரு அவசர அவசியத் தேவையாகக் கருதியிருக்க வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-20.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இந்த அரசுக்குப் பயன்படும் வகையில், தமிழ்நாட்டுக்குப் பயன்படும் வகையில் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர், மத்தியிலே ஆளும் காங்கிரஸ் கட்சி யின் உறுப்பினர். அவர் அடிக்கடி டெல்லிக்குச் சென்று, மாண்பு மிகு பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களையும் சந்திக்கிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதற்காக ஒரு அவசர அவசியப் பயணத்தை மேற்கொண்டு, டெல்லி சென்று மாண்புமிகு பிரத மர் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டுக்குக் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு கேட்டுள்ள 80 கோடியே 45 இலட்சம் ரூபாயில் 10 கோடிதானே கொடுத்திருக் கிறீர்கள், மீதமுள்ள 70 கோடியே 5 இலட்சம் ரூபாயை உட

ண்டியாகத் தயவு செய்து தாருங்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கேட்டு, பெற்றுக் கொடுப்பார்கள் என்றால் இந்தத் தமிழ்நாடு சட்டசபையில் அதற்காக ஒரு விசேஷக் கூட்டத்தைக் கூட்டி, அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்ற ஒரு தீர்மானத்தையே நிறைவேற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இங்கே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், தீய சக்திகளை, தேச விரோத சக்திகளை அடக்கவும், ஒடுக்கவும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவற்றை இந்த அரசு எடுத்து வருகிறது, தொடர்ந்து எடுக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொங்கலூருக்கு அருகில் தொட்டம்பட்டி கிராமத்தில் ஏற்பட்ட லாரி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று பகல் 12 மணியளவில் கோவை ஊரகக் காவல் துறை மாவட்டத்தைச் சேர்ந்த பொங்கலூருக்கு அருகில் தொட்டம்பட்டி—பொங்கலூர் சாலையில் பொது மக்களை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்த ஒரு லாரி தலைகுப்புற கவிழ்ந்ததில் 8 நபர்கள் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தது குறித்தும், அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்பது குறித்தும், இங்கே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட லாரி விபத்தில் உயிர் இழந்த 8 நபர்களின் குடும்பத்தினருக்குத் தலா 10,000 ரூபாய் உதவித் தொகையும், அந்த விபத்தில் கடுமையாகக் காயம் அடைந்தவர்களுக்கு தலா 5,000 ரூபாய் உதவித் தொகையும், சாதாரணக் காயம் அடைந்தவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் உதவித்தொகையும் தனி இனாமாகக் கருதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நேற்று நடந்த கோர விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். நான் கேட்டுக் கொண்ட உடனே, முதலமைச்சர் அவர்கள் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு 10 ஆயிரமும், சொற்பக் காயம் அடைந்தவர்கள், கடுமையான காயம் அடைந்தவர்களுக்கு நிவாரணமும் அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மற்றபடி என்னைப் பார்த்து மத்திய அரசிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நான் தொடர்ந்து இந்த அவையில் வலியுறுத்திக் கொண்டுதான் வருகிறேன். நம்முடைய காவல் துறையினர் நவீன ஆயுதங்களைப் பெற வேண்டும். நல்ல பயிற்சி பெற வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறேன். தமிழக அரசு கேட்டிருக்கிற அந்தத் தொகையில் எந்த அளவுக்கு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடத்தில் நிச்சயமாக எடுத்துரைப்பேன், வலியுறுத்துவேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மேல்நிலைப்பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த பிரச்சினை. மேல்நிலைப் பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் போராடி வருவது குறித்து திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. மா. சுந்தரதாஸ், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கே. ஆர். இராமசாமி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. செல்வராஜ் ஆகியோர் இந்தப் பிரச்சினையை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் சார்பில் திரு. வே. தம்புசாமி அவர்களை, அந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11—25

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஐந்து அம்சக் கோரிக்கையை அரசுக்கு விண்ணப்பித்து, அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத காரணத்தால், அவர்கள் தொடர்ந்து பல்வேறு கட்டங்களில் இயக்கங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அப்படித் தொடர்ந்து இயக்கங்கள் நடத்திக்கொண்டிருக்கிற அந்தப் பட்டதாரி ஆசிரியர்களை அழைத்து அவர்களுடைய கோரிக்கைகள் எப்படிப்பட்டவை என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலித்து, அந்தக் கோரிக்கைகளை அரசு எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டும். அப்படித் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை இதுவரையிலும் அரசு அழைத்துப் பேசாமையானது வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஒரு இயக்கத்தில் கோரிக்கைகள் எழுப்புகிற போது, அவர்கள் போராட்டத்தில் இறங்குவதற்கு முன்னதாவே அரசுத் தரப்பில் அமைச்சரோ, அல்லது அரசு அதிகாரிகளோ அவர்களை அழைத்துப் பேசினால் எதிர்

காலத்தில் அத்தகைய போராட்டங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அந்த வகையில்தான் இப்படித் தொடர்ந்து அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிக் கொண்டு இருக்கிற நேரத்தில். தமிழக அரசு விரைந்து அவர்களை அழைத்துப் பேசி—கல்வி அமைச்சர் அவர்கள், ஆசிரியர்களோடு பேசி விரைவாகத் தீர்த்து குறைகளைக் களைய வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கும் தீர்மானத்தை இங்கே கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நடத்திவருகின்ற போராட்டம் தொடர்பாக கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த கவன ஈர்ப்பின் மீது சில விவரங்களைத் தர நான் விரும்புகிறேன்.

அவர்கள் அரசு அதிகாரிகளைச் சந்திக்கவில்லை என்பதும், அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படவில்லை என்பதும், அவர்களை அழைத்துப் பேசவில்லை என்று சொல்வதும் சரியல்ல. அவர்களிடத்திலே அரசு அதிகாரிகள் பேசியிருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு அவர்கள் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப் போகிற முடிவையும் சொல்லியிருக்கிறார்கள். இந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எனப்படுபவர்கள், மேல்நிலைப் பள்ளிகளில் 11-வது, 12-வது வகுப்புகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள். அவர்கள் மட்டும் அல்லாது, இந்த மேல்நிலைப் பள்ளித் திட்டத்தை நாம் கொண்டு வந்த நேரத்தில், ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றி வந்த அனுபவம் வாய்ந்த பி.ஏ., பி.டி., மற்றும் பி.எஸ்.சி., பி.டி., ஆசிரியர்களையும் மேல்நிலை வகுப்புகளுக்கு நாம் எடுக்க அனுமதித்து, அவர்கள் 'இன்டகிரேடட் டீச்சர்கள்' என்றும் நாம் கூறி வந்திருக்கிறோம்.

ஆகவே இன்றைக்கு இரு சாராரும், 11வது, 12வது வகுப்புகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரு சாராருக்கும் இடையில் இருக்கிற சில பிரச்சினைகளும் இந்தக் கோரிக்கையில் இருக்கின்றன. திரு. கே. எம். இளங்கோவன் தலைமையில் இருக்கிற தமிழ்நாடு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கமும், திரு. ஜி. மூர்த்தி தலைமையில் இருக்கிற தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கமும் இன்றைக்கு போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். திரு. மயில்சாமி தலைமையில்



அமைந்துள்ள தமிழ்நாடு பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதிலே சில பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டும் வருகிறார்கள். இவர்கள் கோரிக்கைகளில் ஒரு கோரிக்கை பி.ஜி. ஆசிரியர்களின் கல்வித் தகுதியையும், பணிப் பளுவையும் கருத்தில் கொண்டு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 2,200—4,000 ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதும் ஒன்றாகும். இப்படித் திடீரென்று ஒரு சாரார் தங்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டால், அந்தக் கோரிக்கையை அரசு எப்படி பரிசீலிக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய பரிசீலனைக்கே நான் விட்டு விடுகிறேன்.

இப்படிப்பட்ட கோரிக்கைகள் அடுத்த சம்பளக் கமிஷன் நிறுவப்படுகிறபோது அவர்கள் முன்னாலே வைக்கப்பட்டு, அதனுடைய நியாயத்தை எடுத்து வைக்க வேண்டுமே தவிர—அல்லது இதற்கு முன்னாலே அமைக்கப்பட்டிருந்த சம்பளக் கமிஷன் முன்னாலே அந்தக் கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அதையெல்லாம் நாம் பரிசீலித்துத்தான் அந்தச் சம்பளத்தை நிர்ணயம் செய்கிறோம். இவ்வளவு ஆண்டு காலமாக சம்பளம் பெற்று வந்தவர்கள்-இடையில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக இங்கே ஒரு ஆட்சி கூட இருந்திருக்கிறது. அந்த ஆட்சி இருந்தபோது இப்படியெல்லாம் அவர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபடாமல், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு இப்படிப்பட்ட போராட்டத்தில் ஈடுபடுவது என்பது நியாயமாக எனக்கு படவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

எங்களிடத்தில் பேசி கோரிக்கை நிறைவேறாமல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் ஆசிரியர்கள். இப்போது இங்கே 13 மாண்புமிகு உறுப்பினர்கள் மூலமாக இந்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த 13 மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலுள்ள அந்தத் தொடர்பை நானும் பயன்படுத்திக் கொண்டு எங்களுடைய நியாயங்களைச் சொல்வதன் மூலம் அவர்களைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 11.30

இரண்டாவது கோரிக்கை மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கு, உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்பதாகும். இன்றைக்கு மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களையும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும்

நாம் நியமனம் செய்து வருகிறோம். ஆனால் 11-வது, 12-வது வகுப்புக்கு சொல்லித் தந்துகொண்டு வருகின்ற உட்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் இன்றைக்கு அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள். அதோடு மாநிலக் கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் இந்த முதுகலைப் பட்டத்திற்கு சமமான ஒரு தகுதி பெற்று இருக்கின்ற ஆசிரியர்கள். தாங்களும் தலைமை ஆசிரியர்களாக வரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வந்தார்கள். அந்தக் கோரிக்கையில் இருக்கின்ற நியாயத்தை உணர்ந்த அரசானது இப்போது ஒரு முடிவு எடுத்திருக்கிறது. அதிலே உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 2 பங்கும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 5 பங்கும், உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு 2 பங்கும் என்ற இந்த விகிதாச்சாரத்தின்படி மேல் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் காலியிடங்கள் நிரப்பப்படும் என்று ஒரு அறிவிப்பை கல்வி மானியத்தின் போது பதில் அளிக்கின்றபோது அரசின் சார்பில் நான் அறிவித்து இருக்கிறேன். அந்த அடிப்படையில் இப்போது ஒரு உத்தரவு பிறப்பித்து இருக்கிறோம். அந்த உத்தரவைக் கூட இந்த ஆசிரியர்கள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் தடை வாங்கி நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டாவது கோரிக்கையில் இந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் கோரிக்கையை நாம் ஏற்போமானால் அங்கே உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுடைய கோரிக்கையை நான் ஏற்க முடியாத நிலைமையும், அல்லது உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுடைய கோரிக்கையை ஏற்றால் இவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியாத நிலைமையில் தான் அரசு இருக்கிறது. ஆகவே, நியாயங்களை உணர்ந்து 3 தரப்பினருக்கும் ஒரு நியாயம் வழங்குகின்ற முறையில் 2:5:2 என்ற விகிதாசாரத்தில் நிரப்புவது என்கிற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதிலே கூட இவர்களுக்கு 5 பங்குகள் தருகிறோம் என்று நாம் சொல்லியிருக்கிறோம். நாம் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுடைய அனுபவத்தை மனதில் வைத்துதான் இந்த முடிவை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து அவர்கள் சொல்லுகிற இன்னொரு கோரிக்கை மேல்நிலைப் பள்ளிகளை இளநிலைக் கல்லூரிகளாக அறிவிக்க வேண்டும் என்பதாகும். (குறுக்கீடு) எல்லோருமே இப்படி பேசிக் கொண்டு இருந்தால் நான் எப்படி சொல்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறப்புக் கவன ஈர்ப்பு எழுப்புகிறபோதும் அமைச்சர்கள் பதிலுரை கூறுகிறபோதும் உறுப்பினர்கள் யாரும் அல்லாது மாண்புமிகு அமைச்சர்களும் அமைதி காக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது ஒரு முக்கியமான பிரச்சினைக்கு நாம் வந்திருக்கிற காரணத்தால்தான் நான் அதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளை இளநிலைக் கல்லூரிகளாக 'ஜூனியர் காலேஜ்' களாக மாற்ற வேண்டும் என்று அந்த ஆசிரியர்கள் கேட்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் மேல்நிலைக் கல்வியை உயர்நிலைப்பள்ளியில் மட்டும் வைக்கவேண்டும் என்ற கொள்கையை நாம் கொண்டு வந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களில் இப்படியும் வைத்து இருக்கிறார்கள், ஜூனியர் கல்லூரிகளாகவும் வைத்து இருக்கிறார்கள், இப்படி எல்லாம் இருக்கிறது. நம்முடைய அனுபவம் எப்படி இருக்கிறது என்றால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே கொண்டு வந்த இந்த திட்டமானது பெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது. பி.யூ.சி. இருந்தபோது 40 சதவீதம் மட்டுமே தேறி வந்த மாணவர்கள், இந்தத் திட்டம் வந்ததற்கு பிறகு 60 சதவீதம் வெற்றி பெற்றிருக்கிறார்கள். பி.யூ.சி. வகுப்பு இருந்தபோது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 18சதவீத இடங்களை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தார்கள். இந்தத் திட்டம் வந்ததற்குப் பிறகு 18 சதவீதம் பூர்த்தி செய்து ஒப்பன் கோட்டாவில் ஒரு சதவீதம் பெறுகின்ற அளவுக்கு தங்களுடைய திறமையை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைப் பார்த்து ஜூனியர் கல்லூரிகளைக் கொண்டு வந்த கேரள மாநிலம் இன்றைக்கு தன்னை திருத்திக்கொள்கிறது. ஜூனியர் கல்லூரிகளை நாங்கள் வைத்துக்கொள்ள மாட்டோம். தமிழ்நாட்டில் இருப்பதைப்போலவே அதைக் கொண்டுவருகிறோம் என்று சொல்லி இந்த ஆண்டிலேயிருந்து நம்மைப்பார்த்து அவர்கள் திருத்திக்கொள்கிறார்கள். நாம் கொண்டுவந்து செயற்படுத்துகிற திட்டத்தைப் பார்த்து அவர்கள் திருத்திக்கொள்கிறார்கள். இந்த நிலைமை தான் இன்றைக்கு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமே நம்முடைய தேசியக் கல்விக் கொள்கை தான். அதிலே என்ன சொல்கிறோம் என்றால் 1986-ல் வந்த கல்விக் கொள்கை இப்போது 1992-ல் செயல் படுத்துகிற முறைகளைப் பற்றி எல்லாம் சொல்கிறபோது அங்கே என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்றால், நான் சபாநாயகருடைய அனுமதியோடு இதைப்படிக்கின்றேன்:

'In order to ensure that during 8th Plan period a com[illegible] structure of School Education i.e. 10, 5+3+[illegible] is established throughont the country, the following stages a[illegible]visaged :

முற்பகல் 11-35.

As an immediate step States, Union Ter[illegible] that have not yet switched over to the Natioanl Common [illegible] structure will be urged to see that every new School which [illegible] follows

164947

D
V211, 31 ... N92 ... 2

10+2 structure. States/Union Territories that have already initiated the process of bringing the +2 stage into the School system, will be urged to intensify the above in this rogard ஆகவே இந்த பிளஸ் 2 வகுப்பு என்பது பள்ளிக் கல்வியோடுதான் இருக்க வேண்டும் என்பது தேசியக் கல்விக் கொள்கையாகும். இந்த பிளஸ் 2 வகுப்பு, காலேஜ் எஜிகேஷன் அல்லது ஹையர் எஜிகேஷன் என்று சொல்லப்படுவதில்லை. இதை செகண்டரி எஜிகேஷன் என்று தான் சொல்கின்றோம். ஆக அந்த முறையில் தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படையில் நாம் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அது வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிற நிலைமையில் நம்மைப் பார்த்து மற்ற மாநிலங்கள் பின்பற்று இருக்கின்ற நிலையில் ஒரு தவறான பாதைக்கு முதுகலைப் பட்டதாரிகளில் சில பேர் நம்மைப் போகச் சொல்வதோ, அதற்காக கோரிக்கைவைப்பதோ, அதற்காக போராட்டம் நடத்துவதோ, அதுவும்கூட தேச விரோதமான காரியம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டினுடையா நிலைமையை நான் துல்லியமாகச் சொல்ல வேண்டுமேயானல் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்கள் 85, 90, 95 மார்க் வாங்கி இன்றைக்கு கல்லூரியிலே இடம் கிடைக்காமல் இருக்கின்றார்கள் என்கின்ற அளவுக்கு இந்த மேல்நிலைக் கல்வி வளம் பெற்று செழித்து இங்கே வளர்ந்து இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நேற்று கூட ஒருவர் சொன்னார். ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண் பர்ஸ்ட் கிளாஸ் வாங்கி இருக்கிறது, பி.எஸ்ஸி.சயிலே பர்ஸ்ட் கிளாஸ் வாங்கி இருக்கிறது. எம்.எஸ்ஸி.[யிலே இடம் கிடைக்கவில்லை என்று சொல் கிறபோது இந்தத் தமிழ்நாட்டினுடையக ல்விப் பிரச்சினையே அந்த இடத்திலேதான் இருக்கிறதே தவிர, மேல் நிலைக் கல்வி மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதைக் கெடுக்கின்ற போராட்டத்தைத் தான் இந்த முதுகலை பட்டதாரிகள் இன்றைக்கு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

அதற்கு அடுத்து, பி. ஜி. ஆசிரியர்கள், எம்.பில்., பி.எச்டி. என்ற உயர் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு ஊக்க ஊதியம் தரப்பட வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு முடிவை அரசு விரைவில் அறிவிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே சில சம்பவங்களைச் சொல்லாமல் நான் இருக்க முடியாது. ஆசிரியர்கள் போராடுவது என்பது அவர்களுக்கு இருக்கின்ற உரிமையாக இருக்கலாம். ஆனால், அதிலே யும் ஒரு நியாயம், அதிலேயும் சில முறைகள் இருக்க வேண்டும். ஆசிரியர் தினத்தன்று எனக்குக் கருப்புக் கொடி காட்டுகிறார்கள்; எனக்குக் கருப்புக் கொடி வேறு நாட்களிலே காட்டலாம். ஆசிரியர் தினத்தன்று தான்



காட்ட வேண்டுமென்பதில்லை. கல்யாண வீட்டிலே போய் ஒப்பாரி வைப்பது என்பது ஒரு நாகரீகமான செயல் அல்ல. அது மட்டுமல்ல. கரூரிலே நடைபெற்ற சம்பவங்களும் மற்ற இடங்களிலே நடைபெற்ற சம்பவங்களும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு வந்து இருக்கும் என்று கருதுகின்றேன். கரூரில் இவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இவர்களுக்கு ஆதரவாக மேல்நிலைப் பள்ளி மாணவர்களைத் தூண்டுகிறார்கள்; அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அதோடு நிற்கவில்லை. கரூரில் இருக்கின்ற பெண்கள் பள்ளியில் அந்த மாணவர்கள் நுழைந்து அங்கேப் படித்துக்கொண்டு இருந்த மாணவிகளை மானபங்கம் செய்து இருக்கிறார்கள். இதற்கு யார் பொறுப்பு? இத்தகைய தீய செயல்களிலே மாணவர்களைத் தூண்டிவிடுகிற அந்த ஆசிரியர்களுக்கு, அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கை எடுக்கின்ற போது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய ஆதரவைத் தர வேண்டுமே தவிர அதற்குக் குறுக்கே நிற்கக்கூடாது.

இன்னொரு பிரச்சினை மாணவர்களிடத்திலே கேட்க இருக்கிறார்கள். 11-வது வகுப்புக்கு பரீட்சை கூடாதாம். முனபு 1-வது வகுப்பிலிருந்து 3-வது வகுப்பு வரைக்கும் பரீட்சை இல்லாமல் இருந்தது. அதையே இப்போது வைத்து இருக்கின்றோம். 11-வது வகுப்பிலே பரீட்சை வைக்கக்கூடாது என்றால், பரீட்சை ஏற்கெனவே இருக்கிறது. இப்போது நாம் என்ன சொல்கிறோம் என்றால், மாவட்ட அளவிலே முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலே ஒரு பரீட்சை இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதை எதற்காகச் சொல்கிறோம் என்றால், எங்களுடைய கவனத்திற்குச் சில நிகழ்ச்சிகள் வருகின்றன. 11-வது வகுப்புப் பாடங்கள் நடத்தப்படுவதில்லை 12-வது வகுப்புப் பாடங்களையே, 11-வது வகுப்பிலே, 12-வது வகுப்பிலே சில குறிப்பிட்ட பிரிஸ்டீஜியஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் பெரிய பள்ளிக் கூடங்கள் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பள்ளிக்கூடங்களிலே அவர்கள் நடத்துகிறார்கள். அதன் மூலம் 10, 15 மார்க் அதிகம் பெறுகிறார்கள். இன்ஜினியரிங் கல்லூரி மெடிக்கல் கல்லூரி போன்ற கல்லூரிகளில் அனுமதி வருகின்ற போது 10 இடங்கள், 20 இடங்கள் என்று அவர்கள்— மற்றவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடங்களை அபகரிக்கின்ற அளவுக்கு ஒரு தவறான போக்கு, மற்றைய மாணவர்கள் சமுதாயத்துக்கு ஒரு எதிரான போக்கு— அந்த அடிப்படையிலே சில பள்ளிகள் நடக்கின்றன; ஆகவே, அதை விடக் கூடாது.

முற்பகல் 11-40.

அப்புறம் அவர்கள் படித்து என்ஜினியரிங் கல்லூரிக்குப் போய் அந்த 11-வது வகுப்பில் படித்திருக்க வேண்டிய அந்தப் பாடம் சம்பந்தமான அறிவு இல்லாத காரணத்தால் எவ்வளவு சங்கடப்படுகிறார்கள் என்பதை அங்கேயிருந்து வருகிற அறிக்கைகள் நமக்கு சொல்கின்றன. ஆகவே, 11-வது வகுப்பில் தேர்வு

வைப்பது என்பது ஏதோ மாணவர்களுக்கு இல்லாத சுமையை, கஷ்டத்தை ஏற்படுத்துவது அல்ல. ஆகவே, தங்களுடைய போராட்டத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக மாணவர்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி அவர்களைத் தூண்டி விடுவது என்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர் தயவை, உதவியை நான் நாடுகிறேன். சமுதாய நலன் கருதி அந்த ஆசிரியர்களுக்கு தக்க அறிவுரையைச் சொல்லி, அதிகாரிகளைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கைகளில் நியாயமான கோரிக்கைகள் எதுவுண்டோ அதை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, இது போன்ற போராட்டங்களில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுடைய நலனைக் காப்பாற்றுவதில் இன்னுமொன்றை நான் சொல்கிறேன். சென்ற ஆண்டு சி. பி. எஸ். இ. என்ற தேர்வின் மூலமாக நம்முடைய மாணவர்களுக்கு வரவிருந்த ஆபத்தை நம்முடைய அரசு காப்பாற்றி இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காப்பாற்றி இருக்கிறார்கள். ஆனால் வருகிற ஆண்டில் இந்த ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்பை நாம் எப்படி சரிகட்ட முடியும்? நாங்கள் எந்த விதத்தில் அந்த மாணவர்களுக்கு உதவ முடியும், நாங்கள் எந்தவிதத்தில் அந்த மாணவர்களுக்கு நலம் செய்ய முடியும் என்பதை சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மூலமாக நான் மக்களுக்கு இதைத் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை முடித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே வேண்டாம். விரிவான விளக்கம் அமைச்சர் உங்களுக்கு வழங்கி இருக்கிறார். அவர் உங்களுக்கு ஒரு வேண்டுகோளையும் வைத்திருக்கிறார். குறுக்கீடுகள்) இதைப்பற்றி நீங்கள் 10, 12 உறுப்பினர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்தால், இப்போதே மணியாகி விட்டது. (குறுக்கீடு). உங்களுக்கு தேவையான அளவுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களை ஒட்டுமொத்தமாக நான் சொல்லவில்லையென்று ஆரம்பத்திலே இரண்டு சங்கங்களின் பெயரைச் சொல்லி அவர்கள் தான் இதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றும், சில சங்கங்களின் பெயரைச் சொல்லி அவர்கள் இதிலே ஈடுபடவில்லை என்பதையும் விவரமாகச் சொல்லிவிட்டு தான் என்னுடைய பதிலைச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை இதோடு போதும். (குறுக்கீடுகள்) 12 பேர், நீங்கள் எல்லோரும் நிற்கிறீர்கள். எல்லோரும் கேள்வி கேட்கிறீர்கள். இதிலே வேண்டாம். நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுவே போதும். உட்காருங்கள்.

4. ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.ஆர். — அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் மூலம் பத்திரிகையாளர்களுக்கு என்னுடைய ஒரு அறிவுரையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் ஒரு உறுப்பினரைக் குறிப்பிட்டு அவர் ''எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க. என்கிற கட்சி'' என்று பல பத்திரிகைகள் குறிப்பிட்டு இருக்கின்றன. சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில் ''எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க.'' என்கிற கட்சி இல்லை என்பதையும், அப்படிப்பட்ட கட்சி இருந்து அதிலே ஒரு உறுப்பினர் இங்கே அங்கம் வகிக்கிறார் என்ற நிலையையும் இல்லை. அது போன்ற ஒரு கட்சி அங்கீகரிக்கப்பட்டதாகவோ அல்லது பதிவு செய்யப்பட்டதாகவோ தேர்தல் கமிஷனிடத்திலிருந்து சட்டமன்றப் பேரவைக்கு எத்தகைய தகவலும் இல்லை.

எனவே, இன்றைக்கு ஏதோ வெளியிட்டு இருக்கலாம். தொடர்ந்து அது போன்று வெளியிடுவதைத் தவிர்க்குமாறு பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக அரசு தலைமைக் கொறடா என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று கேட்டார். நானே இந்தப் பிரச்சினை குறித்து அவையின் மூலமாகப் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர்.-அ.தி.மு.க. என்கிற கட்சி தேர்தல் கமிஷனால் பதிவு செய்யப்படவோ, அங்கீகரிக்கப்படவோ இல்லை. அது போன்ற தகவல் எதுவும் சட்டமன்றப் பேரவைக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களைப் பொறுத்தமட்டில் அந்தக் கட்சியின் உறுப்பினர் என்று அவர் கோருவாரேயானால் அது போன்ற தகவல்களை சட்டமன்றப் பேரவைக்கு—அவர் பதிவு செய்த விவரம் அல்லது எலக்ஷன் கமிஷனிடத்திலிருந்து அவர் பெற்ற ஆதாரம் போன்றவற்றை கொடுத்திருப்பாரானால் அது பற்றி நான் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். இன்றைக்கு இருக்கிற நிலவரத்தின்படி அவர் சுயேட்சையா, இண்டிபென்டன்டா அல்லது அன்-அட்டாச்ட் மெம்பரா என்பது பற்றித் துறை ஆய்வு செய்துகொண்டிருக்

**ஓர் உறுப்பினரைக் குறிப்பிட்டு ''எம்.ஜி.-ஆர்.அ.தி.மு.க.'' என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.**

கிறது. அது முடிவான பின்னர் அதுபற்றி அறிவிப்பேன். அது வரையிலும் அவர் அந்தக் கட்சியில் இருக்கிறார் என்று வெளியிடாமல் இருக்குமாறு பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45.

## 5. கவன ஈர்ப்பு.

**பேராவூரணி—வெட்டன்விடுதி சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணியிலிருந்து வெட்டன்விடுதி வரை சென்று கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கு இப்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. காரணம், அதற்குப் பாதை வசதிகள் நன்றாக இல்லை என்பது உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எங்கும் புரட்சி, எதிலும் புரட்சி என்ற திட்டத்தின் அடிப்படையில், போக்குவரத்துத் துறையில் மட்டுமல்ல, இங்கே நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 4 மடங்கு நிதியைக் கூடுதலாக ஒதுக்கி, பல்வேறு பாதைகளை—இந்திய நாட்டினுடைய வரலாற்றில் தமிழகத்திலே சிறப்புற நடைபெறுவதற்கு—உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான முறையிலே அந்தப் பகுதியிலே இயங்கிக் கொண்டு இருக்கின்றன என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இது குறித்து விவர அறிக்கை ஒன்றும் அவைமுன் வைக்கப்பட்டு இருக்கிறது.

### அறிக்கை.

பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண் 2, பல்முனை வழித்தடத்தின் அடிப்படையில் பேராவூரணி—வடகாடு 8 நடைகளும், பேராவூரணி—நெடுவாசல் 6 நடைகளும் மற்றும் பேராவூரணி—வெட்டன்விடுதி 2 நடைகளும் இயக்கப்பட்டு வந்தன. சாலை பழுது மற்றும் வருவாய் குறைவு காரணமாக வெட்டன்விடுதிக்கு இயக்கப்பட்ட நடைகள் நிறுத்தப்பட்டன.

தற்போது பேராவூரணி—வெட்டன்விடுதிக்கு 4 நடைகள் 10—9—1992 முதல் இயக்கப்படுகின்றன.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தவுடனேயே மிக அவசரமாக அந்தப் பகுதி மக்கள் நலன் கருதி இரண்டு தடத்திற்குப் பதிலாக, 4 தடவை அந்தப் பகுதிக்கு பேருந்து விட்டிருப்பதை, நான் அந்தப் பகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண் 2 பல்முனை வழித்தடமாக அந்தப் பகுதியில் இயங்கி வருகிறது. பேராவூரணியிலிருந்து ஆவணம் மற்றும் நெடுவாசல் வழியாக வெட்டன்குடிக்கு அந்தப் பேருந்து இயங்கிக் கொண்டு இருக்கிறது. நெடுவாசலுக்கு அந்தப் பேருந்து 6 தடவை இயங்கி வருவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். வெட்டன்குடிக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், நெடுவாசல் வழியாகத் தான் அந்தப் பேருந்து செல்ல வேண்டும். ஆகவே, ஆவணம், நெடுவாசல் வழியாக வெட்டன்குடிக்கு 6 தடவை நீட்டித்துக் கொடுத்தால், புதுக்கோட்டைப் பகுதியில் இருக்கிற ஏழைக் கூலித் தொழிலாளர்கள் தஞ்சைப் பகுதிக்குச் சென்று, தங்களுடைய வேலைகளைக் கவனிக்கவும், கூலி வேலைக்குச் செல்வதற்கும் அந்த நகரப் பேருந்து மிகவும் வசதியாக இருக்கும். எனவே 4 தடவை என்பதை, 6 தடவையாக நெடுவாசலில் இருந்து வருகிற அந்தப் பேருந்தை வெட்டன்குடி வரையிலும் நீட்டித்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாராட்டுவார்கள். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 6. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பெ. பொன்னுசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன் :

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான (வருவாய்-வரவினங்கள்) அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த முந்தைய அறிக்கைகள், நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் எட்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் உள்துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஆறாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (எண். 2/1989) (சிவில்) கல்வித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஏழாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி எட்டாவது அறிக்கை.

1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஒன்பதாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய்-வரவினங்கள்) தொழில் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை.



1987-88 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (எண். 5/1989) (சிவில்) உள் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஒன்றாவது அறிக்கை.

1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) உள்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி இரண்டாவது அறிக்கை.

முற்பகல் 11-50

## 7. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுபிடிப்போர் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(ஆ) நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

*மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''
எனக் கோருகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ). வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்.)

(அ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருதத) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1992), மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1992) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு இப்போது 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்டமுன்வடிவுவைக் கொண்டு வந்திருக்கின்ற இந்த விவாதத்தில் பேச அனுமதி அளித்ததற்காக முதற்கண் தங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் நான் பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். இந்த மதுவிலக்குச் சட்டத்தில் சற்றுக் கடுமையை இந்த அரசு கடைபிடித்தாக வேண்டும். ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் இருந்த காலத்திலே இந்த மதுவிலக்குச் சட்டத்தில் குற்றங்களை எல்லாம் நான்-பைலபிள் குற்றம் என்று ஜாமீனிலே விடக் கூடாத குற்றங்களாகக் கருதி, பொதுவாக சாராயத்தை ஒருவர் வைத்திருப்பாரேயானால், அல்லது கடத்துவாரேயானால், அவையெல்லாம் நான்-பைலபிள் குற்றமாக அப்போது இருந்தது. அதன் காரணமாக பொதுவாக ஒருவர் கைது செய்யப்பட்டால்

*21-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



அவரை நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்து, அவரை ஜாமீனில் விடுவதற்குக் குறைந்தபட்சம் மூன்று நாட்களாகும். ஆனால் இப்பொழுதோ அந்த நிலையெல்லாம் மாறி சாராயக் குற்றங்கள் எல்லாம் பொதுவாக ஜாமீனிலே விடக் கூடிய குற்றங்கள் ஆக இருக்கிற காரணத்தாலே, அவர்களை கைது செய்து அழைத்து வந்தவுடன் உடனடியாக அவர்கள் ஜாமீனிலே விடப்படுகிறார்கள். புரட்சித் தலைவர் காலத்திலே சாதாரணமாக ஒருவர் மதுவை வைத்திருப்பார்களேயானால் 4(1) ஜெ என்ற செக்ஷன்படி குறைந்த பட்சம் 6 மாத கடுங்காவல் தண்டனை அளிக்கப்படும் என்று வைத்திருந்தார்கள். இது போன்ற கடுமையான சட்டம் இருந்தால்தான் இது போன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஓரளவிற்கு சிந்தித்து பார்த்து, இது போன்ற குற்றங்களை நாம் செய்யலாகாது என்று ஓரளவிற்கு எண்ணிப் பார்ப்பார்கள். இப்போது ஒருவர் கைது செய்யப்படுவார்களேயானால் உடனடியாக சார்ஜ் ஸீட் பிரிபேர் பண்ணிக் கொண்டு அங்கு வருகிறார்கள். காவல் துறையினர் சார்ஜ் ஸீட்டை பிரிபேர் செய்து நீதிமன்றத்திற்கு வந்தவுடன் 50 ரூபாய் 100 ரூபாய் என்று சாதாரண அபராதத் தொகை செலுத்துகின்ற காரணத்தாலே இன்று இது போன்ற குற்றங்கள் தமிழகத்திலே அதிகமாகி கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11-55

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

இன்னும் சொல்லப் போனால் சாராயம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று சொன்னால், நான் இந்த மாமன்றத்திலே பலமுறை வற்புறுத்தியதற்கு இணங்க இன்னொரு சட்டத்திருத்தத்தை இந்த அரசு கொண்டு வர வேண்டும். 4(1) ஜெ போன்ற குற்றங்கள் எல்லாம் நான்-பெயிலபிளாக மாற்ற வேண்டும். அதற்கு குறைந்த பட்சம் 6 மாத கடுங்காவல் தண்டனையாவது நீங்கள் விதித்தால்தான் மதுவிலக்கு கொள்கையை முழுமையாக இந்த அரசு கொண்டு வர முடியும். தேர்தல் அறிக்கையிலே கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதைத்தான் அறிவித்திருந்தது. இந்த மதுவிலக்கு கொள்கை எல்லாம் கண்டிப்பாக கடை பிடிக்கப்படும் என்று சொன்னார்கள். இன்று நம்முடைய அரசு ஏனோ 'பாரை' கொண்டு வந்திருக்கிறது. சில்லரை விற்பனைக்காக மே மாதத்திலே இந்த நிலையை அரசு கொண்டு வந்தது. எதிலுமே முன் உதாரணமாக இருந்து வருகின்ற தமிழகம் இன்றைக்கு பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரியைப் போன்றோ ஆந்திராவைப் போன்றோ மாறிவிட்ட ஒரு நிலை இருக்கிறது. அதையெல்லாம் மாற்ற வேண்டும். இந்த லைசன்ஸ் முடிந்த பிறகாவது படிப்படியாக நீங்கள் சொன்னதைப் போல பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்தால் தான் இந்த தமிழகம் இதிலேயும் முன் உதாரணமாக அமையும். ஆக நான் ஏற்கெனவே சொன்ன

கருத்தை ஏற்று, நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்திலே 70 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக மாற்றக் கூடிய நிலையை நான் வரவேற்கிறேன். நிதி நிலைமையை ஒட்டி நீங்கள் மாற்றியிருக்கிறீர்கள். அதையெல்லாம் நான் வரவேற்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இந்த புரொஹிபிஷன் ஆக்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சட்ட அமைச்சர் அவர்களும் எப்படியாவது உடனடியாக ஒரு முடிவை எடுத்து 4(1)ஜெ போன்ற குற்றங்களை நான்-பெயிலபிளாக மாற்றி குறைந்த பட்சம் 6 மாத தண்டனை விதிக்கக் கூடியதாக — மேன் டேட்டரியாக — நீங்கள் கொண்டு வந்தால்தான் இந்த மதுவிலக்கு கொள்கையை தமிழகத்திலே அமல் படுத்த முடியும் என்று சொல்லி நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த பில்லை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி): அடுத்து திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன். அதற்கு முன்னால் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது பூரண மதுவிலக்கை கொண்டு வரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். 22 ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே இளைய சமுதாயத்தை சிலர் கெடுத்திருக்கிறார்கள். இந்த நிலைக்கு தமிழகம் ஆளானதைக் கருதித்தான் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மதுவை படிப்படியாக தமிழகத்திலேயிருந்து விரட்டியே தீருவேன் என்று சூளுரை ஏற்று, இன்றைக்கு மலிவு விலை சாராயக் கடையை அகற்றியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற கட்சியை சேர்ந்தவர்கள். ஆகவே மத்திய அரசு அந்த மானியத் தொகையை தருவதற்கு தயாராக இருந்தால் மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். என்றைக்கு நீங்கள் மானியத் தொகையை தந்தாலும் அன்றைக்கே மதுவினுடைய கொடுமையிலிருந்து தமிழக மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்பதை தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சி தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் — தயாராக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்ச அவர்கள் மத்தியிலே இருந்து மானியத்தைப் பெற்றுர்



தந்தால் நாங்கள் பூரண மதுவிலக்கை கொண்டுவருவோம் என்று அறிவித்தார்கள். உங்களுடைய பூரண மதுவிலக்கு கொள்கைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் நீங்கள்—அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே சொன்ன போது கூட பூரண மதுவிலக்கை கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மத்திய அரசு மானியம் கொடுத்தால் நாங்கள் நிச்சயமாக குறுக்கே நிற்க மாட்டோம். உங்களுக்காக வாதாடி விதை பெற்றுத் தருவதிலும் பின் வாங்கமாட்டோம். ஆனால் நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னது போல பூரண மதுவிலக்கைக் கொண்டு வரவில்லை. இப்போது பார் வந்திருக்கிறது. அது பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரியைப் போன்று ஆந்திராவைப் போன்று தமிழகத்தை மாற்றியிருக்கிறது. அதையெல்லாம் எடுத்துவிட்டு நீங்கள் முதலிலே சொன்னதைப் போல பூரண மதுவிலக்கு கொண்டுவரவேண்டும்.

நண்பகல் 12–00.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி): திரு. ஞானசேகரன் இத்துடன் முடித்து விடுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இந்த அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கையை உண்மையிலேயே பாராட்டுகிறாரா? அவருடைய காங்கிரஸ் மாநிலம் ஆண்டுக் கொண்டிருக்கின்ற அந்த மாநிலத்தில் எப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் படிப்படியாக தமிழகத்திலிருந்து மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்தியே ஆகவேண்டும் என்ற அடிப்படையிலே வந்தவுடனேயே முதன் முதலிலே ஒரு கோப்பிலே கையெழுத்திட்டிருக்கிறார். சாராயக் கடையையும் கள்ளுக் கடையையும் தமிழகத்திலிருந்து விரட்டியே தீருவேன் என்று வந்தவுடனேயே புரட்சித் தலைவி அவர்கள் கையொப்பமிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்து மாநிலத்திலே அறிவுரை சொன்னால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி): திரு. போளூர் வரதன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்களும் அவரும் ஒரே கட்சிதானே. அவர் பேசுவார்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு திருத்த மசோதா மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழக அரசு சார்பிலே மதுவிலக்கு திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். இடையிலே அமைச்சர்களும் இதர மாண்புமிகு உறுப்பினர்களும் ஆவலோடு கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று இருந்தாலும் மதுவிலக்கு என்று வருகின்றபோது தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்ற இந்தத் துணிவான முடிவை காங்கிரஸ் கட்சி சார்பிலே நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அருகாமையில் இருக்கின்ற காங்கிரஸ் மாநிலத்திலேயும் இதர இந்தியாவிலே இருக்கின்ற சில மாநிலங்களிலேயும் இன்றைக்கு மதுவிலக்கு இருந்து கொண்டிருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்த மாநிலங்களிலே காங்கிரஸ் அரசு ஆண்டு கொண்டிருந்தது. ஆண்டும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தை பொறுத்தமட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது கள்ளச் சாராய வியாபாரிகளை மிகப் பெரிய கோடீஸ்வரர்களாக மாற்றி இன்றைக்கு இந்த மாநிலத்திலே சமூக விரோதிகளாக மாற்றிவிட்டு சென்றிருக்கிறார்கள். என்னதான் தமிழக அரசு பூரண மதுவிலக்கு சட்டம் கொண்டு வந்தாலும் இன்றைக்கு உண்மையான நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கள்ளச் சாராயம் ஏற்றிச் சென்ற வண்டியை மடக்கின காவல்துறை அதிகாரி சென்னை நகரிலே — இம்மாநிலத்திலே கொல்லப்பட்டிருக்கிறார். மௌண்ட் ரோடிலே லாரியிலே ஏற்றிச் செல்லுகின்ற சாராயத்தை கீழே கொட்டி வண்டியை ஏற்றி மிதித்தார்கள் என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். தமிழகத்திலே இன்றைக்கு கள்ளச் சாராயம் என்பது கடுமையான சட்டங்கள் வந்தாலொழிய தடுக்க முடியுமா என்று நாம் பார்த்தால், சட்டங்களை திருத்தினாலும் காவல் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் திருந்தவில்லை என்று சொன்னால் கள்ளச் சாராயத்தை திருத்த முடியாது.

காங்கிரஸ் தமிழகத்தை ஆண்டபோது குடிகாரர்கள் என்று சொன்னால் சமூகத்திலே அவர்கள் குற்றவாளிகள் மட்டும் அல்ல. குடிகாரன் வீட்டிலே பெண் கொடுப்பதற்கு கூட மறுத்த காலங்கள் தமிழக மண்ணிலே இருந்திருக்கிறது. வரலாறு. ஆனால் இன்றைக்கு குடிக்காதவன் என்று சொன்னால் அவன் வீட்டிற்குத் தான் பெண் கொடுக்க மாட்டார்களோ என்று நான் அஞ்சுகிறேன்.

குடிக்கின்ற பழக்கம் என்பது எல்லா இடத்திலும் இருக்கிறது. ** சமுதாயத்தை இன்றைக்கு சீரழித்துக் கொண்டிருக்கிற இந்தச் சட்டத்தை கடுமையாக்க வேண்டும்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பெண்ணாக இருப்பதனாலேயே நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கு இருக்கின்ற மாண்புமிகு சகோதரிகள் மன்னிக்க வேண்டும். என் தொகுதியிலே படப்பையிலே 3 ** இன்றைக்கும் பகலிலே கள்ளச சாராயத்தை தெருவிலே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானாலும் வாருங்கள். நானே வாங்கித் தருகிறேன். இல்லை என்று சொல்ல முடியாது. இதை நான் சொல்வதற்குக் காரணம் . (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதைக் கூட தடுக்க முடியாமல் இங்கே வந்து ஏன் பேசுகிறார்கள் ? ** இழிவு படுத்தக் கூடிய அந்த வார்த்தைகளை சட்டசபை நடவடிக்கை குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

திரு. பி. வி. இராஜேந்திரன் : அவர் சொன்னது அன்பார்லிமெண்டரி கிடையாது. அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கக் கூடாது.

பிற்பகல் 12–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இல்லை, இல்லை (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள்.

திரு. போளூர் வரதன் : தலைவர் அவர்களே, உதாரணத்திற்குச் சொல்கிறேன், எனக்கும் சகோதரிகள் இருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். ** . (குறுக்கீடு)

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: தலைவர் அவர்களே, ஒரு சிலர் என்று சொன்னால் கூட பரவாயில்லை. ** என்று ஒட்டுமொத்தமாக சொல்லுவது தவறு (குறுக்கீடு).

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : ** என்கிற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, அது அன்பார்லியமெண்டரி வார்த்தை அல்லவே. (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்காருங்கள், அதை நீக்கியாகி விட்டது. திரு. போளூர் வரதன் தொடர்ந்து பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ** குடிப்பதைப் போலச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் உட்கார வேண்டும். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கியாகி விட்டது ** என்ற உறுப்பினருடைய பேச்சு ** குறிப்பிடுகிற காரணத்தால் அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. போளூர் வரதன் அவர்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகி விட்டது. (குறுக்கீடு) அதைப் போலவே ** என்கிற அந்த சொற்றொடரும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பிரச்சினை தேவையில்லை. நான் இந்த சட்ட முன்வடிவில் 2 திருத்தங்களுக்கான அனுமதியைத் தான் இங்கே கேட்டிருக்கிறேன். திருத்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இல்லையா? என்பது தான் பிரச்சினையே தவிர இந்த சட்ட முன்வடிவின் மூலம் கொள்கை முடிவு செய்யப் போவது இல்லை. வேறு எதையும் முடிவு கட்டப் போவது இல்லை. முடிவு கட்டுகிற கட்டம் வருகிறபோது அதையெல்லாம் எடுத்துச் சொல்லலாம். யாரோ ஒரு சிலர் குடிக்கிறார்கள் என்பதற்காக இப்போது இங்கே நாம் வாதித்துக்கொண்டு இருப்போமானால் அதை சொல்லும் போது குற்றச்சாட்டாக சொல்லி, ஆகப்போவது எதுவுமில்லை. இப்படிப்பட்ட கருத்துகளுக்கு இந்த சட்ட முன்வடிவைப் பொறுத்து நான் பதில் உரை உரைக்கின்ற அளவுக்கு

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



வராது. ஏன்என்றால் எல்லாப் பிரச்சினையையும் இதில் கொண்டுவர முடியாது. இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையிலும் மாறுபட்ட கருத்துக்கள் ; முரண்பட்ட கருத்துக்கள் ; வேறுபட்ட கருத்துக்கள் இருந்தால் அவற்றைப் பற்றி எடுத்துச் சொல்லலாம். ஆகவே, பல்வேறு மசோதாக்கள் நிறைவேற வேண்டியிருப்பதால் இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையில் இருக்கிற கருத்துக்களை, அதையொட்டிய கருத்துக்களை எடுத்துச சொல்லுவது மிக மிக நல்லது. அதை விடுத்து குடி இருக்கிறதா? இல்லையா? தேவையா? என்று நாள் கணக்கில் கூட நாம பேசிக்கொண்டு இருக்கலாம். ஏராளமான ஆதாரங்களை எடுத்து வைத்துக் கொண்டு இருக்கலாம் ; நேரம் இடம் தராது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. போளூர் வரதன் : நான் ஒரு உண்மைக்காக வருந்துகிறேன். ** என்று சொல்லுகிறபோது நான் ‘‘ என்று சொல்லவில்லை. குறிப்பாக ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அதிலே ** என்ற ஒரு வார்த்தையை நான் சொன்னதற்காக என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இல்லை ; இல்லை ; அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகி விட்டது. தயவு செய்து விளக்கம் தேவையில்லை. விளக்கம் வேண்டாம். அதைப்பற்றிப் பேச வேண்டாம்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்லுவது என்னுடைய தொகுதியில் நடைபெறுகின்ற ஒரு செய்தி. நான் எந்த **பற்றியும் தவறாகப் பேச வேண்டும் என்ற எண்ணத்தில் பேசவில்லை. இங்கே வேறு ஒன்றைச் சொல்கிறேன். சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொன்னால் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு தெளிவான ஆட்சியை தமிழகத்தில் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சிக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு கூட அவையில் பார்க்கும்போது தேச விரோத சக்திகள் எல்லாம் இன்றைக்கு அந்த அம்மையாரைப் பார்த்து, முதலமைச்சரைப் பார்த்து, கேள்வி கேட்கிறார்கள் என்று சொன்னால் எந்த அளவுக்கு இந்த நாட்டிலே சமூக விரோதிகள் பரவி இருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் பல சொல்ல முடியும்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

பிற்பகல் 12.10

அவை முன்னவர் அவர்கள் திருத்தத்தைப் பற்றி
பேச வேண்டும் என்று சொன்னதினாலே இந்தத் மட்டும்
பற்றி நான் சொல்கிறேன். சட்டங்கள் திருத்தத்தைப்
யாக்கப்பட்டாலும் அந்தச்சட்டங்களை எவ்வளவுதான கடுமை
வருகின்ற காவல்துறையிலே நடைமுறைக்குக்கொண்டு
கின்றன. அந்த ஓட்டைகளை பெரிய பெரிய ஓட்டைகள் இருக்
சட்டதிருத்தங்கள் இருக்க அடைக்கின்ற விதத்திலேநம்முடைய
என்று சொன்னால் வேண்டும். காய்ச்சுகிறான், குடிக்கிறான்
காய்ச்சுகிறான். காய்ச்சுபவனுக்கு ஏழ்மை இருக்கிறது ;
இருவருக்குமே குடிப்பவனுக்கு பணம் இருக்கிறது; குடிக்கிறான்.
ரூபாய் நாம் ஃபைன் போடுகிறோம். ஃபைன ஆயிரம்
இருக்கிறார்கள். போட்டாலும் கட்டிவிட்டு வருவதற்குத் தயாராக
தண்டனை ஆகவே, ஃபைன் எனபதை மாற்றி சிறைத்
இதற்கு என்று வழங்க வேண்டும். காவல் துறையிலே
கள் உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகள் நீக்கப்படுவார்
காவல் என்கிற சட்டம் ஏற்கனவே இருந்தாலும் இன்றைக்கு
கள்ளச்சாராயம் துறையினருடைய ஒப்புதலோடுதான் பல பகுதிகளிலே
இதைச் கடத்தப்படுகிறது ; விற்கப்படுகிறது. நான்
தாலும், சொல்வதற்குக் காரணம் சென்னை நகரமாக இருந்
கட்சியைச தமிழகத்தின் எந்தப் பகுதியாக இருந்தாலும் தி.மு.க.
பரவலாக சார்ந்தவர்கள் இன்றைக்குக் கள்ளச் சாராயத்தை
வேண்டுமென்று விற்று இந்த அரசுக்கு அவப் பெயரை உருவாக்க
கள்ளச்சாராயம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே,
தி.மு.க. என்பதில் ஓட்டுமொத்தமாக இன்றைக்கு
களும் தொண்டர்களும், தி.மு.க.-வினுடைய கட்சித் தலைவர்
சச்சரவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தேச விரோத
றைக்கு ஈடுபடுகின்றவர்கள்தான் கள்ளச்சாராயத்திற்கு இன்
கின்ற உறுதுணையாக இருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்து
மதுவிலக்குச் விதத்திலே (குறுக்கீடு). தமிழகத்தினுடைய இந்த
தெரிவித்துக் சட்டத்திருத்தம் இருக்கவேண்டுமென்று நான்
வருகிறது கொள்கிறேன். குறுக்கீடுகள் என்பது இன்றைக்கு
நிரூபிக்கிறேன். என்றுசொன்னால், இல்லை என்று சொல்லட்டும், நான
டைய எனது தொகுதியிலே, 10, 15 தி.மு.க. கட்சியினு
விற்கிறார்கள். தலைவர்கள் கள்ளச்சாராயம் பகிரங்கமாகவே, பகலிலே
மென்றால் நானே பிடித்துக் கொடுத்திருக்கிறேன். வேண்டு
மாண்புமிகு வரட்டும், நான் காட்டுகிறேன். (குறுக்கீடு)
பரிதி பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நண்பர்
தொகுதியிலே, இளம்வழுதி அவர்கள் பேசுகிறார்கள் என்றால், அந்தத்
நின்று 1989-லே நானும் தேர்தலிலே அவரை எதிர்த்து
யிலேயே இருக்கிறேன். எக்மோர் தொகுதியிலே, அவர் தொகுதி
இப்போதே நான் கள்ளச்சாராயம் விற்கின்ற தி.மு.க.-காரர்களை
யென்று பிடித்துக் கொடுப்பதற்கு தயார். அவர் இல்லை
எனது சொல்ல முடியுமா? தி.மு.க.காரர்கள் கள்ளச்சாராயத்தை
கிறார்கள். தொகுதியிலே, பல பகுதிகளிலே விற்றுக்கொண்டு இருக்
பெயரைக்கூட வெளியிட நான் தயாராக இருக்



கிறேன். அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இல்லையென்று சொல்ல முடியுமா? படப்பையிலே இன்றைக்குக் கள்ளச் சாராயம் விற்கிறார்கள் என்று சொன்னால் தி.மு.க.-காரர்கள் விற்கிறார்கள் ; சுங்குவார்சத்திரத்திலே கள்ளச்சாராயம் விற்கிறார்கள் என்று சொன்னால், தி.மு.க.-காரன் விற்கிறான். ஸ்ரீபெரும்புதூரிலே கள்ளச்சாராயம் விற்கிறார்கள் என்று சொன்னால், தி.மு.க.-காரன் விற்கிறான். இன்றைக்கு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர்கள்கூட போலீஸ்காரர்களைத் தாக்கினார்கள் என்று சொன்னார்கள். மேல்மலையம்பாக்கம் என்கின்ற ஒரு ஊர், மாங்காட்டுக்குப் பக்கத்திலே, என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. நேற்றைய முன்தினம் காவல்துறையைச் சார்ந்தவர்கள் கள்ளச்சாராயத்தை ஒழிக்கவேண்டுமென்று கிராமத்திற்குள்ளே செல்கின்றபொழுது அந்த கிராமத்திலே இருக்கின்ற திமுக-காரர்கள் ஒட்டு மொத்தமாக சேர்ந்து மாங்காடு எஸ். ஐ-யை இரவிலே அடித்துக் கொல்வதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) :</u> திரு. வரதன் நீங்கள் பேசும்போது கட்சிப் பெயரைச் சொல்ல வேண்டாம்.

<u>திரு. போளூர் வரதன் :</u> கட்சிப் பெயரைச் சொல்வதற்குக் காரணம், நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இருக்கின்ற இடங்களை நான் சொல்கின்றேன். அவர் இல்லை என்று சொல்லட்டும். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னால், மக்களுக்காகக் கொண்டு வருகிறோம். தி.மு.க.—காரர்கள் விற்கவில்லை என்று சொன்னால், அந்தச் சட்டம் அவர்கள் மீது பாயாது. அவர்கள் சமூக விரோதிகள் இல்லையென்று சொன்னால், சட்டம் அவர்கள் மீது பாயாது. ஆகவே, கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்து, நண்பர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போன்று இந்த வழக்கிலே, சாராய வழக்கு என்று சொல்கின்றபொழுது, பெயிலபிள் செக்ஷனிலே போடக்கூடாது; நான்-பெயிலபிள் செக்ஷனிலே போடலாம். அவர்களையும் தேசவிரோதிகளாகக் கருதி, தேச விரோத சட்டத்திலே போட்டாலொழிய கள்ளச்சாராயம் தமிழகத்திலே ஒழியாது. கள்ளச் சாராயத்தால் பாதிக்கப்படுகின்ற மக்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்தச் சட்டம் கடுமையாக்கப்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி, அமர்கிறேன்.

<u>திரு. இளம்வழுதி :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே........

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) :</u> திரு. இளம்வழுதி, உட்காருங்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்பு இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழ்நாட்டில்தான் மதுவை அறவே ஒழிப்பது எனக் கோப்பிலே உத்தரவு போட்டிருக்கிறார்கள். இங்கே சில நண்பர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் யார் என்ற ஒரு அடையாளத்தை மாண்புமிகு போளூர் வரதன் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-15

திரு. இளம்வழுதி : பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, அவர் பேசியதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : உட்காருங்கள். சின்னசாமி அவர்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : நூற்றுக்கு நூறு சதவீதம் கள்ளச்சராயம் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பெரியார் மாவட்டத்தில் ராயர் பாளையம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அதில் தொன்றுதொட்டு, கள்ளச்சாராயம் காய்ச்சுகின்ற ஒரு சமுதாயத்தினர்......

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே, நான் ஒரு விளக்கம்..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி): He is not yielding உட்காருங்கள். இளம்வழுதி உட்காருங்கள்.

திரு. இளம்வழுதி : நியாயத்தைச் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இளம்வழுதி உட்காருங்கள், சின்னசாமி, பேசுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : நேற்று சட்டமன்றத்திலே வனப் பகுதிகளிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்கள் ஈஸ்வரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். நேற்றைய தினம் கள்ளச்சாராயம் வனச் சரகப்



பகுதிகளில் காய்ச்சுவதாக எடுத்துச் சொன்னவுடன் இன்றைய தினம் அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்தப் பகுதிகளிலே இன்றைக்கு அறவே ஒழிக்கப்பட்டதை சுந்தரதாஸ் அவர்கள்கூட காலையிலே மாண்புமிகு போக்குவரத்துத் துறைத் மற்றும் வனத்துறை அமைச்சரிடத்திலே சொல்லிப் பெருமைப் பட்டுக் கொண்டார். ஆகவே, எந்த இடத்திலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக இருந்தாலும் அது தெரிவிக்கப்படுமேயானால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கின்ற அரசு தான் தமிழக அரசு என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே, நான் சொல்வதை..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இளம்வழுதி உட்காருங்கள். உட்காருகிறீர்களா, இல்லையா? உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது இன்னொரு உறுப்பினர் இடையூறாக இதுபோன்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டிருப்பது, இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது சரிதானா என்பதை உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. போளூர் வரதன் : கள்ளச்சாராயத்தை நான் ப்ரூவ் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : வரதன், உட்காருங்கள். நீங்கள் பேசி முடித்து விட்டீர்கள். உட்காருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நேற்றையதினம் சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாண்புமிகு ஈஸ்வரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் அவர்களும். வனப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக அறிவித்தார்கள். உடனுக்குடன் தெரிவித்தவுடன் இன்றையதினம் அந்தக் பகுதிகளில் கள்ளச் சாராயம் அறவே ஒழிக்கப்பட்டு, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கின்ற ஒரு சிறந்த காவல்துறையாக, வனத்துறையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் காலையிலே பெருமையாடு மாண்புமிகு அமைச்சரிடத்திலே சுந்தரதா சொன்னதை என் காதாலே கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட திறமை மிக்க காவல் துறை

யாக, வனத்துறையாகத்தான் தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்நேரம் அங்கே கள்ளச் சாராயம் பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, பெரியார் மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு சதவீதம் கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறது ஒராண்டுக் காலத்தில் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய பகுதியில் ராயர்பாளையம் என்ற ஒரு பகுதி இருக்கிறது. குறிப்பாக அனைவருக்கும் தெரிந்த பகுதி. அந்தப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒரு தொழிலாகச் செய்து வந்தார்கள். காவல் துறை எவ்வளவோ நடவடிக்கை எடுத்தாலும், அதைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. ஆனால், தமிழக முதல்வர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி பொறுப்பேற்ற பின்பு, அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக—அந்த ஊருக்கு நாங்களே சென்றோம். அவர்களே முன் வந்தார்கள். நாங்களே கள்ளச் சாராயம் காய்ச்சுவதை அறவே நிறுத்தி விடுகிறோம். ஆனால் எங்களுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு நங்கள் உத்தரவாதம் செய்து உதவ வேண்டுமென்று கேட்டார்கள். பெரியார் மாவட்ட ஆட்சியாளர் அவர்களும், பெரியார் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரும், நாங்களும் அந்த ஊருக்குச் சென்றோம். அங்கே ஒரு விழாவாக நடத்தினோம். காவல் துறையை கண்டாலே ஓடுகின்ற அந்தப் பொது மக்கள் வரவேற்பு கொடுத்தார்கள். சத்தியம் செய்தார்கள். நாங்கள் கள்ளச் சாராயத்தை இனிமேல் காய்ச்சுவது இல்லை என்று உறுதி எடுத்திருக்கின்றார்கள். இன்றுவரை அதைக் காப்பாற்றி வருகிறார்கள். கிட்டத்தட்ட ஏழுபட்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு வண்டி மாடுகள் வாங்குவதற்கு வேளாண்மை செய்கின்ற விவசாயிகளுக்கு கறவை மாடுகள், ஆடு மாடுகள் மேய்ப்பதற்கான கடன்கள் வழங்கப்பட்டு, இன்றைக்கும் அந்தப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இந்தக் கள்ளச் சாராயம் மட்டுமல்ல, இன்றைக்கு தேச விரோத சக்திகள் தமிழகத்தில் கள்ளச்சாராய வேலையில் ஈடுபடுவதாகச் சொன்னார்கள். ** நான் பணிவன்போடு அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி யடிக்கப் பெற்றது).

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





பிற்பகல் 12.20

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. ம. சின்னசாமி) : திரு. சின்னசாமி, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. நீங்கள் அதைப் பேச வேண்டாம்.

திரு. வி. கே. சின்னசாமி : எங்களிடத்திலே பெண்கள் நேரில் சொன்னதைச் சொல்லுகிறேன். எங்கள் பகுதியில்** இருக்கின்ற தாய்மார்கள் என்னிடத்திலே நேரில் கூறினார்கள். அம்மா ஆட்சிக்கு வந்த பின்புதான் ஆண்கள் குடித்துவிட்டு அடிப்பது குறைக்கப்பட்டு, எங்கள் உடலே அழகாக இருக்கிறது. தைரியமாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது. . ...

திரு. போளூர் வரதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் ** என்று சொல்லி இருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, யார், எந்த உறுப்பினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, எந்த இடத்தில், எங்கே. கள்ளச் சாராயம் காய்ச்சப்படுகிறது என்பதைக் கடிதம் மூலம் சொன்னாலும் சரி, அல்லது அங்கேயிருக்கின்ற மற்ற அமைப்புகளிடம் தெரிவிப்பார்களே யானால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கிற ஒரு அரசாக தமிழக அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு, இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, இதிலே பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு மூன்றாவது சட்டத் திருத்தம். அயல் நாட்டு மதுவிற்கு 70 முதல் 85 வரை வரி உயர்த்துகின்ற இந்தச் சட்ட முன் வடிவின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தமிழ் நாட்டில் அயல்நாட்டு மதுவிற்கு என்று அனுமதி கொடுக்கப்பட்டிருந்த போதிலும் கூட, அனைத்திந்திய அண்ணா 'திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தனது தேர்தல் அறிக்கையிலே சொன்னபடி தமிழ்நாட்டில் 'பாக்கெட் சாராயங்களை' ஒழித்து விஷ சாராயங்களைக் கட்டுப்படுத்தி, தமிழ்நாட்டில் சீமைச் சாராயத்தை மட்டும் தான் வியாபாரம் செய்ய முடியும் என்ற சட்டம் கொண்டு வந்தது. இதிலே முழுமையாக காவல் துறை அதிகாரிகள், கிராம அலுவலர்கள் இதுபோன்ற சமூக விரோத செயல்களிலே, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீது அரசாங்கத்திற்கும், காவல்துறைக்கும் நடவடிக்கை எடுக்க தகவல் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அதிலே பல பேர் வி.ஏ.ஓ-க்கள் தகவல் கொடுத்து, அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய பெருமை உண்டு. ஏற்கெனவே, சென்னை இராஜதானியாக கேரளா, கர்நாடகம் போன்ற மாநிலங்கள் இணைந்திருந்தது, சென்னை இராஜதானியாக இருந்தது. அதற்குப் பின்னாலே அந்த மாநிலங்கள் பிரிக்கப்பட்டு, சென்னை மாநிலமாக இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்னாலே 'தமிழ்நாடு' என்ற நல்ல பெயரை உருவாக்கி இருந்தார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் பார்த்தோம் என்றால் கோவாவுக்கு அடுத்தப்படியாக தமிழ்நாடு 'பார் தமிழ்நாடாக' மாறியிருக்கிறது என்பது மிகப் பெரிய வேதனையாக இருக்கிறது. ஆம் எங்கு பார்த்தாலும் 'பார்'. கோவாவுக்கு அடுத்தப்படி, கோயில்களிலே பார் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) கோயில்களுக்கு அருகாமையிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. கல்வி நிலையங்களுக்கு அருகாமையிலே வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ம. சின்னசாமி):</u> மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன்:</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகிறபோது கோவாவைக் கோடிட்டு காட்டி இருக்கிறார். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இன்றைக்கு பல்வேறு மாற்றங்களை இந்த மதுவிலக்குக் கொள்கையிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது மனசாட்சி உள்ளவர்களுக்கு நன்கு தெரியும். மனசாட்சி இல்லாதவர்கள் எது வேண்டுமானாலும் பேசலாமே தவிர, மனசாட்சி உள்ளவர்களுக்கு, இதயத்தில் கை வைத்துப் பார்ப்பார்களானால், படிப்படியாக என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். இங்கே கோவிலுக்கு அருகாமையிலோ அல்லது பள்ளிக்கு அருகாமையிலோ வைக்கக்கூடாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பார் கடை-



களை கொண்டுவருகிறபோதுகூட, இதைக் கொண்டுவருவதற்குக் காரணம், பார் அங்கே வைக்க வேண்டுமென்பதற்குக் காரணம், அங்கே மதுவை வாங்கிக் கொண்டு வழியிலே சாப்பிடுகிறார்கள், அல்லது வீட்டிலே சாப்பிட்டுவிட்டு பெண்களுக்குப் பலவிதமான இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்ற கருத்தின் அடிப்படையிலேதான் இந்த பார் கடைகளை கொண்டு வந்திருக்கிறார்களே தவிர நீங்கள் சொல்வதைப்போல மற்ற மாநிலத்திலே இருப்பதைப்போல, மற்ற மாநிலத்திலே குடித்துவிட்டு பாரிலே நெடுகிலும் படுத்துக் கொண்டிருப்பார்கள், பாரிலே ஆடிக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்த மாநிலத்தில் அது போன்ற நிலைகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-25

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி ஒரு அகில இந்திய கட்சி உறுப்பினர் என்று நான் கருதுகிறேன். அவர்களுடைய கொள்கையை சேர்ந்தவர்கள், வேறு மாநிலத்திலுள்ள சட்டசபைகளில் இது போன்று கருத்துக்களை சொல்வதாக நானும் படிக்கவில்லை, பத்திரிகையிலும் படிக்கவில்லை. ஒரு அகில இந்தியக் கட்சி ஒரு மாநிலத்திற்கு ஒரு கொள்கையை அதுவும் குறிப்பாக இது போன்ற மிக முக்கியமான ஒரு கொள்கையிலே எப்படி வெவ்வேறான கொள்கையை கடைபிடிக்கிறது என்றும் தெரியவில்லை. பார் என்பது வெளியிலேயும் குடிக்கக்கூடாது வேறு எங்கேயும் குடிக்கக்கூடாது என்று சொல்கிறபோது, பாட்டிலை வாங்கி வீட்டிலே தான் போய் குடிக்க வேண்டும் என்ற நிலை இருந்து வந்ததைத் தவிர்த்து குடிப்பதற்கு ஒரு இடத்தை நாம் செய்து வைத்திருக்கிறோமே தவிர, வீட்டிலே போய் குடித்தால் அப்படியே மிச்சம் மீதி இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுத்து குடித்துப் பழகுவதற்கு ஒரு வாய்ப்பு வரும். ஆகவே இது போன்ற நிலைமைகள் வேண்டாமென்று தான், இந்தக் குடி இவர்களோடு நிற்கவேண்டுமென்று கருதித்தான் பார் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, பார் கொண்டு வந்ததன் பெருமையை நன்மையை நான் பேச வேண்டிய அவசியமில்லை. நீங்களே புரிந்து கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. <u>ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஒரு அகில இந்திய கட்சியை சேர்ந்தவர் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசப்பட்டு தன்னுடைய கருத்துக்களை சொல்வது ...

தானா என்று கூட சொன்னார்கள். இந்த மாநிலத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிற சட்டம் உத்திரவுகள், அது நடைமுறையிலே சாத்தியம் இல்லாதது. நிர்வாகக் காரியங்களில் முன்னுக்குப்பின் முரணாக வருகிறபோது சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை. அந்த வகையிலேதான் இன்றைக்கு நாங்கள் பாண்டிச்சேரியிலே போய் சாராயக் கடை இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை. கேரளத்திலே சாராயக் கடை இருக்க வேண்டாம், கள்ளுக்கடை இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. ஆந்திராவிலே சொல்லவில்லை. தமிழ்நாட்டில் சாராயத்தை, பாக்கெட் சாரயத்தை ஒழிந்து, இன்றைக்கு பாட்டில் சாராயமாக தமிழ்நாடு முழுவதும் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகின்றது. ஆக சாராயம் என்பது வேறு, பாக்கெட் சாராயம் என்பது வேறு (குறுக்கீடு)

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி):</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு காலம் இந்த பாக்கெட் சாராயத்தை எல்லாம் வரவேற்று அன்றைக்கெல்லாம் பாராட்டிக் கொண்டிருந்த திரு. பழனிசாமி அவர்கள் இன்றைக்கு இப்படிப் பேசுகிறார்கள். எனக்கு இருக்கிற வருத்தம் மாநிலத்திற்கு மாநிலம் அவர்களுடைய கட்சியிலே கொள்கையை மாற்றிக் கொண்டால் பரவாயில்லை. ஒரே மாநிலத்திலே ஆட்சிக்கு ஆட்சி மாற்றிக் கொண்டிருக்கிறார்களே என்று தான் எனக்கு வேதனையாக இருக்கிறது. எனவே, இதிலே ஒரு பெரும் பகுதியான பிரச்சினையை இந்த அரசு வந்த பின்னாலே ஒழித்திருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். எனவே, இதிலே ஏதாவது உருப்படியான நல்ல கருத்துக்களைச் சொன்னால் பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம, சின்னசாமி) :</u> உறுப்பினர் திரு. பழனிசாமி, நீங்கள் சட்டத் திருத்தின் மீது பேசுங்கள். Diversion வேண்டாம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் பாக்கெட் சாராயம் கொண்டு வந்தபோதும் நான் எதிர்த்திருக்கிறேன். அதே நேரத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் பாக்கெட் சாராயம், மலிவுவிலை மதுவை ஒழிக்கின்றபோது கூட இது உங்களால் நிறைவேற்ற முடியாது, இதில் தோல்வி காண்பீர்கள், ஆகவே கள்ளுக்கடையை கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். இன்றைக்கு நீங்கள் மனப்பூர்வமாக, மனசாட்சிப்படிப்பேச வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத்



துறை அமைச்சர் சொன்னார்கள். நான் சொல்கிறேன் மனசாட்சிப்படி, பல இடங்களில் கள்ளச்சாராயம் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகின்றது. இன்னும் கூட ஆதாரங்களோடு நான் பட்டியல் போட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ** சில நபர்களுடைய ஆதரவோடு (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, போளூர் வரதன் அவர்கள் பேசியபோது நீங்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். கட்சியினுடைய பெயரைச் சொல்லாதீர்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12–30

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்சி பற்றிப் பேசக்கூடாது. ** ....என்கின்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. .

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே 'தி.மு.க.' என்பதற்கு மட்டும் எப்படி நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள் ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று இன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை முதலிலே அவர் வாபஸ் பெறவேண்டும். காரணம் இதுவரையிலே மாண்புமிகு பொறுப்புள்ள உறுப்பினர், இதுபோன்ற தவறுகள் ஏதாவது நடைபெற்று இருக்கின்றன என்று முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறாரா என்பதையும் அவர் தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறுகின்றபோது 'தி.மு.க.' என்று மாத்திரம் சொல்லலாமா என்று கேட்டார். 'தி.மு.க.' என்று சொன்னதற்காக ** என்று சொல்கிறாரா ? இல்லை, உண்மையிலேயே அவர் ஆதாரத்தோடு பேசுகிறாரா என்பதை அவர் தெளிவாகச் சொல்லவேண்டும், அதைப் பற்றி நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது என்பது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது களங்கம், குற்றச் சாட்டு சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நான் சொல்கிறபோதுகூட மிகப் பொறுப்புணர்வோடு தான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். எல்லோர் மீதும் நான் சொல்லவில்லை. சில இடங்களிலே கள்ளச்சாராயம் காய்ச்சப் படுகிறது. அதற்கு உதாரணமாக சென்னையிலே நடந்திருக் கின்ற. காவல்துறையில் ஒருவர் மீதான அந்த கோரமான கொலை, கொலை செய்து ரோட்டிலே வீசப்பட்டிருக்கின்ற அந்தச் சம்பவம், அவருடைய குடும்பத்திற்கு நம்முடைய முத லமைச்சர் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் நிதி அளித்திருக்கிறார். இதையெல்லாம் பார்க்கிறபோது, இன்றைக்கு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் சமூக விரோத காரியங்களிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கிராமங்களிலே பார்த்தோம் என்று சொன்னால் அனுமதி பெறாமல் கள்ளுக்கடைகளில் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. காவல் துறையும் கண்டு கொள்வதே இல்லை, என்னுடைய ஊரிலே நான் போகின்ற ஊரிலே, திருத்துறைப்பூண்டி நகரத்தில், வேண்டுமென்றால் காவல் துறையினர் குறித்துக் கொள்ளட்டும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டும். ஆரியக்காத்தான் என்று ஒரு கோயில், அந்தக் கோயில் பேரே ஆரியக்காத்தான் கோயில் என்று பெயர், அந்தக் கோயிலினுடைய ஒரு காலியான மண்டபத்திலே கள்ளுக்கடை வியாபாரம் நடக்கிறது. இப்போது தகவல் கொடுத்தால்கூட இந்தச் சட்டசபை முடிவதற்குள்ளேயே அவர்களைக் கைது செய்து இங்கே கொண்டு வர முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப நிதானமாக அதையெல்லாம் பார்த்து விட்டு இவ்வளவு



ாட்கள் அமைதியாக இருந்துவிட்டு, இப்போது இங்கே வந்து தானமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே. அங்கே ாவல் துறையினரிடத்திலே அல்லது தொலைபேசியின் லமாக யாராவது அதிகாரிகளிடத்திலே பேசியிருந்தால், நட வடிக்கை எடுத்திருக்கலாமே. உங்களுக்கு அந்த பொறுப்பே இல்லை என்று நீங்கள் தட்டிக்கழிக்கிறீர்களா ? இங்கே வந்து குறைபாடுகளை சொல்வதற்காக மட்டும்தான் நாங்கள் இருக் கிறோம் என்கின்றார்களா ? அதுபோன்ற குறைப்பாடுகள் நடப்பதை உரிய நேரத்திலே உடனடியாக அங்கே சொல்ல வேண்டும். உங்கள் தொகுதியிலே நடந்திருக்கிறது. உங்கள் ஊருக்கு பக்கத்திலே நடந்திருக்கிறது, ஒரு கோயிலிலே நடந் திருக்கிறது. உடனடியாக நீங்கள் ஏன் அதைப்பற்றி சொல்ல வில்லை என்பதைத்தான் என்னுடைய கருத்தாக இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த சபையிலே ஒரு பொறுப்பான கட்சியிலே ஒரு பொறுப்பான சட்டசபை உறுப்பினர் என்ற காரணத்தினாலேதான் சொல்கிறேன். இப்போது அங்கே இருக்கக் கூடிய காவல்துறை அதிகாரிக்கு, நான் இருக்கக்கூடிய திருத் துறைப் பூண்டியிலே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரி களுக்கு நான், நான் ஒரு சட்டப் பேரவை உறுப்பினர், நான் போகின்ற பாதை, அங்கு இப்படிப்பட்ட கள்ளச் சாராய வியா பாரம் என்பது நடக்கிறது. ஒரு கோயிலிலே வைத்து வியாபாரம் நடந்துக்கொண்டிருக்கிறது என்றும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். ஆனால், ஒரே ஒரு நாள், நான் சொன்னதற்காக, அவர்களைக் கைது செய்தார்கள் மறுநாள் பெரிய கடையாக வைத்து வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. இதுபோன்ற பல இடங்களில் காவல்துறை அதிகாரிகள் மாமூல் பெற்றுக்கொண்டு, அதற்கு என்று 2, 3 காவல் துறை அதிகாரிகள், இதற்காக வசூல் பண்ணுவதாக கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இப்படி நிறைய தமிழ் நாடு முழுவதும் இருக்கிறது. இந்த கள்ளச்சாராயத்தின் மூல மாக இன்றைக்கு புதிதாக திறக்கப்பட்டிருக்கின்ற அந்த 'பார்' இருக்கிறது. அதிலே சாராய வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் ஒருவருக்கொருவர் பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு முதல் போட்டுக்கொடுத்து அவர் களே அதிலே வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குற்றச்சாட்டுகளை சொல்கிறபோது ஒரு ஆதா

(மாண்புமிகு திரு. கே, ஏ. செங்கோட்டையன்)

ரத்தோடு, ஆதாரம் வைத்துக்கொண்டு, குற்றச்சாட்டுக்களை சொல்லவேண்டும். ஒரு எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து கொண்டு இன்றைக்கு இது போன்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார் என்று சொன்னால் ஆதாரம் இல்லாமல் குறிப்பிடக்கூடாது.

பிற்பகல் 12–35

அதேபோல, இங்கே இருக்கின்ற பார் கடைகளில் எல்லாம் இதுபோன்று கள்ளச்சாராயம் இருக்கிறது என்று உறுப்பினர் குறிப்பிட்டார். எந்த பார் கடையில் இருக்கிறது? அது போன்று எங்கே விற்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டால் நலமாக இருக்கும். அதை விட்டுவிட்டு வேண்டுமென்றே ஒரு அரசின்மீது களங்கத்தை உருவாக்குகின்ற வகையிலும், உறுப்பினர் அவர்கள் இந்த அரசுக்கு ஒரு களங்கத்தை விளைவிக்கின்ற வகையிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கின்ற வகையிலும் இதுவரை பேசிக்கொண்டிருந்தார், என்பதும் நமக்கு நன்றாக தெரியும். ஆகவே, அப்போது அவர் பேசுகிறபோதே குறிப்பிட்டார். நாங்கள் தி. மு. க.-வை —மாண்புமிகு உறுப்பினர் வரதன் அவர்கள் பேசினார்கள். ஆகவே நான் அண்ணா தி. மு. க. வை குறிப்பிட்டேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதுபோல நிலை இருப்பது சரிதானா என்பதை துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 30 நிமிடங்களாக இந்த அவையிலே நடக்கின்ற விவாதங்களை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். ராஜனுக்கு செவிதான். .

திரு. வ. சத்தியமூர்த்தி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ' புத்தி சொல்வது மாதிரி ' பேசுகின்றார்............

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே: I have got a point of order to be raised I leave it to the Leader of the House If he says that I am on a wrong Procedure, I will sit down. I leave it to the Leader of the House. Let him say that I am on a wrong footing.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா ; சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ; Thank you, Madam Chief Minister நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ராஜனுக்கு செவிதான்கண் என்று சொல்லுவார்கள். சில தகவல்களை இந்தப் பக்கத்தில் இருக்கின்ற நாங்கள் இங்கே தான் சொல்ல முடியும். அது உங்கள் காதுகளுக்கு போனால்தான் அதற்குப் பரிகாரம் கிடைக்கும், நாங்கள் எவ்வளவு நியாயமாகவும், அழுத்தமாகவும் சொல்கிறோமோ அதற்குத் தகுந்த நீதி இந்த அரசிடமிருந்து கிடைக்கும் என்று தான் சொல்கிறோமேயொழிய நீங்கள் அதை அடக்குவது மொத்தத்திலே இந்தத் தமிழ்நாட்டுக்கு நல்லதல்ல. அதைச் சொல்வதற்கு கூட நீங்கள் அனுமதிக்க வேண்டும் அல்லவா? நான் சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கேட்டுக்கொள்ள வேண்டும். பார் கடைகளிலே எங்கே பாட்டில் சாராயம் விற்கப்படுகிறது என்று கேட்டார்கள். இடையிலே ஒரு மிகப் பெரிய seiyure - worth about several lakhs அதை உங்களுடைய காவல் துறைதானே கண்டுபிடித்தது. அது எங்கேயிருந்து வந்தது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் இதிலே ' பாய்ண்ட ஆப் ஆர்டர் ' என்ன என்று மட்டும் சொல்லுங்கள். Please come to the point of order

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் ; எல்லாவற்றையுமே நீங்கள் ஆதாரத்தோடு சொல்லுங்கள், புள்ளிவிவரத்தோடு சொல்லுங்கள் என்று சொல்லி, ஏதோ நாங்கள் இந்த அரசை குறை சொல்வதாக சொல்லவில்லை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தயவுசெய்து ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தினுடைய காவல் துறைதான் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். அப்பொழுது என்ன அர்த்தம்' இந்த அரசாங்கம் ஒழுங்காக வேலையை கவனிக்கிறது என்றுதானே அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணத்தால்தான் அதைக் கண்டுபிடித்திருக்கிறது. வேறு எங்கிருந்தும், கர்நாடகாவிலிருந்தோ மத்திய அரசாங்கமோ வந்து அதைக் கண்டுபிடிக்கவில்லை. தமிழ்நாடு அரசாங்கம்தான், தமிழ்நாடு அரசாங்கத்தில் இருக்கின்ற அந்தக் காவல் துறை தான் கண்டுபிடித்திருக்கிறது. எனவே, தவறுகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடக்கலாம். நாங்கள் இங்கே சொல்ல வந்தது என்னவென்று

சொன்னால், திரு. பழனிசாமி மொத்தமாக சொல்கிறார். இருக்கின்ற பார் கடைகளில் எல்லாம் சாராய வியாபாரம் நடக்கிறது என்று சொல்கிறபோது அதற்கு என்ன அர்த்தம்' என்னுடைய கருத்து எல்லாம், இதுதான், எந்த இடத்திலே நடக்கிறது என்று சொல்ல வேண்டும். கோயிலை சுட்டிக் காட்டி சொன்னார்கள். அதிலே நியாயம் இருக்கிறது. பார்களிலே எல்லாம் நடக்கிறது என்று சொன்னால்—ஒரு சட்டமன்ற உறுப்பினர் தப்பு செய்கிறார் என்று சொன்னால்—எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இப்படி செய்கிறார்கள் என்று சொன்னால் அதை நாம் ஏற்றுக்கொள்வோமா? அதேபோலதான் எங்கே நடக்கிறது என்று சொன்னால், எந்த இடத்திலே இப்படி நடக்கிறது? எனக்குத் தெரிந்து இந்த இடத்திலே இப்படி நடக்கிறது? மற்ற இடங்களிலேயும் அது நடக்கக் கூடும், அதை கவனிக்க வேண்டுமென்று சொன்னால் அதிலே குறுக்கிடப் போவதில்லை. அவர் மொத்தமாக சொன்னார். எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்னார்.

இன்னொன்றையும் சொன்னார், ஆறாக சாராயம் ஓடிக் கொண்டிருக்கிறது என்று. இப்படிச் சொன்னால் எப்படி பொருத்தமாக இருக்கும்? இந்த இடத்திலே நடக்கிறது என்று சொல்லட்டும். சாராயம் ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு என்னப் பொருள் என்று எனக்குப் புரியவில்லை. ஆக, எந்த அரசாங்கத்தின் மீதும், மத்திய அரசாங்கத்தின் மீதும் இப்பொழுது என்னால் சொல்ல முடியும். கர்நாடக அரசாங்கத்தின் மீதும் சொல்ல முடியும். எல்லா இடத்தைப் பற்றியும் நம்மால் சொல்ல முடியும். எனவேதான் குறிப்பிட்டுச் சொன்னால், உண்மையிலேயே பொறுப்பானவர்களாக இருந்தால் குறிப்பிட்டுச் சொல்வார்கள். உடனே நடவடிக்கை எடுக்க முடியும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ், தயவுசெய்து நீங்கள் அமருங்கள். திரு. பழனிசாமி பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஆதாரம் தர வேண்டுமென்று சொன்னார்கள். நான் நிச்சயமாக வரவு-செலவுத் திட்ட விவாதம் நடைபெறுகிறபோது கள்ளச்சாராய வியாபாரம் நடைபெறும் இடங்களின் போட்டோ காப்பிகளையும் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி ஒன்றைக் கவனிக்க வேண்டும் நீங்கள் குற்றச்சாட்டுக் கூறுவதாக இருந்தால் இங்கே சொல்ல



அனுமதி பெற்றுக்கொண்டு நேரடியாகக் குற்றச்சாட்டுச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. போகிற போக்கிலே புழுதிவாரி தூற்றுவதைப் போல பேசுவதும், பொதுவாகச் சொல்வதும் ' ஒரு உறுப்பினருக்கு அழகாக அமையாது என்பதை தான் அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள். அதை மனதிலே வைத்து, ஆதாரம் இல்லாமல், நேரடியாக நீங்கள் சொல்ல முடியாமல் பேசுவதை விட, ஆதாரம் இருந்தால் தயவு செய்து எடுத்துச் சொல்லுங்கள். இல்லையென்றால் நீங்கள் எழுதிக் கொடுங்கள். அமைச்சரிடத்திலே எழுதிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 12.40

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் கொடுத்துவிட்டு குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்பது ஏற்கனவே இருக்கிற வரைமுறை. இந்த மன்றத்திலே அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆதாரம் இல்லாமல், மொத்தமாகத் தவறு நடக்கிறது என்றால் எந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும் ? உண்மையிலேயே உங்களுக்குப் பொறுப்பு உணர்வு இருக்கிறதென்றால், அரசியல் உள்நோக்கம் இல்லை என்றால் ஆதாரத்தைக் கொடுங்கள். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது எங்கள் தவறு. மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இப்படி நடக்கிறதென்றால் இந்தியா முழுவதும் நடக்கிறது என்று சொல்லுவார்கள். எனவே ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமாரதாஸ், உட்காருங்கள். உங்களுக்கு அனுமதியில்லை, உட்காருங்கள். திரு. பழனிசாமி, தொடர்ந்து பேசுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு கட்சியினுடைய உறுப்பினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்கு எப்படி அந்தக் கட்சியினுடைய தலைவருடைய கடிதம் ஆதாரமோ அதைப்போல ஒரு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்லும் போது, அந்த உறுப்பினர் ஒரு கடிதத்திலே இந்தந்த இடங்களிலே நடக்கிறதென்று எழுதிக் கொடுத்தால் எங்களுக்கு வசதியாக இருக்கும். வேறு ஒன்றுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. குமாரதாஸ் அவர்கள் அனுமதி பெறவில்லை. திரு. பழனிசாமி தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச அனுமதியில்லை. உங்களுக்கு வாய்ப்புத் தரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) ஆதாரம் இருந்தால் அப்போது சொல்லுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். வனத் துறையிலே, கேரள மாநிலத்திலே ஒடுக்கப்பட்டவுடன், இங்கே காய்ச்சுகிறார்கள் என்று சொன்னார்கள். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நேற்றே உத்தரவு வழங்கி, அது தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே மனசாட்சியுடன் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு விரைந்து, அம்பு போலச் செயல்படுகிறது இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மறந்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே அந்தப் பிரச்சினையை ஒரு கேள்வி மூலமாகச் சொன்னவுடன், அமைச்சரை அழைத்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இன்று காலைகூட 6 டெலிபோன் கால்கள் வந்தன. ஒழித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி) இந்தப்பிரச்சினை சில இடங்களில் இருக்கிறது. நான் பில்லைப் படித்துப் பார்த்தேன். இப்போது பில்லுக்கு அப்பாற்பட்டுத்தான் பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; திரு. பழனிசாமி அவர்கள் திரு. சுந்தரதாஸ் அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு குற்றச்சாட்டுகளை ஆதாரத்தோடு தர வேண்டும். இல்லையென்றால் சட்ட முன்வடிவின் மீது மட்டும் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மது விலக்கு மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்து, இதன் பெயரால் நடைபெறும் தவறுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சட்டமன்றத்திலே சொன்ன பிறகுதான், பல இடங்களிலே காவல் துறை அதிகாரிகள் ரெய்ட் பண்ண ஆரம்பிப்பார்கள். தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் காவல் துறை அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தவுடன் 5,000, 6,000 லிட்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அவற்றை உடைத்து நாசப்படுத்தியிருக்கிறார்கள். மீண்டும் அது தொடருகிறது. இப்போது அதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். காவல் துறையினர் ஆயிரக் கணக்கான லிட்டர் கள்ளச் சாராயம் பறிமுதல் செய்கிறார்கள் என்றால் எப்படிச்



செய்கிறார்கள்? அந்தத் தொழில் இப்போது சிறு தொழிலாக மாறி இருக்கிறது. இதைத்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு அனுமதி அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

பிற்பகல் 12-45

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தில் மேலும் முறைப்படி திருத்தம் செய்வதற்கான சட்ட முன்வடிவு இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டு, அதன் பேரிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

இந்த அவசரச் சட்டத்தை சட்டமாக ஆக்கி, அதன் மூலம் ஒரு திருத்தத்தை நிலையாகக் கொண்டுவர வேண்டும் என்பதும், மற்றொரு திருத்தத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதும் தான் இந்த திருத்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம். இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவில் வேறு எந்தக் கொள்கையைப் பற்றியோ கோட்பாடுகளைப் பற்றியோ, கோரிக்கைகளைப் பற்றியோ அல்லது வேறு பல நிலைமைகளைப் பற்றியோ எடுத்துச் சொல்வதற்கு இடம் இல்லை. ஆனால் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று, மதுவிலக்கு என்று சொன்னவுடனேயே, மதுவிலக்கு என்பது என்ன? அதை எப்படித் தடுப்பது? என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மதுவிலக்கு என்றால் மது குடித்தலை
வேண்டும், மது குடியை அறவே ஒழிக்க ஒழிக்க
கின்ற கருத்துதான் நீண்ட பெருங்காலமாக சான்றோர் வேண்டுமென்
மக்கள் பலரால் வற்புறுத்தப்பட்டு பெரு
அது கொள்கையைப் பற்றியது. அது அரசியல் ரீதியாக நாடு வருகின்றது.
முழுவதும் வற்புறுத்தப்பட வேண்டுமென்ற கொள்கையை
அண்ணல் காந்தியடிகள் எடுத்துக்கொண்டு, எங்கு பார்த்
தாலும் அந்தக் கொள்கையை பரப்பி வந்தார்கள். கள்ளுக்
கடை மறியல் போன்றவைகள் கூட நடைபெற்றன. ஆகவே
மக்களிடத்திலே மது குடிக்கின்ற தன்மை கூடாது, அது மதியை
மயக்கும், மானத்தை இழக்கச் செய்யும், நட்பு, உறவு ஆகிய
வற்றுக்கெல்லாம் கூட கேடு பயக்கும் என்ற கொள்கையின் அடிப்
படையில்தான் மதுகுடிக்கக் கூடாது, மது விலக்கு வேண்டும் என்று
காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொல்லி, அந்தக் கருத்
துக்கு நல்லாதரவைத் திரட்டுகின்ற பணி நம்முடைய நாட்டிலே
மிகச் சிறப்பாக நடந்து வந்தது மட்டுமல்லாமல்,

அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே முழு மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டுமென்கின்ற நோக்கத்தின் அடிப்படையிலே, இதற்கு இடமும் அளித்திருக்கிறார்கள்.

அந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான் ஆரம்ப காலத்தில், 1950-வது ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடனேயே மதுவிலக்குக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று இந்தியாவில் இருக்கிற அவ்வளவு மாநிலங்களும் கூட மதுவிலக்குச் சட்டத்தை முழுமையாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக முயன்றார்கள். அப்படியிருந்தாலும் கூட, அந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும், முழுக்க முழுக்க, நூற்றுக்கு நூறு, அறவே, நடைமுறைப் படுத்த முடியாது என்கின்ற நிலைமையிலேதான் நம்முடைய ஆட்சி நிருவாகிகளும் மற்றவர்களும் இருந்திருக்கின்றார்கள். பல்வேறு மாநிலங்களைப் பொறுத்த வரையிலும், உள்ளபடியே கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் ஈடுபட்ட மாபெரும் தலைவர்கள் ஆண்டு வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆண்ட பல்வேறு மாநிலங்களிலே, உள்ளபடியே, அண்ணல் காந்தியடிகளின் கொள்கையை நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொண்டவர்கள் கூட, 15 ஆண்டுகள், 16 ஆண்டுகள் மேற்கொண்டு பார்த்து, மதுவிலக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது, முழுமையாக நடைமுறைப் படுத்த முடியாது என்ற முடிவிற்குத்தான் வந்துள்ளனர். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதைப் போன்று, கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுதல், மதுவைக் கடத்துதல், விற்பனை செய்தல் போன்ற எல்லாம் அங்கெல்லாம் நடைபெறவே செய்தன. அனேகமாக எல்லா மாநிலங்களிலும், மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் ஆண்டும் கூட மதுவிலக்குத் திட்டம் கைவிடப்படும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட கதிக்கு ஆளான ஒரு பிரச்சினை இந்தப் பிரச்சினை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் உணர்தல் வேண்டும்.

இப்போது மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்ற மாநிலங்கள் இரண்டே இரண்டுதான். ஒன்று தமிழ்நாடு, மற்றொன்று குஜராத். ஆனால் குஜராத்தைப் பொறுத்த வரையில் விசாரித்துப் பார்ப்போமேயானால் அங்கும் மதுவிலக்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மதுவிலக்குச் சட்டம் இருக்கிறதே தவிர, மதுவிலக்குச் சட்டத்தை மீறுகின்ற தன்மையும், அந்த நோக்கத்திற்கு மாறுபாடான போக்குகளும் பிற தீய செயல்களும் இருக்கின்றன என்றுதான் சொல்லப்படுகின்றன. அந்த நிலைமைகள் இங்கும் காணப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று, ஒரு கொள்கையை நடைமுறைப்படுத்துவது என்று வருகின்றபோது, சட்டத்தின் மூலமாக அந்தக் கொள்கையை நிறைவேற்றுவது என்பது எவ்வளவு கடினமான ஒன்று என்பதை உணரலாம். அதை நடைமுறைப் படுத்துவதில் இருக்கின்ற கஷ்டங்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்



னார்கள். ஆனால் ஒன்றை மட்டும் இந்த மன்றம் உணர்தல் வேண்டும். மதுவிலக்குக்கு முழு ஆதரவும் தருகின்ற அடிப்படையில் தான் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. நோக்கம் எவ்வளவு உயர்ந்தது, எவ்வளவு மகத்தானது என்பதை எல்லோரும் உணர வேண்டும். இந்த நோக்கத்தில் இருக்கின்ற நியாயமும், நம்பிக்கையும், நேர்மையும் எந்த அளவுக்கு செயல்படுகின்றன என்று பார்க்க வேண்டும். மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தூய நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். பொருள் இழப்பு ஏற்பட்டாலும் அதை நிறைவேற்ற முன்வந்து இருக்கிறார்கள் என்பதில் இருந்தே நீங்கள் எல்லோரும் உள்ளபடியே முழு ஆதரவைத் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னாலேயே முழு மதுவிலக்கைக் கொண்டு வந்து அறவே ஒழித்து விட முடியும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை. இந்த நோக்கம் எப்படியாவது நிறைவேற வேண்டும் என்ற கருத்தைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த மன்றத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கிற அவ்வளவு கட்சிகளும் கொண்டிருக்கின்றன. ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் சட்டமும், அரசாங்கத்தின் காவல் துறையும் மட்டுமே போதா. அவற்றால் நிறைவேற்றி விட முடியாது என்பதைக் காண்கிறபோது, பொதுமக்களுடைய ஒத்துழைப்பும், மக்கள் தொண்டர்களும், பொதுமக்களை வழிநடத்திச் செல்கின்ற சான்றோர்களும் ஆன்றோர்களும் சேர்ந்து முழு உதவி செய்தால் தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியும். அதற்கான காரண காரிய விளக்கங்களை நாம் காண வேண்டும்.

பிற்பகல் 12-50

கள்ளச்சாராயம் காய்ச்சுவோரையும், கள்ளக் கடத்தல் செய்வோரையும் பிடித்து உரிய தண்டனையை வழங்குவதற்காகத்தான் தனிக் காவல் துறை அமைக்கப்பட்டு மாவட்டந்தோறும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்தவரையில் இயன்றவரையில் கள்ளச்சாராயக்காரர்களையும் கள்ளக் கடத்தல்காரர்களையும் பிடித்து தண்டனை வழங்கப்பட்டுத்தான் வருகின்றன. கள்ளச்சாராயம் அறவே இல்லை என்றோ, அல்லது கள்ளக் கடத்தல் அறவே இல்லை என்றோ நாம் வாதிடவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி போன்றவர்கள் எடுத்துச் சொல்லுகிறபடி இருக்கத்தான் செய்கின்றது. கண்ணில் படுபவனும் கண்ணில் படாதவனும் இருக்கின்றார்கள். பலரும் அப்படிச் சொல்லுகிறார்களே தவிர அவர்களை காவல் துறையினர் பிடிக்கச் செல்கிறபோது அவர்களுக்கு உறுதுணை புரிகின்ற அளவுக்கு யாரும் முன்வருவதில்லை. அப்படி உறுதுணை புரிவதற்கு பலரும் முன்வர வேண்டும். காவல் துறையினருக்கு கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் பற்றி எடுத்துச் சொல்லலாம். தான் சொன்னால் அதற்குப் பிறகு தான் இருக்கமாட்டேன் இந்த ஊரிலே அந்த

அளவுக்கு காய்ச்சுபவர்கள் தன்னைப் பழி வாங்கி விடுவார்கள்
என்றும் ஆகவே, தான் சொல்லவில்லை என்றும் கூறுகிறார்கள்.
அவர்களும் சொல்லமாட்டார்கள்; இவர்களை எல்லாம் பிடிக்கவும்
முடியாது. இங்கே கோட்டையிலே உட்கார்ந்துகொண்டு ஆட்சி
செய்கிறவர்கள் போய்ப்பார்த்து ஒவ்வொருவரையும் பிடித்து
வருவார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு பொருத்தமுடைய
தாக இருக்கும்? பொது மக்களுடைய முழு ஒத்துழைப்பும்
ஆதரவும் இருந்தால்தான் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியும்.
ஆனால், இதில் முழு நம்பிக்கையை மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு இருக்கிறதன் காரண
மாகத்தான் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.
இதில் கட்டுப்பாடு வேண்டும். அறவே மதுக் குடியை ஒழித்து
விட்டோம் என்கின்ற அளவுக்கு இல்லாவிட்டாலும், இப்படிப்
பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக கணிசமான அளவுக்கு மதுக்
குடியை ஒழிக்க முடியும். சமுதாயத்திலே நூற்றுக்கு நூறு
கெட்டுப் போவதைவிட, ஒரு 75 பங்கு நன்றாக இருந்தால்,
65 பங்கு நன்றாக இருந்தால் நாடு அந்த அளவுக்காவது நன்றாக
இருக்கும் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலேதான்இதிலே
குற்றங்கள் குறைபாடுகள் இருந்தாலும் கூட இதனை
நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கின்றோம்.

பழக்கப்பட்ட குடிகாரனை ஒருநாளும் திருத்த முடியாது என்
பதும், குடிக்கிறவன் குடித்துக்கொண்டுதான் இருப்பான் என்பதும்,
அவன் குடிப்பதற்கு வழி வகைகளைத் தேடுவான் என்பதும்,
அவன் குடிக்க இருக்கிறான் என்பதற்காக காய்ச்சுகிறவனும்
இருப்பான் என்பதும், காய்ச்சுகிறவனுக்கு பணம் வருகிறது
என்பதனாலே அவனுக்கு உதவி செய்கிறவனும் இருப்பான்
என்பதும் உலகறிந்த உண்மை (சிரிப்பு) நாடு அறிந்த உண்மை
மருந்துகள் போல பென்சிலின் மருந்து என்றால் ஒரு
குறிப்பிட்ட தொழிற்சாலையில்தான் உண்டாக்கமுடியும்; வேறு
பல மருந்துகள் என்றாலும் கூட குறிப்பிட்ட தொழிற்சாலை
களில்தான் உண்டாக்க முடியும். ஆனால், மதுவை
எங்கு பார்த்தாலும் யாரும் உண்டாக்கலாம்; குடிசைக்குக்
குடிசை, இடத்துக்கு இடம், சேரிக்கு சேரி, பகுதிக்கு பகுதி,
ஆளுக்கு ஆள்—எல்லா இடத்திலேயும் காய்ச்சுகின்ற அளவுக்கு
இருக்கும்போது, ஒரு அரசு அத்தனை பேரையும் கட்டுப்படுத்திக்
கொண்டு வருவது என்பது முடியாத ஒரு செயலாகும்.

வள்ளுவர் அவர் காலத்திலே மிகவும் முயன்று பார்த்தார் ;
புத்தர் காலத்திலேயும் முயன்று பார்த்தார்கள். புத்தருடைய
கொள்கை, மகாவீரருடைய கொள்கை எல்லாம் பாராட்டப்
பட்டது. எடுத்துச் சொல்லப்பட்டது. வள்ளுவர் எவ்வளவோ
முயன்று பார்த்தும், அவர் கள்ளுண்ணாமை பற்றி எல்லாம் எடுத்து
சொல்லியும் அதனால் ஏற்படுகின்ற நலன்கள், தீய பழக்கங்கள்
ஆகியவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லியும், கடைசியில் அவரா
லேயும் முடியாமல் விட்டு விட்டார். கடைசியில் அவர் என்ன
முடிவுக்கு வந்தார் என்றால்,



"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று."

என்று கூறிவிட்டார். அதாவது குடித்துப் பழக்கப்பட்டவனைட்
போய் திருத்துவது என்பது இருக்கிறதே, அது தண்ணீருக்குள்ளே
போனவனை தீப்பந்தம் எடுத்துக்கொண்டு போய் நுழைந்து தேடி
னால் எப்படியோ அப்படி என்று சொல்லிவிட்டார். (சிரிப்பு)
அவன் களித்தானைக் காரணம் காட்டுதல், குடிக்கிறவனைப்
போய் திருத்துவது என்று முடிவு பண்ணினால்—
தண்ணிருக்குள்ளே ஒருவன் போய்விட்டான், என்பதற்காக
எங்கே போகிறாய் என்றால், நான் அவனைந் தேடிப்,
போகிறேன் என்று சொல்லிவிட்டு தீவட்டியைப் பிடித்துக்
கொண்டு தண்ணிக்குள்ளே இவனும் இறங்கினால், அப்படி இறங்
கினவனுடைய அறிவு எப்படி இருக்குமோ, அவ்வளவுதான் குடிக்
காரனைத் திருத்த முற்படும் ஒருவனின் அறிவும் இருக்கும்
என்று சொல்லி,

"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று."

என்று குறிப்பிட்டார். வள்ளுவரே சொன்னதற்குப் பிறகு நாம்
என்ன செய்ய இயலும்? (சிரிப்பு).

ஆகவே, ஒன்றை மட்டும் உணர வேண்டும். மற்றைய
மாநிலங்கள் எல்லாம் உள்ளபடியே தாராளமாகக்
கட்டுப்பாட்டை அவிழ்த்து விட்ட நிலையில், கதவைத்
திறந்துவிட்டு இருக்கிற அத்தகைய நிலையில், நாம்
தமிழகத்திலே எல்லோருடைய ஒத்துழைப்பின் அடிப்படை
யிலேதான் செய்ய முடியும். குற்றம் நடைபெறுகிறது;
குறைகள் இருக்கின்றன; அந்தக் குறைகள் எல்லா மடங்
களிலும் இருக்கின்றன; அவற்றை எவ்வளவுக்கு எவ்வளவு
தடுக்க முடியுமோ அவ்வளவுக்கு தடுப்பதற்கு பெரு முயற்சிகள்
எடுத்து, அதற்காக காவல் துறையினரும் மற்றவர்களும் பாடுபட்டுக்
கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குவிதிக்கப்படுகிற தண்டனைச்
சட்டத்தைக் கடுமையாக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. ஞானசேகரன் அவர்கள்கூட இங்கே எடுத்துக் குறிப்பிட்
டார்கள். மாண்புமிகு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்கள் இருந்தபோதுகூட மிகக் கடுமையான சட்டத்தைக்
கொண்டுவந்து, கள்ளச்சாராயக்காரர்களை எல்லாம் கைது செய்ய
ஆணையிட்டார். கடைசியிலே ஏழையெளிய மக்கள் ஆறு மாதம்,
ஓராண்டுக்காலம் சிறையிலே கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.
அவர்களின் குடும்பமே பாழ்பட்டுப்போயிற்று. சிறையிலே ஒரு
குடும்பத்தினுடைய தலைவன் தள்ளப்பட்டால், அந்தக் குடும்பத்
தைச் சேர்ந்த மனைவி, குழந்தைகள் எல்லாம் கஷ்டப்
படுகிறார்கள் என்று சொல்லி மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்களே கடுமையாகக் கொண்டுவந்த சட்டத்தை மறுபடியும்
மாற்றி, அதனைச் சாதாரணமாகக் கொண்டுவர வேண்டிய
கட்டத்திற்கு ஆளானார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 செப்டம்பர் 22
பிற்பகல் 12—55.

இப்போது மதுவிலக்குச் சட்டத்தை கடுமையாக ஆக்க
வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்
அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியேதண்டனை குறைவாக
இருக்கின்ற காரணத்தால்தான், காய்ச்சுபவர்கள் இதை மிக
எளிதாக எடுத்துக் கொண்டு ஆங்காங்கே காய்ச்சுகிற
நிலைமை வருகிறது, இதனைக் கடுமையானதாக ஆக்க
வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காகத்தான்
மதுவிலக்குச் சட்டங்களைக் கடுமையாக ஆக்குவது பற்றியும்
ஏனைய மாற்றங்கள் செய்வது பற்றியும் ஒரு குழுவின் மூலம்
பரிசீலனை செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்
எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசு அந்தப் பரிசிலனை
யில் இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இதனை எந்த
அளவுக்கு நடைமுறைப் படுத்தலாம் என்று யோசித்துக்கொண்
டிருக்கிறது. படிப்படியாகக் கொண்டுவருகிறீர்களே என்
றார்கள். எடுத்த எடுப்பிலேயே கொண்டு வந்து எதையும்
நிறைவேற்ற முடியாமல் இருப்பதைவிட, படிப்படியாக, மெல்ல
மெல்ல, ஆனாலும் இந்தக் கொள்கையை நிறைவேற்றுகிற
அளவுக்குச் செல்லுகிற முறைதான் நல்லது என்ற தன்மையின்
அடிப்படையில் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்போது கொண்டு வந்திருப்பது, குடிக்கிறவர்கள்அனைவரை
யும் தமிழ்நாட்டிலே இருந்து அகற்றி விட்டோம் என்பதற்காக
அல்ல. ஏழைகளைக் காப்பாற்ற ஏழைகளின் குடும்பங்களில்இருக்கிற
சொத்து, சுகங்கள் பாழ்படாமல் இருக்கவேண்டும் என்பதற்
காகத்தான், ஏழைகளைப் பாதிக்கின்ற அளவுக்கு சாதாரணமாக
இருக்கின்ற குடிமக்களைப் பாதிக்கிற அளவுக்கு இருக்கிற மலிவு
விலை மது வகைகளை மட்டும் ஒழித்துவிட்டு, இந்தியாவில்
தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளைச் சிறிது காலத்திற்
கென்று வைத்திருக்கிறோம். இதுகூட இல்லாமல் பூரணமாக மது
விலக்கை நாம் கொண்டு வருவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்
கள் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கூட அழுத்தந்திருத்தமாக
குறிபிட்டார்கள். இந்த மதுவிலக்கை நாங்கள் அரசமைப்புச்சட்டத்
தின் கொள்கைக்கேற்ப கொண்டுவந்திருக்கிறோம். இதனால்
எங்களுக்கு முன்னூற்றுச் சில்லரை கோடி ரூபாய் நட்டம்
ஏற்பட்டிருக்கிறது. இதை ஈடுகட்டுகிற அளவுக்கு, இந்தக் கொள்
கையை நிறைவேற்றவேண்டிய பொறுப்பைக் கொண்ட மத்திய
அரசு, இதற்காக தனி நிதி ஒதுக்க வேண்டும்; அதாவது இந்தக்
கொள்கை முக்கியம் என்று கருதினால் இதற்காக மாநில அரசுக்கு
உதவி செய்ய வேண்டும்; முழுவதுமாக முடியாவிட்டாலும் கூட
ஓரளவுக்கு அதாவது ஒரு குறிப்பிட்ட பங்கு என்ற வகையில்,
குறிப்பிட்ட சதவீதத்தை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக்
கொள்கிற அளவுக்காவது கொண்டு வர வேண்டும் என்று சொன
னார்கள்.



1992 செப்டம்பர் 22] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அண்மையில் நடைபெற்ற 10-வது நிதிக்குழுக் கூட்டத்தில்
கூட, நானும், குஜராத் மாநில அமைச்சரும் எடுத்துச் சொன்
னோம். மதுவிலக்கை, அதாவது அரசமைப்புக் கொள்கை
மூலமாக இந்த நாடு ஏற்றுக் கொண்ட கொள்கையைக் கொண்டு
வந்ததன் காரணமாக இந்த 10-வது நிதிக்குழு இதற்கென்று
தனி நிதி ஒதுக்க வேண்டும் என்று குஜராத் மாநிலத்தைச்
சேர்ந்த நிதியமைச்சர் அவர்களும் வாதிட்டார்கள். தமிழகத்
தின் சார்பாக நானும் வாதிட்டேன். அவ்வாறு இதற்காகக்
கொடுக்கப்படுகிற தன்மை வந்தால் படிப்படியாக முழு மது
விலக்குக் கொள்கையை நிறைவேற்றலாம். நிறைவான முறையில்
கூட நாம் நிறைவேற்ற முடியும்.

இப்போது கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தின்படி
பார்ப்போமேயானால் 1992 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம்
என்று பெயர் பெறுகிற இந்தச் சட்டம் 1992 ஆம் ஆண்டு மே
திங்கள் 12 ஆம் நாள் முதல் அவசரப் பிரகடனத்தின் மூலம்
கொண்டு வரப்பட்டிருக்கின்றது. சட்டமன்றத்தினுடைய
ஒப்புதல் பெற்றுச் சட்டமாக ஆக்க வேண்டும் என்ற
நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தச் சட்ட முன்வடிவு
இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்த
மாநிலத்தில் 1992 மார்ச் மாதத்தில் இந்தியாவில் தயாரிக்கப்
பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனையில் நிலவிய சரி
வைக் கருத்தில் கொண்டும், குறிப்பாக அண்டை மாநிலங்களில்
சாதாரண பிராண்ட் வகைகளின் விலையையும், இந்த மாநிலத்தில்
அவ்வகைகளின் விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையிலும்,
கள்ளச்சாராயப் பழக்கம் அதிகமாகப் பெருகி வந்ததாலும்,
வாடிக்கையாளர்களின் பெரும்பாலோரின் தேவையின் அடிப்
படையைக் கருத்தில் கொண்டும், அண்டை மாநிலங்களில்,
சாதாரண பிராண்ட் வகைகளின் விலைக்கேற்ப இந்த மாநிலத்
தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின்
விலையைச் சீரமைக்க வேண்டிய அவசியம் இந்த மாநிலத்திற்கு
ஏற்பட்டது. அந்த அடிப்படையில்தான், 1937 ஆம் ஆண்டு
தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 18 பி என்ற பிரிவில் 1 ஆம்
உட்பிரிவில் உள்ள ''70 ரூபாய்க்கு மேற்படாமல்'' என்ற சொற்
றொடருக்குப் பதிலாக'' '' 85 ரூபாய்க்கு மேற்படாமல்'' என்ற
சொற்றொடர் அமைக்கப்பட வேண்டும் என்பது இந்த அவசரச்
சட்டத் திருத்தத்தினுடைய நோக்கம். அதைத்தான் இப்போது
நாம் சட்டமாகக் கொண்டு வருகிறோம். 1992 மே திங்கள்
11 ஆம் நாள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது
வகைகள் பலவற்றுக்கும் ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ஆயத்தீர்வை
ரூ.70 என்று ஒரு அளவாக, பொதுவாக விதிக்கப்பட்டு இருந்தது.
அதாவது ரூ.70 வரையிலும் விதிக்கலாம் என்றுதான் சட்டத்தில்
கூறப்பட்டிருந்தது. இப்போது ஏற்பட்டிருக்கிற தன்மைகளைப்
பார்க்கிறபோது, எல்லா வகையான மது பிராண்ட்-க்கும் சேர்த்து
ஒரே விலையில் நிர்ணயித்து இருந்தார்கள். அப்படி ஒரே
விலையில் நிர்ணயித்து இருந்த நிலைமையில் பிற மாநிலங்
களின் தன்மைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது வேறு
பாடு ஏற்பட்டிருந்தது. அவசரச் சட்டத்தின் மூலமாக

என்ன செய்தோம் என்று கேட்டால் முதல் தரம் ப்ரிமியம் பிராண்ட் வகை என்றும், நடுத்தரம் மீடியம் பிராண்ட் வகை என்றும், குறைந்த ரகம் ஆர்டினரி பிராண்ட் வகை என்றும் மூன்றாகப் பிரித்து முதல் ரகமான ப்ரிமியம் பிராண்ட் வகைக்கு ஒரு ஃப்ரூப் லிட்டருக்கு 85 ரூபாய் என்றும், மீடியம் பிராண்டுக்கு ஒரு ஃப்ரூப் லிட்டருக்கு 70 ரூபாய் என்றும், குறைந்த ரகமான ஆர்டினரி பிராண்ட்-க்கு ஒரு ப்ரூஃப் லிட்டருக்கு 40 ரூபாய் என்றும் மூன்று தரமாகப் பிரித்து மூன்றுக்கும் தனித்தனியாக வைக்கும்போது ரூ. 70-ஐ 85 ஆக ஆக்க வேண்டியிருக்கிறது. உச்ச கட்டம் ரூ.70 தான் இருக்க வேண்டும்என்பதற்குப்பதிலாக 'ரூ.85' என்று ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. ஏற்கனவே 70 ரூபாய் ஃப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு என்று எல்லா வகை மதுவகைகளுக்கும் இருந்தபோது வந்த வருமானத்தைவிட இப்போது இந்த மூன்று வகையாகப் பிரித்ததன் காரணமாக, முதல் பிராண்டுக்கு 85 ரூபாய் என்றாக்கி, மீடியம் பிராண்டுக்கு 70 ரூபாய் என்றாக்கி சாதாரண பிராண்டுக்கு 40 ரூபாய் என்றாக்கியதன் மூலம் கூடுதலாக வருமானம் வருகிற நிலையில் தான் இந்த மாநில அரசு இந்த திருத்தத்தைக் கொண்டு வர விரும்புகிறது.

பிற்பகல் 1--00

அதைப்போன்று மற்றொன்று. 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தில் 23பி என்ற புதிய வகைமுறை தெளிவு படுத்தும் பிரிவு திருத்தமாக சட்ட முன்வடிவு மூலமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது பொதுவாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளை விற்பனை செய்வதற்கான உரிமங்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து அடுத்த ஆண்டு மே திங்கள் 31 ஆம் தேதி வரையில் என்று வைத்திருக்கிறோம். சில நேரங்களில் என்ன வாயிற்று என்றால் ஜூன் திங்களைத் தாண்டி உரிமங்கள் வழங்குகிறபோது வெவ்வேறு தேதிகளில், வெவ்வேறு காலங்களில் வருகிறபோது ஓராண்டுக் காலத்திற்கு அந்த லைசென்ஸ் என்கிறபோது ஜூன் திங்களைத் தாண்டி ஜூலை, ஆகஸ்ட் என்றெல்லாம் வந்தது. ஆகவே, அவற்றையெல்லாம் மாற்றி ஒரே நிலைக்குக்கொண்டு வருவதற்காகத்தான் இரண்டாவது திருத்தம் இதிலே கோரப்பட்டிருக்கிறது.

ஜூன் 1 ஆம் தேதி முதல் மே மாதம் 31 ஆம் தேதி வரையில் எல்லா உரிமங்களும் பெறப்படுகின்றன என்ற வகையில் வைத்து, ஒரு இரண்டு மாதம் கழித்து லைசென்ஸ் பெற்றவர்களுக்கு, 10 மாதம் தான் விற்று இருப்பார்கள் என்றால் அந்த 10 மாதத்தில் இரண்டு மாதத்திற்குரிய கட்டணத்தை அவர்களுக்கு திருப்பிக் கொடுத்து விடுவது, அவர்களுடைய உரிமங்களைக் கொண்டு வந்து மே 31 ஆம் தேதியோடு நிறுத்தி, அதன் மூலம் அவற்றையெல்லாம் ஒரே சீராகக் கொண்டு வந்து ஒழுங்குபடுத்துவதற்குத் தான் இரண்டாவது திருத்தம். ஆகவே தான் இந்தத் திருத்தங்களை நிறை



வேற்றி வைப்பதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மதுவிலக்கு கொள்கையை நாங்கள் எல்லாம் முழுமையும் உணர்ந்து இருக்கிறோம் என்பது மட்டுமல்லாமல் அதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் மன்ற உறுப்பினர்களுக்கு எவ்வளவு அக்கறையும், ஆர்வமும் இருக்கிறது என்பதையெல்லாம் நாங்கள் தெரிந்து கொண்டு இருப்பதன் காரணமாக அதை நல்லமுறையில் கொண்டு வருவதற்கு என்னென்ன சீர் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிந்து, அவற்றை அரசு மேற்கொள்கிறபோது இந்த மன்ற உறுப்பினர்களுடைய முழு ஒத்துழைப்பும், ஆதரவும் பெற்றுச் சீரிய யோசனைகளையும் எடுத்துச் சொல்லி, அவர்களும் உடனிருந்து நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களை எல்லாம் கேட்டுக் கொண்டு, இப்போது இந்தத் திருத்தங்களைமட்டும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இலை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி.)

(ஆ) மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) திருத்தச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1992). மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு மூன்றாம் திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1992) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் அ. செல்லக்குமார்..

---

@21-9-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



பிற்பகல் 1-05

*டாக்டர் அ. செல்லக்குமார் ; மாண்புமிகு பேரவைத்
துணை தலைவர் அவர்களே, மனசாட்சிக்கு உட்பட்டு, இந்தச் சட்ட
முன்வடிவை வரவேற்கின்றபோது நான் ஒரு சில கருத்துக்
களை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை நக
ரில், குறிப்பாக என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு உட்
பட்டு இருக்கிற பகுதிகளில் கடந்த சில நாட்களாக, பல்வேறு
மதுபானக் கடைகள், அரசினுடைய மது வகைகளுக்குப் பதி
லாகத் தனியார் தயாரிக்கின்ற போலி மது அங்கே
இரவு நேரங்களில் அனுமதிக்கப்படுகிறது என்பதையும்.....
(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; குறிப்பிட்டுச்
சொல்லுங்கள், எங்கேயாவது அப்படி இருந்தால். (குறுக்கீடு)
மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் குறிப்பிட்ட
குற்றச்சாட்டுக்களைச் சொல்வதாக இருந்தால், இங்கே அனுமதி
பெற்று நீங்கள் பேசலாம். இப்படிப் பொதுவாக நீங்கள் பேசு
வது முறையாக இருக்காது. (குறுக்கீடு). இல்லை, நீங்கள்
சொல்வதைப் பார்த்தால், எல்லா இடங்களிலும் அப்படி இருக்
கிறது என்பது போன்ற பொருள் வரும். இப்படிப் பொது
வான குற்றச்சாட்டுக்களைத் தவிர்ப்பதுதான் நல்லது.

டாக்டர் அ. செல்லக்குமார் : அனுமதிக்கப்படுகிறது என்று
சொல்லுகின்றபோது, அந்தக் கடையினுடைய..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்பு
மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, மனசாட்சியோடு
பேசுகிறேன் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அவர்
கள் மனசாட்சியோடு இப்போது பேசிக்கொண்டு இருக்கி
றாரா ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குறிப்பாக சில இடங்களிலே, அவர்களுடைய தொகுதியிலே
இரவு நேரங்களிலே கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்.
மதுக் கடைகளிலே அனுமதிக்கப்படுகிறது என்று குறிப்பிடுகி
றார். உண்மையிலேயே மனசாட்சியோடு அவர்கள் பேசுகி
றாரா என்பதை மட்டும் இந்தச் சட்டப் பேரவையின் வாயி
லாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே
வேண்டும் என்றே, இதுபோன்ற கருத்துக்களை பல பத்திரிகை
களிலே பேசிக் கொண்டு இருக்கிறார் என்பது நாட்டு மக்களுக்கு
நன்றாகத் தெரியும்.

[1992 செப்டம்பர் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; டாக்டர் செல்லக்குமார்
அவையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டு இருப்பது, தமிழ்
நாடு மதுவிலக்கு மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு. அந்தத்
திருத்தம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டு, அந்தத் திருத்
தத்தின்மீது, அதையொட்டி உங்களுடைய கருத்துக்கள் இருப்
பது நல்லது. ஏற்கெனவே, சென்ற விவாதத்தின் போதும்கூட
நான் அறையிலே இருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.
இதற்குச் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எங்கெங்கோ போய்க்
கொண்டிருக்கிறது விவாதம். மூன்றாவது திருத்தம் என்ன என்
பதைச் சொல்லிவிட்டு, அதன் மீது ஏதாவது கருத்துக்கள் இருந்
தால் பேசுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் ; அனுமதிக்கப்படுகிறது என்று
சொன்னது, அந்தக் கடையினுடைய அதிபர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது மூன்றாவது திருத்
தம். என்ன திருத்தம் விவாதத்திற்கு வருகிறது என்பதை முத
லில் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அந்தத் திருத்தம் இருக்
கிறதே, அதைக் கையிலே வைத்துக் கொண்டால்தான் உங்
களுக்கு அதையொட்டி விவாதத்தில் பேசுவதற்கு சரியாக வரும்.
(குறுக்கீடு). அதைக் கையிலே வைத்துக்கொண்டால்தான் சரி
யாக வரும். அதை விட்டுவிட்டு வேறு எங்கெங்கேயோ பேசிக்
கொண்டிருப்பது நல்லதல்ல.

டாக்டர் அ. செல்லக்குமார் : இந்த அரசினுடைய மது
பான வகைகளுக்குப் பதிலாக, மாற்று வகை, போலி சரக்கு
களை அவர்கள் வியாபாரம் செய்கின்றபோது, அதன் காரண
மாக அரசுக்கு வருகின்ற வருமானத்தில் இழப்பு எற்படுகிறது
என்பதோடு, சமூக விரோதிகளினுடைய கையிலே அந்தப் பணங்
கள் செல்லுகின்ற காரணத்தால், அவர்களோடு ஒன்றுபட்டு
இருக்கிற அந்தச் சமூக விரோதக் கும்பல், அந்தப் பகுதியிலே
வாழ்கிற மக்களுக்கு இடைஞ்சலைத் தருகிற காரணத்தால்,
இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, அதற்
கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்
இதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே பேசு
கின்றபோது, ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று
சொன்னார்கள். ஆதாரத்தோடு சொல்வதற்கு............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1986ஆம் ஆண்டு தமிழ்
நாடு மதுவிலக்குச் சட்டத் திருத்தம் மூன்றாவது திருத்தம்
என்ன என்று பாருங்கள். (குறுக்கீடு).

THIRU S. R. BALASUBRAMONIYAN : 'Loss of Revenue
to the Government', அதைத்தான் சொல்கிறார்.



1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அவர்
சொல்லட்டும் என்கிறேன். (குறுக்கீடு) 'Loss of Revenue to the
Government' என்ன? அதன் மீது பேசுங்கள், (குறுக்கீடு). சரி,
சொல்லுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அந்த பாயின்ட்டுக்குத்தான்
வந்தேன். எந்தெந்தக் கடைகளில், யாருடைய உறுதுணை
யோடு எந்தத் தனி நபர்களுடைய தயாரிப்பிலே இது நடை
பெறுகிறது என்பதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்று
சொன்னால், ஆதாரத்தோடு கொடுப்பதற்கு நான் தயாராக
இருக்கிறேன். ஆனால், இன்றைக்கு நாட்டிலே நடந்து கொண்
டிருக்கிற ஒரு சில பிரச்சினைகளின் காரணமாக, இந்த ஆதாரங்
களைத் தரவேண்டும் என்று சொல்கிறபோது, அரசினிடம்
நான் ஒரு விண்ணப்பத்தை வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.
இந்த சமூக விரோதிக் கும்பல் எந்த அளவுக்கு இன்றைக்குத்
தன்னை எதிர்ப்பவர்களை எப்படி சந்தித்துக் கொண்டிருக்கிறது
என்பது இன்றைக்கு நாட்டு மக்களுக்குத் தெரிந்த உண்மை.
அரசுக்கும் தெரிந்த உண்மை. சட்டமன்ற உறுப்பினர் என்ற
முறையில் இந்தத் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவற்றின் மீது
நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எங்கே தயாரிக்கப்படு
கின்றது, யாருடைய உறுதுணையோடு தயாரிக்கப்படுகின்றது
என்பதை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு எப்போதும் நான்
தயாராக இருக்கிறேன். அதற்கு அரசு எனக்கு தனிப்பட்ட
முறையிலே பாதுகாப்பு கொடுப்பதாக இருந்தால்..........

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்
அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொது வாழ்க்கைக்கு வந்து
விட்ட பிறகு, உயிருக்கு பயந்து இலாபமில்லை. (மேசையைத்
தட்டும் ஒலி). நான் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறேன்.
இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கிறேன். விடுதலைப்
புலிகளைப் பார்த்து நான் பயந்தால் எப்படி ? எனவே, விடு
தலைப்புலிகளின் இயக்கத்தை நான் எதிர்த்தால் என் உயி
ருக்கு ஆபத்து நேருமே என்பதற்காக நான் எதிர்க்காமல்
இருக்கிறேனோ ? அல்லது அதற்கான நடவடிக்கைகளை நான்
எடுக்காமல் இருக்கிறேனா ? அதைப்போலவே மாண்புமிகு
உறுப்பினர் திரு. செல்லக்குமார் அவர்கள் பொது வாழ்க்கைக்கு
வந்துவிட்ட பிறகு, அவர் மக்கள் பிரதிநிதியாக ஒரு சட்டமன்ற
தேர்தலில் நின்று வெற்றி பெற்ற பிறகு, அவருக்கென்று சில
கடமைகள் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டு—இந்த
விவரத்தைச் சொன்னால் எனக்கு ஆபத்து வந்துவிடுமே என்று

பயந்தால் எப்படி ? எனவே, அவருடைய தொகுதியில் போலி
யான மதுபானங்கள் விற்கப்படுகின்றன என்பதை ஒரு குற்றச்
சாட்டாக இங்கே சொன்னார்கள். அதற்கான ஆதாரங்களை
அவர் எடுத்து வைக்கட்டும் எந்தக் கடைகளில் இப்படி விற்
கப்படுகிறது. எந்தக் கும்பலின், எந்த சமூக விரோதக் கும்
பலின் உறுதுணையோடு இது விற்கப்படுகிறது என்பதை அவர்
சொல்லட்டும். அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.
மாண்புமிகு உறுப்பினரின் உயிருக்கும், உடைமைக்கும் தகுந்த
பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த
நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, தமிழகத்துடைய முதலமைச்சர் அவர்கள்
எல்.டி.டி.ஈ. இயக்கத்திற்கு எதிராக எந்த அளவிற்கு தன்னு
டைய உயிரையும் பணயம் வைத்துவிட்டு, பணியாற்றுவதாகச்
சொன்னார்கள். அதை நல்ல முறையிலே உணர்ந்திருக்கின்ற
காரணத்தினாலே, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில்
பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட பிறகு, தன்னுடைய உயிருக்
கும், உடைமைக்கும் பயந்து செயல்படக் கூடாது என்று தெரிந்
திருந்தாலும், முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்
கின்றது. அந்தப் பாதுகாப்புச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
.......

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி
விட்டேன். ஒரு தவறு நடக்கின்றது, ஒரு குற்றம் நடக்கின்றது
என்கிறபோது, அதைத் திருத்த வேண்டியது அரசின் கடமை.
அதைப்போலவே அதற்கான ஆதாரங்களைச் சொல்வது உறுப்
பினரின் கடமை. இப்படி தவறுகள் நடக்கின்றன என்று சொல்
கின்ற சட்டமன்ற உறுப்பினர், எங்கே, எந்தக் கடையில்,
யாரால் நடைபெறுகிறது என்று சொன்னால்தானே, அரசு
தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும். அவர் ஆதாரத்தை முன்
வைக்கட்டும். அவருக்குத் தேவையான முழுப் பாதுகாப்பை
யும் இந்த அரசு அளிக்கும் என்ற உத்தரவாதத்தை மீண்டும்
கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, அதற்கான ஆதாரத்தினை உள்ளபடியே இன்
றைக்கே நான் முதலமைச்சரிடம் எழுத்து மூலமாகத் தனியாகக்
கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஆதாரங்களைக்
கொடுத்து விடுங்கள். ஆனால், நீங்கள் முதலிலே சொன்னது
இதனுடைய நிதி இழப்பீட்டைத்தான் சொல்கிறேன் என்று
சொன்னீர்கள். நிதி இழப்பு இந்தப் பிரச்சினையில் எதில் இருக்
கிறது என்று சொன்னால்—நீங்கள் சில்லரைக் கணக்கைப் போய்
பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.



மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளில் உள்ளவர்கள்
நாட்டில் நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது
கடமை. அவர்கள் கூறுகின்ற தகவல்களின் அடிப்படையில் அரசு
நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமை. ஆரம்பத்திலே
மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் பேசு
கின்றபோது தன்னுடைய தொகுதியில் உள்ள கடைகளில், மதுக்
கடைகளில் போலி மதுபானங்கள் விற்கப்படுகின்றன. அது
அனுமதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அனுமதிக்கப்படு
கிறது என்று சொன்னால், யாரால் அனுமதிக்கப்படுகிறது ?
அரசால் அனுமதிக்கப்படுகிறதா ' அல்லது தனியாரால் அனு
மதிக்கப்படுகிறதா, எனவே, அவர் இத்தகைய ஒரு குற்றச்
சாட்டை இந்த அவையில் கூறுகின்றபோது இத்தகைய வற்
பனை அனுமதிக்கப்படுகிறது என்று கூறுகின்றபோது யாரால்
அனுமதிக்கப்படுகிறது என்று கூற வேண்டும் அல்லவா?

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, முதலில் நான் சொல்கின்றபோது இது இந்தக்
கடைகளினுடைய ஓனர்களால் அனுமதிக்கப்படுகிறது என்றுதான்
நான் சொன்னேன். இதை நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தி
யிருக்கிறேன்.

பிற்பகல் 1—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டத்திருத்தம்
மது மற்றும் கலவை ஆலைகள், பீர் வடிப்பு ஆலை மற்றும்
பண்டக சாலைகளில் ஏற்படும் சில நிதிநிலைமைக்கு ஏற்ப
மாற்றம் போன்றவை குறித்தது ஆகும். அதையொட்டிப்
பேசுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அதையொட்டித்தான்
பேசிக் கொண்டிருக்கிறேன். அரசினுடைய வருமானம் இழப்பு
வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்லிக் கொண்
டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடிசாலைகள், கலவை
ஆலைகள் ஆகியவற்றில் ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு 16 ரூபாய்
என்ற வீதத்திற்கு மேற்படாமல் செய்வதைக் கண்காணிப்பதற்கு
உரிய சட்டத் திருத்தம். அதிலே சில தவறுகள் இருக்கின்றன,
இப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்றெல்லாம் தகவல்
இருந்தால் அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : அதைத்தான் சொல்லிக்
கொண்டிருக்கிறேன்.

[1992 செப்டம்பர் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நினைவுபடுத்தினேன். சில நேரங்களிலே என்ன சட்டத் திருத்தத்தைப்பற்றி விவாதிக்கிறோம் என்று தெரியாமலேயே விவாதம் போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது குறைகள் இருக்கின்றன குற்றங்கள் நிகழ்கின்றன என்று சொல்லியபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதைச் சுட்டிக் காட்டுங்கள், சுட்டிக் காட்டினால் தானே நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும், சுட்டிக் காட்டுகிற உரிமை கடமை உங்களுக்கு இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுக்கிற உரிமை அரசுக்கு இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அது பற்றிய குறைகள் இருக்கலாம் குற்றங்கள் இருக்கலாம் அதைச் சுட்டிக் காட்டுங்கள், இங்கே சுட்டிக் காட்ட முடியாவிட்டாலும் கூட தனியாக எழுத்து மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தாருங்கள். ஆகவே அப்படி சுட்டிக்காட்டாமல் நீங்கள் சொல்லிவிட்டு போய் விடுவீர்களேயானால் சொல்கிற உறுப்பினர்களுக்கும் பலன் இருக்காது. அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆகவேதான் ஆதாரத்தோடு சுட்டிக்காட்டுவது அவசியம். இங்கேயே சொல்ல வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு சட்டத்திருத்தத்திற்கு வரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லுகிறபோது முதலமைச்சரைப் பார்த்து எழுத்து மூலமாக கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியினுடைய அருகாமை என்பது சென்னை மாவட்டத்தினுடைய காவல் துறைக்கு அப்பாற்பட்டு செங்கல்பட்டு மாவட்டத்தினுடைய காவல் துறை ஜூரிஸ்டிக்ஷனை சேர்ந்திருக்கிறது. அரும்பாக்கம் போன்ற பகுதிகளில், சூளைமேடு போன்ற பகுதிகளில் பல்வேறு இடங்களில் கள்ளச் சாராய விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. அதனை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகிறேன். ('குறுக்கீடுகள்).



1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒட்டு மொத்த மாக கள்ளச் சாராய விற்பனை, உங்களுடைய பகுதியிலே விற்கக் கூடிய சிறு கடைகளுடைய வியாபாரம் போன்ற எல்லாவற்றையும் இந்த விவாதத்திலே பேசிக்கொண்டு போனால், இந்த பில் முடியாது. நான் உங்களுக்குத் திரும்ப நினைவுபடுத்தினேன். இந்த பில் என்ன என்பதைச் சொன்னேன். இந்த பில்லை உங்களுடைய கையிலே முதலிலே வைத்திருக்கிறீர்களா? அதை வைத்துக்கொண்டு பேசுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாத் தகவல் களையும் இந்த நேரத்திலே சொல்லக் கூடாது. இந்த பில் மீது உங்களுடைய கருத்தைச் சொல்லி, அதையொட்டி மற்ற மற்றக் கருத்துக்கள் வரலாம். அதற்கு அப்பாற்பட்டுப் போகக்கூடாது.

டாக்டர் அ. செல்லக்குமார் : பில்லோடு ஒட்டி வருகிற ஒரு பிரச்சினை. அந்தப் பகுதியிலே நடந்து வருகிற ஒரு பிரச்சினையைப் பற்றி சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். அந்தப் பகுதியினுடைய காவல் துறையினரை அணுகி பல்வேறு முறைகளிலே நான் தெரியப்படுத்தி இருக்கிறேன். ஆனால் அவர்கள் சொல்லுகிற ஒரு காரணம் என்னவென்று சொன்னால் எங்களுடைய ஜூரிஸ்டிக்ஷனுக்கு அப்பாற்பட்டு அது சென்று விடுகிற காரணத்தாலே அவர்களை நேரில் சென்று கைது செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரவாயில் போன்ற பகுதிகளில் திருமங்கலம் போன்ற பகுதிகளில் காய்ச்சுகிறார்கள். அது என்னுடைய தொகுதியினுடைய மக்களை குடிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றன என்ற காரணத்தாலே அரசினுடைய கவனத்திற்கு வர வேண்டும் என்பதற்காக நான் இதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைச் சொல்லி, யாரால் அரசினுடைய வருமானம் இழப்பு ஏற்படுகிறது, யார் யார் தவறான வழிகளில் செல்லுகிறார்கள் என்பதை முதலமைச்சருக்கு நான் எழுத்து மூலமாக தெரிவிப்பதற்கு நிச்சயமாக பொறுப்பு ஏற்பேன் என்று சொல்லி, மனசாட்சியோடு இந்த பில்லை வரவேற்று நான் அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சிவசுப்பிரமணியன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு [illegible] திருத்த சட்ட முன்வடிவிலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு

முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பிறகு தமிழகத்திலே மதுவிலக்கு எந்த அளவிற்கு நல்ல முறையிலே தமிழகத்தினுடைய காவல் துறையில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நாடு அறியும். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற காவல் துறையின் மூலமாக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளுக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும் ஆங்காங்கே இருக்கிற பொதுமக்களும் அளிக்கின்ற ஆதரவின் மூலமாகத்தான் அது நல்ல முறையிலே நல்ல நடவடிக்கைகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு தீவிரமாகச் செயல்படுத்த முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். குடிக்கச் சொல்லியே இந்த நாட்டிற்கு முதன் முதல் அறிமுகப்படுத்தியவர் இந்த நாட்டை ஆண்ட கருணாநிதி என்பதை இந்த நாடு அறியும்.

பிற்பகல் 1-20

அதற்கு பின்னால் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும், இன்றைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும் எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகள், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல இன்றைக்கு எந்த அளவிற்கு நாங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இந்த நாடு நன்கு அறிந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற காவல்துறையும், அதற்கு ஒத்துழைப்பு தருகின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களும், ஆங்காங்கு இருக்கின்ற பொதுமக்களும் காவல்துறைக்கு அவ்வப்போது தருகின்ற தகவலை பொறுத்துத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் அவ்வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகள் மூலமாகத்தான் இன்றைக்கு குடாவிலே பல பேர்களை உள்ளே வைத்திருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, நம்முடைய காவல்துறை எவ்வளவு கண்காணிப்போடு செயல்பட்டு வருகிறது என்பதை அதை நல்ல முறையிலே உணர்ந்தவர்கள் அறிவார்கள். ஆனால் இன்றைக்கு ரூ. 340 கோடி நமக்கு இழப்பு ஏற்பட்டால் கூட பரவாயில்லை என்று சொல்லி நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு தமிழகத்திலே ''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்'' என்று சொல்லிய பேரறிஞர் அண்ணா வழியிலே வந்த புரட்சித் தலைவி அவர்கள் அதைச் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு



மத்திய அரசினுடைய உதவியை நாடியும் கூட, அவர்கள் செவிசாய்க்காத நேரத்திலும் அதை நல்ல முறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரி மாநிலம் நம்முடைய பக்கத்து மாநிலமாக இருப்பதால் அந்த மாநிலத்தின் மூலமாக கடத்தல் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அதையெல்லாம் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து நம்முடைய மாநில அரசு காவல்துறை மூலமாக அதை நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலையில் தான் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய நிதிநிலையில் நெருக்கடி இருந்தாலும் பல்வேறுபட்ட சூழ்நிலையில் நம்முடைய அரசு நல்ல பல காரியங்களை, இப்படி திட்டமிட்டு திருடுகிற கூட்டம் சதித் திட்டங்களைத் தீட்டி திருடிக்கொண்டிருந்தாலும் அதை சட்டத்தின் வாயிலாக நம்முடைய அரசு தட்டிக் கேட்டு அதை தடை செய்து கொண்டு வருகிறது. ஆகவே திருடனாய் பார்த்து திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதைப் போல, இன்றைக்கு குடிப்பவனாய் பார்த்து திருந்தாவிட்டால் குடியை ஒழிக்க முடியாது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிக்கவும் முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு தமிழக அரசு புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே நல்ல முறையிலே, சீரிய முறையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு அதைப் பார்த்து அதற்காக இன்னல்களை உருவாக்க வேண்டும். இடர்பாடுகளை உருவாக்க வேண்டும் என்பதற்காக பல பேர்கள் சதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவை எல்லாம் எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய அரசிலே எடுபடாது என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு இந்தச் சட்டத்திருத்தத்தை நன்றாகப் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

*திரு. எச்.எம். ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நல்ல வகையிலே இந்த அவைக்கு அவருடைய கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். இருந்தாலும்கூட 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 48/1992-ல், நான் இந்தச் சட்டத்திருத்தத்தை வரவேற்பதுடன் மதுவிலக்கு பற்றி கூறும்போதெல்லாம் ஒருசில கருத்துக்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கூறத்தான் செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ஒட்டி வர வேண்டும்.

திரு. எச்.எம். ராஜு : அதை ஓட்டினாற்போல் நான் பேசுகிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் மதுவிலக்குச் சட்டத்தில் எந்த ஒரு சிறு குற்றத்திற்கும் கூட,.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வடிசாலைகள், கலவை ஆலைகள் அங்கே நடக்கிற விஷயங்களாக இருக்க வேண்டும்.

திரு. எச்.எம். ராஜு : ஒரு தண்டனை கண்டிப்பாக நாம் கொடுத்தால் தான் நன்றாக இருக்கும். குற்றவாளிகளை மூன்று மாதம் சிறைச்சாலைக்கு அனுப்பினால்தான் அவர்களைத் திருத்த முடியும். அதே மாதிரி ட்ரான்ஸ்போர்ட் செய்பவர்கள் எல்லாம் ஏழைகள் அல்ல. அவர்களுக்கு எல்லாம் அந்தச் சட்டத்தைக் கடுமையாக்கி தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல, சட்டப்பிரிவு 4(1)-ஏ போன்றவைகள் ஜாமீனில் விடாமல் நான்-பெய்லபிள் செக்ஷன்ஸ்களாக மாற்றினால் கண்டிப்பாக நல்ல முறையிலே இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்த முடியும். மேலும் ஏற்கனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு மூலமாக நம்முடைய அரசின் மூலமாக எடுக்கும் சினிமா, ட்ராமாக்கள் போன்றவைகள் 'வெளிச்சம்', ''நீங்க நல்லா இருக்கணும்'' போன்றவைகள் எல்லாம் கிராம மக்களிடையே தெளிவாக அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வீடியோ, ஆடியோ மூலமாகக் காட்டப்பட வேண்டும். அதிகமாக வாங்கும் அபராதத் தொகை எல்லாம் இந்தத் தீவிர பிரசாரத்திற்காக உபயோகப் படுத்த வேண்டும். மக்களுடைய விழிப்புணர்ச்சியின் மூலமாகத்தான் இதை நல்லமுறையில் கொண்டு வரமுடியும். பலகோடி ரூபாய் இழப்பாக இருந்தாலும் கூட நாளடைவில் நாட்டு மக்கள் நன்றாக இருக்கும் வகையில் மதுவிலக்கை நாம் அமல் செய்யவேண்டும். குஜராத் மாநிலத்தில் எவ்வாறு நல்ல வகையில் செயல்படுகிறதோ அதேமாதிரி தமிழ்நாட்டில் செயல்பட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு குழுவை அமைத்து மாண்புமிகு அமைச்சர்களையும், சில சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தக் குழுவில் இடம்பெறச் செய்து இந்த நிதி இழப்பை எவ்வாறு சரிக் கட்டமுடியும் என்ற வகையில் அந்தக் குழு ஒரு நல்ல முடிவை எடுத்தால் நாளடைவில் நம்முடைய தமிழ்நாட்டை இந்தியாவில் ஒரு முதல் மாநிலமாக மது விலக்கில் நிறுத்தலாம் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை என்று கூறிக்கொண்டு இந்த சட்டமுன்வடிவு திருத் தத்திலே பேச அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள்.



*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தில் தொழிற்சாலைக்கான சாராவி 'இண்டஸ்ட்டிரியல் ஆல்ககால்' சேதாரம் அல்லது அளவு குறைப்பதற்கான வரம்பினை வகுத்துரைப்பதற்கும், வகுத் துரைக்கப்பட்ட வரம்புக்கு எட்டாமல் சேதாரமோ அல்லது குறைவோ எவ்வளவு காட்டப்படுகிறதோ அந்த அளவுக்கு ஆயத் தீர்வையை இரு மடங்கு பணத் தண்டனையைச் செலுத்தவேண்டும் என்பதற்கு 1937-வது ஆண்டு சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் தொழிற்சாலைக் கான சாராவியின் மீது ஆயத்தீர்வை வாங்கும் உரிமை இந்திய அரசாங்கத்திற்குத்தான் உண்டே தவிர மாநில அரசுக்கு தொழிற்சாலைக்கான சாராவியின் மீது ஆயத் தீர்வையை விதிக்கும் உரிமை இல்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அதன் விளைவாக மாநில அரசுக்கு அதனுடைய ஆதாயம் வர வேண்டும் என்பதற்காக 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் முதற் கொண்டு ஆயத் தீர்வையை 2 மடங்கு பணத் தண்டனையாக தர வேண்டும் என்று சொல்வதற்கு பதிலாக கட்டணம் இரு மடங்கு என்று ஆயத் தீர்வை என்ற சொல்லை போட்டால் தான் அது மத்திய அரசாங்கத்தைச் சேரும் என்று சொல்லி, கட்டணம் இரு மடங்கு அதாவது ப்ரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 16 என்ற அளவுக்கு மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் மாற்றம் செய்யப்பட்டதே தவிர நடை முறையில் கொண்டு வரப்படவில்லை. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளிலிருந்து இந்தத் திருத்தத்தை கொண்டு வந்து விட்டோமே சட்டத்திலே அதற்கு இடம் செய்ய 1986 ஆம் ஆண்டு அதனைச் சட்டத்திலே இடம் பெறும்படியாக செய்யப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ரூல்ஸ் ஆண்டு ரெகுலேஷன் செய்யப்பட்டு விட்டன சட்டத் திலே இடம் தராததன் காரணமாக சில பேர் 1981 ஆம் ஆண்டுக்கும் 1986 ஆம் ஆண்டுக்கும் இடையிலே உரிமம் பெற்ற வர்கள் இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது என்று நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். ஆகவே இந்த திருத்தத்தினுடைய நோக்கம் 1986 ஆம் ஆண்டு விதிக் கப்பட்ட சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக் கிறோம். என்ன திருத்தம் என்று சொன்னால் 1981 ஆம் ஆண்டிலிருந்தே இது நடைமுறைக்கு வரும் என்று முன் ஏற்பு தந்து ரெட்டிராஸ்பெக்டிவ் எப்பக்ட் கொடுத்துக் கொண்டு வரு கிறோம். இதனால் வழக்கு மன்றத்தில் இருக்கிற வழக்குகள் எல்லாம் நமக்கு சாதகமாக ஆகி அரசாங்கத்தினுடைய நோக் கம் நிறைவேறும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பினுடைய அடிப்படையில் சட்டங் கள் வகுக்கப்பட்டன. ஆனால் சட்டத்திலே இடம் பெறவில்லை சட்டத்திலே இடம் பெறுவதற்கு 1981 ஆம் ஆண்டு ஒரு

திருத்தம் கொண்டு வந்தோம். 1981க்கும் 1986க்கும் இடையில் இருக்கிற காலத்திலே அதை நடைமுறைப் படுத்துவதற்கு வழி இல்லாத காரணத்தால் தான் இப்போது கொண்டு வந்திருக்கிற சட்டம் 1981 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப் படுத்தலாம் என்ற அளவுக்கு அதிகாரத்தைக் கொடுப்பது ஆகும் ஆகவே, இந்த திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்ட முன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–30

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாம் திருத்த திருத்தச் சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–9–1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.31 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. சென்னை-42, வேளச்சேரி சமூக தொண்டு நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.எஸ். என் 333 பதிவு எண். கொண்ட மோட்டார் வாகனம் தொண்டு நோக்கத்திற்காக பயன்படுத்தும் வரை அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சாதாரண வரி விகிதத்திலிருந்து நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போ.) துறையின் 16–7–1992 ஆம் நாளிட்ட 1143 ஆம்

1992 செப்டம்பர் 22]

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

71. கோவை, எலிடா குழந்தைகள் இல்லத்திற்கு சொந்தமான டி.என். 37/பி 599 பதிவு எண் கொண்ட மோட்டார் வாகனம் தொண்டு நோக்கத்திற்காக பயன் படுத்தும் வரை, அந்நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சாதாரண வரி விகிதத்திலிருந்து நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போ) துறையின் 16-7-1991 ஆம் நாளிட்ட 1138 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

72. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 31-3-1991 ஆம் ஆண்டு முடியவுள்ள காலவரைக்கான அறிக்கை (எண் 1) (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

73. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான இருபத்தோராவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

74. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 19-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

75. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.) (தமிழ்).

76. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

8. 1992 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (எழுபத்தாறாவது திருத்த) சட்ட முன் வடிவு மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு.



[1992 செப்டம்பர் 22

9. 1992 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (எழுபத்தாறாவது திருத்த) சட்டமுன் வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்றவாறு).

10. 7-5-1992 ஆம் நாளன்று இச்சட்ட முன் வடிவின் மீது மக்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

11. 29-4-1992 ஆம் நாளன்று இச்சட்ட முன் வடிவின் மீது மாநிலங்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

12. 12-5-1992 ஆம் நாளன்று இச்சட்ட முன்வடிவின் மீது மாநிலங்களவையில் நடைபெற்ற நடவடிக்கைக் குறிப்புகள்.

13. 1992-93 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

14. 1992-93 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

15. 1992-93 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

16. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை, 1992-93.

17. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஆறாவது அறிக்கை, 1992-93.

18. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஏழாவது அறிக்கை, 1992-93.

19. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி எட்டாவது அறிக்கை, 1992-93.

20. பொதுக் கணக்குக் குழுவின் எழுபத்தி ஒன்பதாவது அறிக்கை, 1992-93.

21. பொதுக் கணக்குக் குழுவின் எண்பதாவது அறிக்கை, 1992-93.

22. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி ஒன்றாவது அறிக்கை, 1992-93.

23. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தி இரண்டாவது அறிக்கை, 1992-93.

164947